Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 17 சனிக்கிழமை (02.08.2014) பக்கங்கள் 20 ஓசை –305

## அரோகரா கோஷம் விண்அதிர நல்லூரானுக்கு ஏறியது கொடி

### அமைச்சர் டக்ளஸும் பங்கேற்பு



(யாழ்ப்பாணம்)

பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோஷம் விண்ணைப் பிளக்க நேற்று முற்பகல் 10.00 மணிக்கு நல்லூரானுக்கு கொடியேற்றம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

நேற்றைய கொடியேற்றத் திருவிழாவில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா சிறப்புப் பூசை வழிபாடுகளிலும் பங்கேற்றிருந்தார்.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்ட திருவிழாவில் வெளிநாடுகளைச் சேர்ந்த

(19) ஆம் பக்கம் பார்க்க

## வெள்ளைக் கொடிகளுடன் வந்தாலும் இந்திய மீனவர்கள் கைதாவர்

### கடற்படை தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய மத்திய மற்றும் மாநில அரசுகள் தமிழக மீனவர்களின் கோரிக்கைகளை செவிமடுத்து தீர்மானம் மேற்கொள்ளாவிட்டால் வெள்ளைக் கொடிகளுடன் இலங்கை கடல் எல்லைக்குள் பிரவேசிப்பது உறுதி என தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 8 நாட்களாக இராமேஸ்வரத்தில் முன்னெடுத்து வருகின்ற வேலைநிறுத்தப் போராட்டத்தின் அடுத்தகட்ட நகர்வாக கச்சதீவை நோக்கி சுமார் 2,000 படகுகளில் தமிழக மீனவர்கள் இன்றைய தினம் வரவுள்ளதாக தமிழக கடலோர விசைப்படகு நலச் சங்கத்தின் ஆலோசகர் என்.தேவதாசன் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசிக்கவுள்ளமை தொடர்பில் கடற்படை பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவிக்கையில்,

நாட்டின் கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசிக்கும் அனைவரும் நிச்சயம் கைது செய்யப்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

### அமெரிக்க தூதரக அறிக்கையை

# வெளிவிவகார அமைச்சே நிராகரித்திருக்க வேண்டும்



### என்கிறார் இராஜதந்திரி தயான் ஜயதிலக

(கொழும்பு)

குற்றச்செயல்களுக்கு பொறுப்புக்கூற இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அமெரிக்கத் தூதரகம் அண்மையில் தெரிவித்த குற்றச்சாட்டுக்கு, பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட மறுப்பு விவேகமற்ற செயல் என்று முன்னாள் இராஜதந்திரி கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அல்லது அமெரிக்கத் தூதரகத்தின் கருத்தை வெளிவிவகார அமைச்சே மறுத்திருக்க வேண்டும்.

அவ்வாறு மறுக்கக்கூடாது என்று வெளிவிவகார அமைச்சு கருதும் பட்சத்தில், இன்னொரு அமைச்சு அத்தகைய மறுப்பை அதிகாரபூர்வமாக வெளியிட்டிருக்கக்கூடாது.

அரசாங்க ஊடகம் ஒன்றில் ஆசிரியர் கருத்தில் அதனை குறிப்பிட்டாலே போதுமானது.

பாகிஸ்தான் நீண்டகாலம் இராணுவ ஆட்சியில் இருந்த போதும் கூட, இன்னொரு நாட்டுக்குப் பதிலளிக்கும் வகையில், இத்தகைய அறிக்கைகள் வெளிவந்ததில்லை.

இதுபோன்ற விவகாரங்கள், வெளிவிவகார அமைச்சிடமே விடப்பட்டன.

இராணுவம் மீது நேரடியான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும் சூழ்நிலையின் போதே, அனைத்துலக விவகாரங்களுக்கு இராணுவப் பேச்சாளர் பதிலளிக்கலாம்.

உதாரணத்துக்கு, தென்கொரிய விமானத்தை சுட்டுவீழ்த்தினர் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டபோது சோவியத் ஜெனரல் நிகொலய் ஒர்காகோவ் செய்தியாளர் மாநாட்டை நடத்தினார்.

தூதரகங்களின் அறிக்கையை பாதுகாப்பு அமைச்சு அல்லது சீருடையணிந்த அதிகாரிகள் மறுப்பது, இராணுவ சர்வாதிகார ஆட்சியின் போது மட்டுமே நடக்கின்ற விடயம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### ஜெயலலிதா குறித்த சர்ச்சைக்குரிய கட்டுரை வெளியீடு

## நிபந்தனையற்ற மன்னிப்பு கோரியது பாதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கடிதங்கள் எழுதுவதை தரம் தாழ்ந்து விமர்சித்து இலங்கை பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட கட்டுரைக்கு அவ்வமைச்சு இந்தியாவிடம் நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரியுள்ளது.

இந்தக் கட்டுரையானது இலங்கை பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினதோ அல்லது இலங்கை அரசினதோ உத்தியோகபூர்வ நிலைப்பாடு அல்ல. அதனை வெளியிடுவதற்கான அங்கீகாரம் அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படவில்லை.

இதனால், அந்தச் செய்தி இந்த இணையத்தளத்திலிருந்து அகற்றப்பட்டது என்றும் அவ்வமைச்சின் நிபந்தனையற்ற மன்னிப்பு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தக் கட்டுரையை வெளியிட்டமைக்காக இந்தியப் பிரதமரிடமும் தமிழக

(19) ஆம் பக்கம் பார்க்க

### சிகிச்சைக்குச் சென்ற யுவதியைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்குச் சென்ற யுவதியைக் காணவில்லையென யாழ்ப்பாண பொலிஸ நிலையத்தில் உறவினர்களால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கொழும்புத் துறையைச் சேர்ந்த துரைசிங்கம் ஜெயவர்ணா (வயது - 24) என்பவரே காணாமற்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த புதன்கிழமை சிகிச்சைக்குச்

(19) ஆம் பக்கம் பார்க்க

## நல்லூரில் சங்கிலி அறுத்த இளைஞன் சிக்கினார்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நிலையில், ஆலய உள்வீதியில் நின்றிருந்த வயோதிபப் பெண்ணொருவரின் கழுத்திலிருந்த சங்கிலியினை அறுத்த இளைஞனைக் கைதுசெய்ததாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

பெண்ணின் 4 பவுண் சங்கிலியினை மேற்படி சந்தேகநபர் அறுத்துக்கொண்டு தப்பிச் செல்ல முற்பட்ட வேளையில் அங்கு சிவில் உடையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இளைஞனைக் கைதுசெய்தனர்.

மேற்படி சந்தேகநபர் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.


## இலங்கையில் "எபோல" வைரஸ் பரவும் சாத்தியம் குறைவு

### வைத்தியர் பிரபா பலிகவதன தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலாப்பயணி ஒருவர் பயங்கரமான எபோல வைரஸை கொண்டுவரும் வாய்ப்பு மிக அரிதானது எனக்கருதும் அரசாங்க நோய்ப் பரம்பரையியல் அலகின் பணிப்பாளர் வைத்தியர் பிரபா பலிகவதன, எபோல இங்கு காணப்படுமிடத்து அதனைக் கையாளும் ஆற்றல் இலங்கைக்கு உண்டென தெரிவித்துள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க




## உயர்தரப் பரீட்சையில் 3 இலட்சம் பரீட்சார்த்திகள்

(கொழும்பு)

நடைபெறவுள்ள கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சைக்காக 2 இலட்சத்து 96 ஆயிரத்து 313 பேர் விண்ணப்பித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என். ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைகள் நாடளாவிய ரீதியாகவுள்ள 2 ஆயிரத்து 120 மத்திய நிலையங்களில் நடத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பரீட்சைக்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# யுத்த காலத்தில் பொதுமக்கள் இழந்தவற்றை அமைச்சர் டக்ளஸ் காலத்தில் மீளப்பெறலாம்

## ஆசிரியர் நாக.தமிழிந்திரன் பேச்சு



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் தான் யுத்த காலத்தில் மக்களால் இழந்தவற்றை ஈடுசெய்து கொள்ள முடியுமென யாழ். மத்திய கல்லூரியின் ஆசிரியர் நாக.தமிழிந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மத்திய கல்லூரியின் நிறுவுனர் தினமும், 198 ஆவது ஆண்டு நிறைவும் நேற்று இடம் பெற்றன இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 90 களில் இக்கல்லூரி பெரும் பாதிப்பை சந்தித்திருந்தது.

இந்நிலையில் 1996 ஆம் ஆண்டு இக்கல்லூரிக்கு காலஞ் சென்ற இராஜதுரை அதிபராக நியமிக்கப்பட்டதன் பின்னர் பாதிப்படைந்த கட்டடங்கள் மீள் திருத்தம் செய்யப்பட்டும், புதுக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டும் புதுப்பொலிவு பெற்றது.

அக்காலப் பகுதியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இக் கல்லூரியில் மகேஸ்வரி கணணி வள நிலையத்தை அமைத்து அதனைத் திறந்து வைத்தார்.

அதன்மூலம் இக்கல்லூரி மாணவர்கள் மட்டுமல்லாது ஏனைய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் கணனிக் கல்வியைப் பெற்றுக் கொள்ளக் கூடியதான வாய்ப்பை வழங்கி வைத்தார் என்றும், அதன்பொருட்டு இக்கல்லூரி மட்டுமல்லாது ஏனைய பாடசாலைகளின் கல்வித்துறை மேம்பாட்டுக்காகவும் அயராது உழைப்பவர் அமைச்சர் என்றும் தெரிவித்தார்.

இம் மாவட்டத்தின் கணணி மட்டுமல்லாது ஏனைய ஒவ்வொரு கல்வித்துறைகளையும் மேம்படுத்தி விருத்தி செய்வதற்கு அமைச்சர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார் என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், எமது மக்கள் உண்மையை அறிந்து கொள்ளும் பொருட்டு விழிப்பாக இருக்க வேண்டும் அதன் மூலமே எதிர்காலங்களிலும் எமது கல்விசார் நடவடிக்கைகளாலும் ஏனைய துறைகளாலும் மக்கள் மேம்பாடுகளைக் காண முடியும்.

சேவை செய்பவர்களுக்கே மக்கள் தமது முழுமையான பங்களிப்பை வழங்கும் பட்சத்திலேயே இவ்வாறான மேம்பாடுகளை நாம் காண முடியும்.

இந்நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது தலைமையில்தான் மக்கள் இழந்தவற்றை மீண்டும் ஈடு செய்து கொள்ள முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

## நிழல் கொட்டகை இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தியில் பேருந்து பயணிகள் நன்மை கருதி நிழல் கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அமரர்களான தாதபிள்ளை தங்கம்மா தம்பதியர் மற்றும் அமரர் சி.குணரட்ணம் ஞாபகார்த்தமாக அவர்களது பேரன் உலக்ஷ்மனால் அமைக்கப்பட்டு அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ள மேற்படி பேருந்து நிழல் கொட்டகை இன்று நண்பகல் 12.00 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிழற்குடை 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் அமைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

## திருவுருவச் சிலை திறப்பு விழா

யாழ். மடத்தடியில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் திருவுருவச் சிலை திறப்பு விழா அவரது 101 ஆவது பிறந்த தினமாகிய இன்று பிற்பகல் 4.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

சிலை திறப்பு விழாவைத் தொடர்ந்து திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மணிமண்டபத்தில் நினைவுரைகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெறும். தனிநாயகம் அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர் வணக்கம் செலுத்த விரும்புவோர் மாலை 5.00 மணிக்கு நிகழ்வில் பங்கேற்று மலர் வணக்கம் செய்யமுடியும் என நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# இன்றைய நிகழ்வுகள்

## குருத்துவ திருநிலைப்படுத்தல்

(ஆனைக்கோட்டை)

இறைவனின் ஒளியில், இஞ்ஞாசியாரின் வழியில், இறை பணியில் இணையும் கில்பார்ட் பணிக்குருத்துவப்படுத்தல் நிகழ்வு யாழ்.ஆயர் அதி வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையினால் ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி ஆலயத்தில் இன்று காலை 10.00 மணிக்கு நடை பெறவுள்ளது.

நாளை காலை 7.00 மணிக்கு புதிய குருவானவர் நன்றித் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார். இந்நிகழ்வில் கலந்துகொண்டு இறைவனைப் புகழ இயேசு சபையினரும், குடும்பத்தினரும் மகிழ்ச்சியோடும், அன்போடும் அழைக்கின்றனர். (85)

## அதிஷ்டலாப சீட்டிழுப்பு

(கிளிநொச்சி)

அமரர் பொன் சபாபதி நிதியத்தின் ஏற்பாட்டில் நினைவு நிகழ்வும், அதிஷ்டலாபச் சீட்டிழுப்பும், பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பு நிகழ்வும் இன்று பிற்பகல் 2.45 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நிதியத் தலைவர் இ.ஜெயசுதர்சன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வவுனியா மருத்துவ அத்தியட்சகர் த.சத்தியமூர்த்தி, கிளிநொச்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி), சு.ஸ்ரீகுமரன், முல்லைத்தீவு பிரதி கல்விப் பணிப்பாளர் நா.ஆதவன், வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் திருமதி கு.கோசலை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (112)

## 55 ஆவது ஆண்டு நிறைவு விழா

கைதடி மத்திய வளர்மதி சனசமூக நிலையத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று மாலை 6.30 மணிக்கு வளர்மதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் எஸ்.சிவலிங்கம் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.கைதடி விக்னேஸ்வர வித்தியாலய அதிபர் சு.சிவானந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக பனை அபிவிருத்திச் சபை தலைவர் பசுபதி சீவரத்தினம், சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யு.ஏ.ஜே.டி.வன்னியராச்சி, உதவிக் கல்விப் பணிபாளர் தி.உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில், காலை வடமாகாண சைக்கிள் ஓட்டப் போட்டியும், அதனைத் தொடர்ந்து காலை 10.30 மணிக்கு இரத்ததான நிகழ்வும் இடம்பெறும்.

## மாதகலில் மக்கள் சந்திப்பு

மாதகல் காந்திஜி சனசமூக நிலையத்தில் இன்று மாலை 3.00 மணியளவில் விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்ட மக்கள் சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் விசேட உரையாற்றவுள்ளார்.

ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிரதேச அமைப்பாளரும், மானிப்பாய் பிரதேசசபையின் எதிர்க் கட்சி உறுப்பினருமான வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா), மற்றும் மேற்படி நிலையத்தின் பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## மலர் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 'இந்து இளைஞன்' பவள விழா மலர் வெளியீட்டு நிகழ்வு இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் வீ.கணேசராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி த.பேரானந்தராஜா கலந்து கொளவார். நூல் வெளியீட்டுரையை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் நா.மகேந்திரராஜா நிகழ்த்துவார். முதல் பிரதியை யாழ்.போதனா வைத்தியசாலை இதய நோய் சிகிச்சை நிபுணர் ம.குருபரன் பெற்றுக் கொள்வார்.


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1079

திகதி 31.07.2014

வெற்றி எண்கள்: 10 13 22 40

ஆங்கில எழுத்து: U

ஜக்பொட் பரிசு ரூ. 3,50,52,180/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,50,52,180/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 9 | 50,000/= | ரூ. 4,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 264 | 1,000/= | ரூ. 2,64,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 453 | 1,000/= | ரூ. 4,53,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11404 | 60/= | ரூ. 6,84,240/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5987 | 40/= | ரூ. 2,39,480/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 150018 | 20/= | ரூ. 30,00,360/= |
| ஆங்கில எழுத்து | 21833 | 20/= | ரூ. 4,36,660/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 65,27,740/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 35,345,680/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.07.27 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3733)


## சுண்டல் வண்டி ஏலம் கூறல்

(யாழ்ப்பாணம்)

நடைபெற்றுக் கொண்டிருக்கும் வருடாந்த நல்லூர் உற்சவ காலத்துக்கான சுண்டல் வியாபார வண்டிகளுக்கான ஏலம் கூறல் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை மாநகரசபையில் இடம்பெறும் என யாழ்.மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்தார்.

## முன்பள்ளி விளையாட்டு விழா

(புத்தூர்)

புத்தூர் கிழக்கு சரஸ்வதி முன்பள்ளி மழலைகளின் வருடாந்த விளையாட்டு விழா நாளை பிற்பகல் ஒரு மணிக்கு சரஸ்வதி சன சமூக நிலையத் தலைவர் சி.தவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில், ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) பிரதம விருந்தினராகவும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளரும், வலி.கிழக்கு பிரதேசசபையின் எதிர்க் கட்சித் தலைவருமான இ.ஐங்கரன், அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயசிங்க, புத்தூர் கிழக்கு கிராம அலுவலர் வி.கோபாலதாஸ், புத்தூர் பஞ்ஞசீக வித்தியாலய அதிபர் திருமதி கணேசானந்தன் சிவரஞ்சினி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (08)


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் ரீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3395)

# காந்தீய வழியில் தொண்டாற்றியவர் அமரர் மில்க்வைற் கனகராசா

## காந்தீயம் ஆசிரியர் ஷாந்தன் சத்தியகீர்த்தி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"காந்திய வழியில் சமூக சேவை செய்த பெருமகன் மில்க்வைற் கனகராசா இவர் காந்திய வழிமுறையைக் கைக்கொண்டு எமது மக்களுக்குப் பெருந்தொண்டு புரிந்தவர் என அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினரும் காந்தீயம் பத்திரிகை ஆசிரியருமான எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி தெரிவித்தார்.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மில்க்வைற் கனகராசாவின் நினைவு தினம் கடந்த 28 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரியில் அனுஷ்டிக்கப்பட்டது. கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி. சு.திருச்செல்வம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 'சமூகத் தொண்டர் மில்க்வைற் கனகராசா' என்ற தலைப்பில் நினைவுரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இந்தியாவில் காந்தியடிகள் கிராமப் புனரமைப்பு வேலைகள், கிராமக் கைத்தொழில்கள், வீதி செப்பனிடல் போன்ற அபிவிருத்தி சார்ந்த திட்டங்களை முன்னெடுத்தமைக்கு ஒப்ப எமது நாட்டில் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் நோக்கோடு மரநடுகை, குளங்களை ஆழமாக்கல் போன்ற செயற்றிட்டங்களை கனகராசா மேற்கொண்டு வந்தார். மகாத்மாவின் நிர்மாணத்திட்டங்கள் போன்று இங்கு சமூக நலத்திட்டங்களைச் செயற்படுத்தினார்.

கதராடை அணிதல், சுதேசிய பொருள் பயன்பாடு என்பவற்றுக்கு ஊக்கம் அளித்தார்.

பனை அபிவிருத்தித்துறையில் மறுமலர்ச்சியை உண்டாக்கியவர் என்று தமிழ்நாட்டைச் சேர்ந்த பனை நிபுணர் சம்பந்தம் கூறியிருந்தமை கனகராசாவின் பனை குறித்த கரிசணைக்கு எடுத்துக்காட்டாகும்.

மாதந்தோறும் மில்க்வைற் செய்தியை வெளியிட்டு மாணவர்கள் நல்லொழுக்கத்தோடு வாழவேண்டும் என்பதில் அக்கறையோடு செயற்பட்டார். சைவத்தோடு இணைந்த வாழ்வு வாழ்ந்தார் என்றார்.



அரியாலை நாச்சிமார் அம்மன் ஆலய தேர் உற்சவம் அண்மையில் இடம் பெற்ற போது... (48)

# மணிவிழா ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளையின் மணிவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை கலாசாலையில் இடம் பெறவுள்ளது.

இவ்விழா ஏற்பாடுகள் தொடர்பில் அதிபரின் பழைய மாணவர்கள் மற்றும் ஆர்வலர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு வருகை தருமாறு மணிவிழாக் குழுவினர் கோரியுள்ளனர்.

# மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய சுற்றாடல் துப்புரவாக்கும் பணி



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் புகழ்மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய சுற்றாடலை துப்புரவு செய்யும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்றது.

காலை 8.30 மணியளவில் இந்தப் பணியை வட மாகாண ஆளுநர் மற்றும் ஆளுநரின் செயலாளர் எஸ்.இளங்கோவன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். ஆலயத்தின் உள்வீதி மற்றும் பூங்கா போன்றவற்றைத் துப்புரவு செய்யும் பணியில் வட மாகாண ஆளுநர் அலுவலக ஊழியர்கள் ஈடுபட்டனர். (48)

# கொண்டாட்டத்தையும் குதூகலத்தையும் அரசியலெண்டு வந்திட்டா காட்டப்பிடாது...






யாழ்ப்பாண நகரத்தை இப்ப பார்த்தியள் எண்டால் அப்பிடியே அசந்து போயிடுவியள்.

இது யாழ்ப்பாணம்தானா? இல்லை பாரிஸில இருக்கிற லாசப்பலா..? எண்டு தனக்குச் சந்தேகமாயிருக்கு எண்டு சொன்னார் ஒரு பாரிஸ்வாசி.

அந்தளவுக்கு ஜம்பரோடயும் கையில்லாத பெனியனோடயும் சமர்க்குளியல் செய்யினம் தமிழாக்கள்.

இறுக்கமான ஜீன்சும் தொள தொள மேற்சட்டையும் போட்டுக்கொண்டு பொம்பிளையள் அள்ளுகொள்ளையாக நிக்கினம்.

சில பெடிச்சியள் அரைக்காற்சட்டையும் ரீ சேர்ட்டும் போட்டுக்கொண்டு உலாத்துகினம்.

எல்லாம் தமிழாக்கள்தான்.

தமிழாக்கள் எண்டால்.....

புலம்பெயர் நாடுகளில இருந்து இந்தச் சீசனுக்கு ஊருக்கு வந்திருக்கிற எங்கட சொந்த பந்தங்கள்தான்.

அங்க குளிருக்குள்ள கிடந்து விறைச்சதுகளுக்கு இஞ்ச இந்த வெயிலையும் வெளிச்சத்தையும் கண்டால்... அதைக் கொண்டாடாமல் இருக்கேலுமோ!

அதுவும் இவ்வளவு காசைச் செலவழிச்சு, இவ்வளவு தூரந்தொலைவுக்கு வந்து, சொந்த மண்ணிலயே விரும்பினமாதிரிக் கொண்டாட முடியேல்ல எண்டால்....

பிறகேன் இஞ்ச சொந்த மண்ணுக்கு வருவான்?

பேசாமல் கோவாவுக்கோ, தாய்லாந்துக்கோ, மலேசியாவுக்கோ போய் விரும்பினமாதிரி உலாத்திப்போட்டுப் போகலாமே...!

அப்பிடியெல்லாம் வேற நாடுகளுக்குப் போகாமல் இஞ்ச பிறந்து வளர்ந்த மண்ணுக்கு இவையெல்லாம் வருகினம் எண்டால்...

தாய்பாசத்தைப்போல, தாய்மண்ணிலையும்ஒரு பாசம்எண்டதை நாங்கள்விளங்கிக்கொள்ளவேணும்

அப்பிடி வாற பிள்ளையள் கொஞ்சம் அப்பிடி இப்பிடித்தான் நடப்பினம். அது அவை அங்க பழகின பழக்கம். அதால, இதையெல்லாம் நாங்கள் கண்டு கொள்ளப்பிடாது.

போனகிழமை வேலணைக் கடற்கரை – சாட்டிக்குப் போயிருந்தன்.

அங்க நான் கண்ட காட்சியைச் சொன்னால் நம்ப மாட்டியள்...

வலு சுதந்திரமாகச் சுதந்திரக்குளியல் செய்து கொண்டிருந்துதுகள் அஞ்சாறு பெடிச்சியள்.

இதைப்பாக்க எனக்குக் கொள்ளை சந்தோசம்.

ஆரைப்பற்றிய கவலையும் இல்லாமல், இந்தக் கலாசாரம், கத்தரிக்காய் எண்ட ஒண்டைப்பற்றிய அக்கறையும் இல்லாமல் தங்கட இஸ்ரத்துக்கு கடல்ல போய் விழுகிறதும் கரைக்கு வாறதும் எண்டு வலு அமர்க்களமாகக் குளிச்சுக்கொண்டு நிண்டதுகள்.

உடுப்பைப்பற்றி நான் சொல்லத்தேவையில்லை. நீச்சலுக்கு வாறதெண்டால் 12 முழத்தில புடவையா கட்டிக்கொண்டு வரேலும்?

இதைமாதிரித்தான் எங்கட கசூரினா பீச்சுப் பக்கம் நீங்கள் போனீங்கள் எண்டால், அங்கயும் இந்த மாதிரிச் சந்தோசத்தைப் பார்க்கலாம்.

இப்பிடித்தான் இப்ப நல்லூரிலயும் ஆட்கள் கூடத்தொடங்கீட்டினம்.

யாழ்ப்பாணத்தில இருக்கிற ஐஸ்கிறீம் கடைகள், கவர்னர் பூங்கா, யாழப்பாணக் கோட்டையின் பின்வீதி எண்டு எல்லாப் பக்கத்திலயும் எங்கட சொந்த பந்தங்கள் வலு சோக்காகச் சுதந்திரமாக உலாத்துதுகள்.

இப்பிடி உலாத்துகிற ஆட்களுக்கு இஞ்ச இருக்கிற சொந்த பந்தங்கள் உதவியாக – சேர்ந்து நடக்கிற, சேர்ந்து குளிக்கிற, சேர்ந்து குடிக்கிற ஆட்களாக இருக்கினம்.

அவையையும் இவையையும் பாக்க எனக்குச் சிலவேளை சிரிப்பு வாறதும் உண்டு.

அவை கொஞ்சம் வாளிப்பாக, கலகலப்பாகவும் மினு மினுப்பாகவும் இருப்பினம். இவை – இஞ்ச நாட்டில இருக்கிறவை இப்ப அடிக்கிற வறட்சியைப்போலக் கொஞ்சம் காய்ஞ்சு, கறுத்து, மெலிஞ்சு வதங்கிப்போயிருப்பினம்.

இதைவிட இப்பிடி உலாத்துகிற, கூடிக்குளிக்கிற, சேர்ந்து குடிக்கிற கூட்டத்தை ஆசையாக வேடிக்கை பாக்கிற எங்கட ஆக்களும் இருக்கினம். அவையையும் இவையையும் வேடிக்கை பாக்கிற ஆட்களையும் பாக்க எனக்குச் சிலவேளை சிரிப்பு வரும். சிலவேளை அழுகையும் வந்ததுண்டு.

என்ன செய்யிறது, எல்லாம் சொந்த பந்தங்கள். வெளியில இருக்கிறதால கொஞ்சம் செந்தளிப்பாக, செல்லச்செழிப்பாக இருக்கினம்.

மற்றப்படி அவையும் அங்க கஸ்ரப்படுகினம். நாங்கள் இஞ்ச கஸ்ரப்படுகிறம்.

சரி, எப்பிடியோ இப்பிடி நாட்டுக்கு வந்து கொண்டாடுகிற ஆட்களால இப்ப யாழ்பாணம் களை கட்டியிருக்கு. லாசப்பல்ல நிண்டு கொண்டு சொல்லுகினம், இது பாரிஸில இருக்கிற யாழ்ப்பாணம் எண்டு. யாழ்ப்பாணத்தில இருந்து கொண்டு நண்பர் ஒருத்தர் சொல்லிறார் இது யாழ்ப்பாணத்தில இருக்கிற லாசப்பல் எண்டு.

எப்பிடியோ கொண்டாட்டமும் குதூகலமுமாக நாடு மாறிக்கொண்டிருக்கு. ஆயிரம் பிரச்சினை இருந்தாலும் அவரவர் தங்கட காரியங்களை அந்த மாதிரித்தான் பார்த்துக்கொண்டிருக்கினம்.

ஆனால், அரசியல் எண்டு வந்தால்....

'எங்க பாத்தாலும் ஆமி மயம். சீ என்ன கொடுமையப்பா... அங்க (யாழ்ப்பாணத்தில) ஒரு காலடியை எடுத்து வைக்கேலாது.

ஆமிக்காரன் ஒண்டுக்கும் விடுகிறான் இல்லை...

எல்லாத்துக்குள்ளயும் தலையை ஓட்டுகிறான்...' எண்டு அழுதுவடிவினம்.

அதிலயும் இந்தச் சமர்க்காரர் அடிக்கிற குத்துக்கரணம் இருக்கிறதே, அதைத்தான் தாங்க முடியேல்ல.

- தனக்கு நிகழும்வரை எல்லாமே வேடிக்கைதான். -புத்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## வாழ்வு ஏன் இப்படி இருக்கிறது?

இங்கே எல்லாம் சரியாக இருக்கிறது; நாம் சரியாக இருக்கிறோம்; சரியான முறைப்படிதான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று அடித்துச் சொல்ல முற்படுகிறவர்கள் குறித்து சந்தேகம் கொள்ள வேண்டியிருக்கிறது.

எல்லாம் சரியாக இருந்தால், ஏன் இத்தனை துன்பம்? ஏன் இத்தனை ஏற்றத்தாழ்வு? ஏன் இத்தனை இழிவுபடுத்தல்கள்? ஏன் பலர் வாடச் சிலர் வாழும் நிலைமை? நாளும் பொழுதும் நாம் பார்க்கும் கேட்கும் சமூக வக்கிரங்கள் கொஞ்சமா?

விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாம் ஒவ்வொருவருமே குற்றம் செய்பவர்களாகவோ அல்லது குற்றத்திற்குத் தூண்டுபவர்களாகவோ தானே வாழ வேண்டியிருக்கிறது?

நாம் சாப்பிடுவதென்பது, உலகில் எங்கெங்கோ பல்லாயிரம் பேர் பட்டினியால் செத்துக் கொண்டிருப்பவர்களின் உணவைத் திருடியதாகத்தானே இருக்கிறது?

நாம் நாளுக்கொன்றாக உடுத்தும் ஆடைகள் கூட, உடுதுணி வாங்க முடியாத, குளிருக்குப் போர்த்திக்கொள்ளத் துண்டில்லாத பல்லாயிரம் மனிதர்கள் இருக்க, நாம் அணிந்துகொள்வதாகத் தானே இருக்கிறது?

நாம் உயிரோடு இருக்கிறோம் என்பதுகூட, எங்கெங்கோ பலர் வறுமையாலும் வன்முறையாலும் வாழமுடியாமல் செத்துக் கொண்டிருக்க நாம் இருப்பதாகத்தானே இருக்கிறது?

ஆக, இந்த சமூகம், கலாசாரம், ஆட்சி, நாம், நமது வாழ்க்கை முறை எதுவும் இங்கு சரியாக இல்லை என்பதிலிருந்துதான் நாம் தொடங்க வேண்டியிருக்கிறது.

இன்றிருக்கும் இந்தச் சமூக அமைப்புமுறை, ஒழுக்கவிதிகள், பழக்கவழக்கங்களுக்குக் கட்டுப்பட்டுத்தான் நாம் நடக்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது. ஆனால் இந்த அமைப்பின் தர்மமாக ஏற்றத்தாழ்வுகளும் பாகுபாடுகளும்தான் தொடர்ச்சியாக இருக்கிறதெனில் நாம் என்ன செய்வது?

நான் உயர்ந்தவன் நீ தாழ்ந்தவன் என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொண்டிருப்பதற்கான அதிகாரத்துக்காகவே எல்லோரும் ஆலாய்ப் பறக்கிறார்கள். எல்லா வித்தியாசங்களுக்கும் அப்பால் நாம் எல்லோருமே மனிதர்கள்தானே?

அப்படி இருக்க, இந்தப் பாகுபாடுகள் இழிவுபடுத்தல்கள் எல்லாம் எங்கிருந்து வருகின்றன? கலாசாரத்திலிருந்தா, மரபிலிருந்தா, மொழியிலிருந்தா, மத நம்பிக்கைகளிலிருந்தா, சொத்திலிருந்தா, அதிகாரத்திலிருந்தா, நாம் கேட்டு வளர்ந்த கதைகளிலிருந்தா...

நாம் ஒருவரையொருவர் தாழ்த்தவும், கீழ்ப்படுத்திவிடவும், விளிம்புநிலைக்குத் தள்ளி அப்படித் தள்ளிவிடப்பட்டவர்கள் துன்புறுவதும் துயர் சுமப்பதும் குறைமனிதர்களாய் சிதைந்தழிவதும் தவிர்க்க முடியாததுதானா?

கண்டு பேதலித்து நிற்க முடியாது; உலகநியதி இது; நாம் நம் பாட்டைப் பார்த்துப் போய்க்கொண்டிருக்க வேண்டியதுதான்— என்ற குற்றமற்ற மனோநிலையை எவ்வாறு உருவாக்கிக் கொண்டோம்? சமமற்ற மனிதர்களாகவே வாழ்வதில் எவ்வாறு சமாதானமடைந்து கொண்டோம்?

இந்த வாழ்க்கை ஏன் இப்படி இருக்கிறது? மற்றவர் பற்றியும் அவரை நாமும்தான் தாழ்த்துகிறோம் என்பது பற்றியும் கவலையே படாது சென்றுகொண்டிருக்கும் மனநிலை எப்படிச் சாத்தியமாகிற்று?

கேள்விகளுக்கு விடை காணாதவரை இந்தச் சமூக அமைப்புக் குறித்துத் திருப்தியடைய ஏதுமிருப்பதாகத் தெரியவில்லை.

கஷ்டப்பட்டுக் கொண்டிருப்போரின் வாழ்க்கை பற்றிக் கவலைப்படாமல் மற்ற சிலர் வாழ்வதற்கு... என்ன தர்மநியாயங்களும் கனவுகளும் ஏமாற்றுக்களும் தேவையோ அவையெல்லாம் தான் சமூக நியதிகளாகவும் விதிகளாகவும் அரசியலாகவும் வெற்றிகளாகவும் இங்கு சொல்லப்பட்டுக் கொண்டிருக்கும்!

- ஆசிரியர்.

# ஆளும் கட்சியிலிருந்து விலகப்போவதில்லை

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆளும் கட்சியிலிருந்து ஒரு போதும் விலகப் போவதில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடன் சில முரண்பாடுகள் நிலவி வருகின்றது. சிலவற்றுக்கு அவசரமாக தீர்வு காண வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

ஆளும் கட்சியில் அங்கம் வகித்துக் கொண்டே அழுத்தம் கொடுக்க உத்தேசித்திருக்கின்றோம். உள்ளிருந்து அழுத்தம் கொடுக்கும் ஓர் தரப்பாக செயற்படப் போகின்றது முஸ்லிம் காங்கிரஸ்.

முஸ்லிம் சமூகத்தினர் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண தொடர்ந்தும் குரல் கொடுக்கப் போகின்றோம்.

இந்த நிலைப்பாடு குறித்து கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் முரண்பாட்டு நிலைமை காணப்படுகின்றது.

பேருவளை அளுத்கம சம்பவங்களுக்கு எதிர்ப்பு வெளியிட்டு, கட்சி அரசாங்கத்தை விட்டு விலக வேண்டுமென கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர் என்றார்.

# நலன்புரிக் கொடுப்பனவுகள் 37 சதவீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

இவ்வருடத்துக்கான நலன்புரிக் கொடுப்பனவுகள் 37 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட நலன்புரிக் கொடுப்பனவுகள் மற்றும் மானியம் மீதான மொத்தச் செலவீனங்கள் ரூபா 30,592 மில்லியனாக அதிகரித்துள்ளது என மத்திய வங்கியின் திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் மற்றும் பொதுப் படுகடன் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டை விடவும் 37 சதவீத அதிகரிப்பாகும்.

இந்நலன்புரிச் சேவையில் அரசின் நலன்புரிக் கொடுப்பனவுச் செயற்பாடுகளாக, சமுர்த்தி பணம் வழங்கல், வயோதிபர்களுக்கான கொடுப்பனவு, இராணுவத்தினரின் பெற்றோருக்கான கொடுப்பனவு, வெள்ளம் மற்றும் வறட்சி என்பவற்றினால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணம், சமூகத்திலுள்ள ஏழைகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நலன்புரி ஆகியன உள்ளடங்குகின்றன.

இவ்வருட ஆரம்பத்தில் மட்டும் 5663 மில்லியன் ரூபா இவ்வாறான கொடுப்பனவுகளுக்காக செலவிடப்பட்டுள்ளது. கடந்த வருட முதல் ஆறு ஆண்டுகளுக்காக 5240 மில்லியன் ரூபாவாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சாட்சியாளர்கள் வெளிநாடு செல்ல ஏற்பாடு செய்யவேண்டும் ஐ.நா.

## இலங்கை மனித உரிமை ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

சாட்சியாளர்கள் ஜெனிவா பயணம் செய்ய ஐக்கிய நாடுகள் அமைப்பு, ஏற்பாடுகளை செய்து கொடுக்க வேண்டுமென இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தி வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் பிரதிநிதிகள் குழு, இலங்கையிலிருந்து சாட்சியமளிப்போர் ஜெனிவாவிற்குச் சென்று சாட்சியங்களை வழங்கத் தேவையான ஒழுங்குகளை செய்து கொடுக்க வேண்டும். எவ்வாறெனினும், இந்த விடயம் நடைமுறைச் சாத்தியமாகுமா என்பது சந்தேகமே,

சாட்சியாளர்களுக்கு ஜெனிவா பயணம் செய்யத் தேவையான போக்குவரத்து ஏற்பாடுகளை செய்வதற்கு பாரியளவில் செலவாகும் ஸ்கைப் உள்ளிட்ட வீடியோ ஆதாரங்களின் ஊடாக சாட்சியங்களை பதிவு செய்தல் எந்தளவிற்கு உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்பது கேள்விக்குறியாகியுள்ளது.

ஜெனிவா அல்லது பிறிதொரு நாட்டில் சாட்சியாளர்களை நேரடியாக அழைத்து சாட்சியங்களை திரட்டுவது மிகவும் சிறந்த வழியாக அமையும். இந்தக் கருத்துக்கள் தமது தனிப்பட்ட கருத்துக்கள் எனவும், மனித உரிமை ஆணைக்குழுவின் கருத்தாகாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நாடு பூராகவும் கடும் வறட்சி குடிநீரின்றி மக்கள் அவலம்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியினால், நாளாந்த குடிநீர் தேவையை கூட பூர்த்தி செய்து கொள்ள முடியாதவொரு துயர நிலையை மக்கள் எதிர்நோக்கியுள்ளனர். அத்துடன் சேற்று நீரினை அருந்தும் கால்நடைகள் நோய்வாய்ப்பட்டு இறந்துவருகின்றது.

நாட்டின் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட பல பகுதிகளில் தற்போது நிலவி வரும் வறட்சியால் பெரும்பாலான ஆறுகள், குளங்கள் மற்றும் கிணறுகள் வற்றிப்போயுள்ளன.

இதனால் விவசாய நடவடிக்கைகள் மாத்திரம் அன்றி மக்களின் குடிநீர் தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியாதவொரு அவல நிலை தோன்றியுள்ளது. அந்த வகையில் வடமாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியினால், விவசாய நடவடிக்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், கால்நடைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது மாவட்டத்தின் சிறிய குளங்கள் அனைத்தும் முற்றாக வற்றியுள்ளதாகவும், நடுத்தர குளங்களில் ஓரளவு நீர் காணப்படுகின்ற போதிலும், இன்னும் சில தினங்களுக்குள் அந்த நீரும் வற்றிப்போய் விடும் என தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை பிரதேச சபைகள் மற்றும் பிரதேச செயலகத்தினால் குடிநீர் விநியோகிக்கப்படுகின்ற போதிலும், மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய முடியாதுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் நீண்ட காலமாக நிலவும் வறட்சியினால், நாளாந்த உணவு மற்றும் நீரினை பெற்றுக்கொள்வதில் அப்பகுதி மக்கள் பாரிய இன்னல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

நீர் நிலைகள் வற்றிப்போயுள்ளதுடன், விவசாய நிலங்கள் மற்றும் மேய்ச்சல் நிலங்களும் வறட்சியினால் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் விவசாய நிலங்களுக்கும், பொதுமக்களுக்கும் தேவையான நீரினை கொண்டு செல்லும் வாய்க்கால்களும் வறண்டு போயுள்ளன.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியினால் குடிநீரின்றி கால்நடைகள் உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கிண்ணியா பிரதேசத்தின் வட்டமடு, ஆரங்கல், மணியரசன்குளம், கல்லரம்பு, குரங்கு பாய்ஞ்சான் உள்ளிட்ட பல பகுதிகளில் தற்போது நிலவும் வறட்சியினால் சிறியளவிலான அனைத்து குளங்களும் வற்றிப்போயுள்ளன.

# ஏன் ரி.என்.ஏ உருவாக்கப்பட்டது? மற்றும் எல்.ரீ.ரீ.ஈ எப்படி அதன் கட்டுப்பாட்டைப் பெற்றது?

## 2

**டி.பி.எஸ் ஜெயராஜ் கட்டுரையிலிருந்து**

(நேற்றைய தொடர்ச்சி)

**புதிதாக** உருவான ரி.என்.ஏ. கூட்டணி அதன் நெருப்பு ஞானஸ் ஞானத்தை டிசம்பர் 5, 2001இல் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்ற போது பெற்றது.

ரி.என்.ரீ. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இன மோதலுக்கு பேச்சு வார்த்தை மூலமான தீர்வை வலியுறுத்தியதுடன் அப்படியான பேச்சு வார்த்தைகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவார்கள் என்பதையும் வலியுறுத்தியது.

2001 தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது, ரி.என்.ஏ. மிகச்சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றிருந்தது.

ரி.என்.ஏ.க்கு 14 தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களும் மற்றும் ஒரு நியமன அங்கத்தவரும் கிடைத்திருந்தனர்.

ரணில் விக்கிரமசிங்கா பிரதம மந்திரியானதும் சமாதான நடவடிக்கைகளில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டது. எல்.ரீ.ரீ.ஈ.யின் அரசியல் அமைப்பாக ரி.என்.ஏ செயற்படும் என பலரும் எதிர்பார்த்தார்கள். சிலர் சமாதான பேச்சுக்களில் ரி.என்.ஏ. முக்கிய பங்கினை வகிக்கப் போகிறது எனும் நம்பிக்கையை வளர்த்திருந்தார்கள்.

ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை, சமாதான பேச்சுக்களில் ஒரு அரசியல் பாத்திரமாகிய ரி.என்.ஏ.யினது பங்கினை எல்.ரீ.ரீ.ஈ. தொடக்கத்திலேயே நிராகரித்துவிட்டது. புலிகள் இப்போது ரி.என்.ஏ. மீது தங்கள் கட்டுப்பாட்டைத் தீவிரமாகச் செலுத்த விரும்பினார்கள். ரி.என்.ஏ யினை சுயாதீனமாக இயங்கவிட்டு அரசியல் நல்லெண்ணத்தை பாராமரிப்பதற்குப் பதிலாக இந்த புதிய அமைப்பை தனது காலடியின் கீழ் கொண்டு வருவதையே எல்.ரீ.ரீ.ஈ. விரும்பியது.

மேலும் தமிழ் மக்களுக்கும் மற்றும் பெரிய அளவில் உலகத்துக்கும் எல்.ரீ.ரீ.ஈ. சொல்ல விரும்பியது, என்னவெனில் புலி களாகிய தாங்கள்தான் எஜமான்கள் மற்றும் ரி.என்.ஏ தங்கள் கட்டளையை சிரமேற் கொண்டு பணியாற்றும் வெறும் ஏவலாட்கள் என்பதையே.

குறுகிய காலத்துக்குள்ளேயே ரி.என்.ஏ.யினது அடிமைத்தனம் வெளிப்படையாகத் தெரிந்தது. இந்தக் காட்சியில் மிகவும் ஏமாற்றம் தருவது என்னவென்றால் ரி.யு.எல்.எப். பின்பற்றிய இழிவான அடிமைத்தனம்தான், ஆனால் வீரசிங்கம் ஆனந்தசங்கரி இதற்கு மாறாக கௌரவமான ஒரு விதிவிலக்காகத் திகழ்ந்தார்.

ஆரம்பத்தில் ரி.என்.ஏ. கட்சிகளின் ஒரு தளர்வான அமைப்பாகவே ஒன்று சேர்ந்திருந்தது, ஆனால் புலிகள் அதன் மொத்த கட்டுப்பாட்டையும் நிறுவிய பிறகு அவர்களால் இந்த ஐக்கியத்தை ஒரு முழு கட்டமைப்பாக உறுதியாக்கியிருக்க முடியும். ரி.என்.ஏ யினை கட்சிக் கட்டமைப்பு மற்றும் யாப்புகளுடன் கூடிய ஒரு அரசியற்கட்சியாக பதிவு செய்திருக்கவும் முடியும்.

ஆனால் எல்.ரீ.ரீ.ஈ அப்படிச் செய்யவில்லை மற்றும் உண்மையில் ரெலோ மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். என்பன அத்தகைய ஆலோசனைகளை வழங்கிய போதும் அவை தடுக்கப்பட்டன. மாறாக ரி.என்.ஏ. யில் உள்ள கட்சிகளை ஒரு நிரந்தரமான கூட்டணியாக மாற்றாமல் தனித்தனியான கட்சியாக வைத்திருப்பதையே எல்.ரீ.ரீ.ஈ. விரும்பியது.

இதனால் ஒவ்வொரு கட்சியையும் வெவ்வேறாக திறமையாக கையாளுவதற்கு எல்.ரீ.ரீ.ஈ.க்கு இயலுமாக இருந்தது. அதேநேரம் ரி.என்.ஏ. மொத்தமான ஒரு அமைப்பாகவும் மற்றும் சுயாதீனமான ஒரு கட்சியாகவும் வலுப்பெறுவதைத் தடை செய்ததோடு எல்.ரீ.ரீ.ஈ. இந்த கூட்டமைப்பு கட்சிகளிடையே முரண்பாட்டையும் வளர்த்தது.

2004 பாராளுமன்ற தேர்தலுக்கான சமயம் வந்தபோது, வேட்பாளர்களை தெரிவு செய்வதிலும் ரி.என்.ஏ.யின் தேர்தல் பிரசாரத்தை நடத்துவதிலும் புலிகள் முக்கியமான பங்கினை வகித்தார்கள். 2001 தேர்தலில், ரி.யு.எல்.எப். பிரிந்துவிட்டதால், புதிய சின்னம் தேவையாக இருந்தது. இலங்கை தமிழரசுக் கட்சியின் சின்னமான வீட்டு சின்னத்தின் கீழ் செல்லுவது என எல்.ரீ.ரீ.ஈ. முடிவு செய்தது.

ரி.என்.ஏ.யில் உள்ள கட்சிகளிடம் அவர்களது வேட்பாளர்களை முன்னிறுத்தும்படி கேட்டுக் கொண்டது. அதற்கு மேலதிகமாக புதிய பெயர்களைக் கொண்ட பட்டியல் ஒன்று எல்.ரீ.ரீ.ஈ.யின் வசம் இருந்தது. அவர்களில் பலர் எல்.ரீ.ரீ.ஈ.யின் முன்னணி நிறுவனங்களில் இருந்த அலுவலகப் பொறுப்பாளர்கள் ஆவர். அவர்கள் அனைவரும் கடுமையான புலி ஆதரவாளர்கள். ஒரு சிலர் எல்.ரீ.ரீ.ஈ. அங்கத்தவர்கள்.

ஒவ்வொரு மாவட்டத்துக்குமான ரி.என்.ஏ. வேட்பாளர் பட்டியலை எல்.ரீ.ரீ.ஈ. தயாரித்தது. வடக்கிற்கான பட்டியலை தமிழ்செல்வன் தனது பிராந்திய தளபதிகளுடன் ஆலோசனை செய்து இறுதி செய்தார். மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கான பட்டியல் கருணா மற்றும் கரிகாலன் ஆகியோரால் இறுதி செய்யப்பட்டது. திருகோணமலை பட்டியல் பதுமன் மற்றும் திலக் ஆகியோரால் இறுதி செய்யப்பட்டது.

அது இறுதி செய்யப்பட்டதும் உத்தியோகபூர்வமாக ரி.என்.ஏ.அதை அனுமதித்தது. இது ரி.என்.ஏ என்பதை "புலிகள் பரிந்துரை செய்த முகவர்கள்" என நகையாட வழியேற்படுத்தியது.

தேர்தல் பிரசாரம் ஆரம்பமானது. யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பில் எல்.ரீ.ரீ.ஈ. அங்கத்தவர்கள் புலிகள் சார்பான மாணவர் அமைப்புகளுடன் சேர்ந்து திருநெல்வேலி மற்றும் வந்தாறுமூலை வளாகங்களில் பரப்புரைகளில் ஈடுபட்டார்கள்.

யாழ்ப்பாணத்தில் புலிகளின் ஒரு மோட்டார் சைக்கிள் படையணி, ஆனந்தசங்கரி மற்றும் தேவானந்தா போன்றவர்களின் போட்டி வேட்பாளர்களை அச்சுறுத்தும் செயற்பாட்டில் இறங்கியிருந்தது. தேர்தல் நாளன்று 5000 தொண்டர்களைக் கொண்ட ஒரு செயற்படை ஒரு பிரமாண்டமான வாக்கு மோசடிக் களியாட்டத்தில் இறங்கியிருந்தது.

தேர்தல் முடிவுகள் நிச்சயமாக ரி.என்.ஏ.க்கு திகைப்பூட்டுவனவாகவே இருந்தது. எல்.ரீ.ரீ.ஈ. தனது பங்குக்கு பரப்புரையை மேற்கொண்டு பெருமளவு வாக்காளர்களை வாக்களிக்க வைப்பதை உறுதிப்படுத்தியதுடன் பிரமாண்டமான அளவில் வாக்கு மோசடியையும் மேற்கொண்டிருந்தது. தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் வாக்காளர் மத்தியில் ரி.என்.ஏ. கிட்டத்தட்ட அனைத்தையுமே வாரிக் கூட்டி அள்ளிவிட்டது.

எல்லாமாக 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் ரி.என்.ஏ. வசம் இருந்தார்கள். இந்த 22இல் பதினொரு பேர் ரி.என்.ஏ.யின் ஆரம்பத்தில் இருந்த கட்சிகளைச் சேர்ந்தவர்கள். எந்தக் கட்சியையும் சாராத மற்றும் பதினொரு பேர்கள் இருந்தார்கள்.

எனவே ரி.என்.ஏ. பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியை சார்ந்தவர்கள் மற்றும் கட்சியை சாராதவர்கள் என சம பங்காக பிரிக்கப்பட்டிருந்தனர். இதை இலகுவாக சொல்வதானால் இரு தரப்புமே கிரிக்கட், கால்பந்து அல்லது ஹாக்கி போட்டியில் விளையாடுவதற்கு பொருத்தமான எண்ணிக்கையை கொண்டிருந்தார்கள். கடைசியாக ஜி.ஜி.பொன்னம்பலத்தின் ஐம்பதுக்கு ஐம்பது இதிலாவது நடைமுறைப் படுத்தப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியம், வடக்கு மற்றும் கிழக்கில் தேர்தல்கள் சுதந்திரமாகவும் மற்றும் நியாயமாகவும் நடைபெறவில்லை என்கிற கண்டனத்தோடு தனது அறிக்கையை வெளியிட்டதோடு, 2004இல் ரி.என்.ஏ.யின் தேர்தல் வெற்றி களையிழந்து போனது.

ரி.என்.ஏ. யில் வென்றவர்களில் சிலர் தங்கள் சொந்த உரிமையில் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தாலும் சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் அவர்களது பெரும்பான்மை அதிகரிக்கப்பட்டிருந்தது. ஆனால் சிலர் முற்றிலும் மோசடியான வாக்களிப்பு மூலமாகவும் வெற்றி பெற்றிருந்தார்கள்.

புலிகள் உதவியதன் காரணமாக ரி.என்.ஏ. தேர்தலில் வெற்றி வாகை சூடியதுடன் 22 ஆசனங்களையும் வென்றிருந்தது. எனினும் இது, அறிவை பெறுவதற்காக சாத்தானிடம் உயிரை விற்ற "பவுஸ்ரெயின் பேரம் பேசலை" ஒத்ததாக இருந்தது.

ரி.என்.ஏ. தமிழ் மக்களின் குரலை ஒலிப்பதற்குப் பதிலாக புலிகளின் குரலை ஒலிப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. அவர்கள் பற்றிய நம்பகத்தன்மை உலகத்தின் கண்களிலும் மற்றும் இலங்கையின் மீதிப் பகுதியிலும் பூச்சியமாக இருந்தது.

புலிகளும், ரி.என்.ஏ.யினை அரசியல் அடிமைத்தனத்துக்கு தாழ்த்தியதுடன் அத்தகைய அடிமைப் பண்பு நன்கு பிரசித்தமாவதையும் உறுதிப்படுத்தினார்கள். ரி.என்.ஏ.யினை அடிக்கடி கிளிநொச்சிக்கு வரவழைத்து அங்கு வைத்து புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்செல்வன் அவர்களுக்கு அறிவுறுத்தல்களையும் மற்றும் கட்டளைகளையும் வழங்கினார்.

எல்.ரீ.ரீ.ஈ. சார்ந்த விழாக்களில் இந்த பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலர் புலிகளின் குறியீட்டு சின்னங்களை அணிந்துகொண்டு பிரபாகரன் மற்றும் புலிகளைப் புகழும் துதிப்பாடல்களை பாடவும் வேண்டியிருந்தது.

பாராளுமன்றத்தில் ரி.என்.ஏ. ஒரு பரிதாபகரமான கூட்டமாக இருந்தது. சம்பந்தனையும் மற்றும் சில பாராளுமன்ற உறுப்பினர்களையும் தவிர வேறு எவரும் பயனுள்ள பங்களிப்பு எதனையும் வழங்கவில்லை.



> புலிகள், ரி.என்.ஏயினை அரசியல் அடிமைத்தனத்துக்கு தாழ்த்தியதுடன் அத்தகைய அடிமைப் பண்பு நன்கு பிரசித்தமாவதையும் உறுதிப்படுத்தினார்கள். ரி.என்.ஏ.யினை அடிக்கடி கிளிநொச்சிக்கு வரவழைத்து அங்குவைத்து புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்செல்வன் அவர்களுக்கு அறிவுறுத்தல்களையும் மற்றும் கட்டளைகளையும் வழங்கினார். எல்.ரீ.ரீ.ஈ. சார்ந்த விழாக்களில் இந்த பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலர் புலிகளின் குறியீட்டு சின்னங்களை அணிந்துகொண்டு பிரபாகரன் மற்றும் புலிகளைப் புகழும் துதிப்பாடல்களைப் பாடவும் வேண்டியிருந்தது.

அநேகமான ரி.என்.ஏ. அங்கத்தவர்கள் மோசமாகவும் எரிச்சலூட்டும் வகையிலும் பாராளுமன்றத்தில் நடந்து கொண்டார்கள். அவர்களில் எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் மிகவும் மோசமான பெயரைப் பெற்றிருந்தார்கள்.

இவை அனைத்தினதும் மொத்த விளைவாக நம்பகத்தன்மை மற்றும் மரியாதை என்பனவற்றில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. இதேபோல வெளிநாட்டு இராஜதந்திரிகள் சமூகமும் ரி.என்.ஏ.யினை அவமதிப்பு மற்றும் வெறுப்புடனேயே பார்த்தது.

கூட்டங்களின் தீர்மானங்கள் பின்பற்றப்பட்டாலும் நடைமுறையில் எந்த கூட்டமும் சிரத்தையுடன் எடுத்துக்கொள்ளப்படவில்லை. குறிப்பாக இந்தியாவுடனான கூட்டங்களிலும் இப்படியே நடைபெற்றது. ரி.என்.ஏ. தூதுக்குழு புதுடில்லிக்கு வழமையான யாத்திரைகளை மேற்கொண்ட போதிலும் அதற்கு அற்ப மதிப்பே வழங்கப்பட்டது. ரி.என்.ஏ.யினை புலிகளின் ஒரு இணைப்பாக பார்த்தார்களே தவிர வேறெதுவும் இல்லை.

இவை அனைத்தினதும் இறுதி விளைவாக, பாராளுமன்றத்தில் உள்ள 225 ஆசனங்களில் ரி.என்.ஏக்கு 22 ஆசனங்கள் கிடைத்திருந்த போதிலும் அதனால் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ பயனுள்ள எதையும் சாதிக்க முடியவில்லை.

2009இல் எல்.ரீ.ரீ.ஈ அழிக்கப்பட்ட பின்னர், நான் உட்பட அநேகர் நம்பியது ரி.என்.ஏ கடந்த காலத்திலிருந்து மீண்டு ஒரு புதிய தொடக்கத்தை பெறும் என்று. எனினும் அது நடக்கவில்லை. ஒரு வேளை, முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் சிவி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாணசபைக்கு ரி.என்.ஏ.யின் முதலமைச்சர் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்ட பின்னர் புலிப்பாட்டு பாட ஆரம்பித்ததுதான் இவை அனைத்தையும் விட எமக்கு கிடைத்த மிகப்பெரும் ஏமாற்றம்.

# அரசசார்பற்ற நிறுவனங்களை கண்காணிப்பது அரசின் கடமை

## ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு



அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளை கண்காணிப்பது அரசாங்கத்தின் கடமையாகும் என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், செயலமர்வுக்காக கொழும்பு நோக்கி வந்தயாழ். ஊடகவியலாளர்கள் தடுத்து நிறுத்தப்பட்ட விடயம் தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். 30 ஆண்டு கால போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், தேசிய பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும்.

சில அரச சார்பற்ற நிறுவனங்கள் இன, மதச் சமூக அடிப்படையில் செயற்பட்டு வருகின்றன.

எவ்வாறு வாக்களிப்பது யாருக்கு வாக்களிப்பது என்பது வரையில் மக்களுக்கு அறிவுரை வழங்க சில அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சிக்கின்றன.

போர் இடம்பெற்ற காலத்தில் பயங்கரவாதிகளின் முகாம்களிலிருந்து மீட்கப்பட்ட சில ஆயுதங்கள் பற்றிய விபரங்களை வெளியிட வேண்டாம் என சில தூதுவர்கள் அந்தக் காலத்தில் கோரியிருந்தனர். இதன் காரணமாக அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள் குறித்து சந்தேகக்கண்ணுடன் நோக்க வேண்டியுள்ளது.

அரசாங்கத்தின் தீர்மானங்களினால் ஏதேனும் ஓர் தரப்பிற்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

அமெரிக்க அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டு செயறபடுகின்றது எனவே அதன் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியதில்லை.

# இஸ்லாமிய கலாசார உடையுடன் வாக்களிப்பதற்கு தடை




இஸ்லாமிய கலாசார உடைகளை அணிந்து வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்க முடியாது என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார். அண்மையில் கட்சிகளின் செயலாளர்களுடன் நடாத்தப்பட்ட சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள தேர்தல்களின் போது பெண்கள் ஹிஜாப் அணிந்து கொண்டு வாக்குச் சாவடிகளுக்கு சென்று வாக்களிக்க முடியாது.

தேசிய அடையாள அட்டைக்கான புகைப்படங்களை எடுக்கும் போதும் ஹிஜாப் அணிந்து காதுகளை மறைக்கக் கூடாது. வாக்குச் சாவடிக்குச் செல்லும் முஸ்லிம் பெண்கள் அல்லது வேறு தரப்பினர் முகத்தை மூடிக்கொண்டு வாக்களிக்க முடியாது எனத் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# ஆசிய அரசியல் கட்சிகளின் சர்வதேசமாநாடு இலங்கையில்



ஆசிய அரசியல் கட்சிகளின் சர்வதேச மாநாடு இலங்கையில் இடம் பெறவுள்ளது.

ஆசிய சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்ற தொனிப் பொருளில் அடுத்த மாதம் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை இந்த மாநாடு இடம் பெறவுள்ளது.

இந்த மாநாட்டின் வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இந்த மாநாட்டில், ஆசிய வலயமைப்பைச் சேர்ந்த 33 நாடுகளின் அரசியல் கட்சிகள் பங்கேற்கவுள்ளன.

# பண்டாரநாயக்க விமான நிலையம் தரப்படுத்தலில் முன்னிலை




பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் SKYTRAX தரப்படுத்தலில் மத்திய ஆசியாவில் 4ஆவது இடத்தையும் ICAO வின் பாதுகாப்பு தணிக்கை முடிவுகளில் ஆசிய பசுபிக் வலயத்தில் 5ஆவது இடத்தையும் பிடித்துள்ளது

# முஸ்லிம் அரசியல்வாதிகள் சந்தர்ப்பவாதிகள்

## ஜாதிகஹெலஉறுமய குற்றச்சாட்டு

முஸ்லிம் அரசியல்வாதிகள் சந்தர்ப்பவாதிகள் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

உலகின் பல பகுதிகளிலும் இடம்பெற்று வரும் பாரியளவிலான முஸ்லிம் தீவிரவாத நடவடிக்கைகள் குறித்து இலங்கை முஸ்லிம் அரசியல்வாதிகள் கருத்து வெளியிடாமல் மௌனம் காத்து வருகின்றனர்.

இலங்கையில் முஸ்லிம்கள் ஒடுக்கப்படுவதாக மட்டுமே குற்றம் சுமத்தி வருகின்றனர்.

இஸ்லாமிய தீவிரவாதம் உலகம் முழுவதிலும் வியாபித்து வருகின்றது என தெரிவித்துள்ளார். முஸ்லிம் கடும்போக்குவாதிகளினால் நாட்டின் அப்பாவி மக்கள் தாக்கப்படும் சம்பவங்கள் பற்றிய தகவல்கள் வெளியிடப்படாமை வருத்தமளிக்கின்றது.

முஸ்லிம் தீவிரவாதத்தை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானது. அரசாங்கம் இது குறித்து உரிய கவனம் செலுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்

# தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிற்கான ஆதரவு தமிழகத்தில் பாரியளவு வீழ்ச்சி

## ஜனநாயக மக்கள் முன்னணித்தலைவர் தெரிவிப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சிக்கான ஆதரவு தமிழகத்தில் பாரிய அளவில்வீழ்ச்சியடைந்துள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதன் பின்னர் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரிவினைவாத கொள்கைகளை முன்னெடுத்து வருவதாகவே ஊடகங்களும், பிரதான அரசியல்வாதிகளும் கருதுகின்றனர் பிரிவினைவாத கோட்பாடுகளுக்கு ஆதரவளிக்க தமிழக அரசியல்வாதிகள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

உள்நாட்டு ரீதியில் பிரிவினைவாதத்தைக் கைவிட்டுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ள போதிலும் இந்திய அரசியல்வாதிகளுக்கு அந்தச் செய்தி வெளிப்படுத்தப்படவில்லை.

இலங்கை தமிழர் தொடர்பில் இந்தியாவின் தெளிவற்ற தன்மைக்கு இலங்கை அரசாங்கமும் காரணமாகும்.

தமிழர் பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க அரசாங்கம் இது வரையில் நடவடிக்கை எடுக்கவில்லை இந்திய அரசியல்வாதிகளின் நிலைப்பாடும் இதுவாகவே அமைந்துள்ளது என்றார்.

# சமூகநீதிக்கான தேசிய அமைப்பின் நடவடிக்கைகளை நிறுத்துமாறு அச்சுறுத்தல்



சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் அமைப்பாளர் மாதுலுவே சோபித தேரருக்கு கடும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சமூக நீதிக்கான தேசிய அமைபபின் நடவடிக்கைகளை இடைநிறுத்திக்கொள்ளுமாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இனந்தெரியாத நபர்களினால் தொலைபேசி மூலம் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் அமைப்பாளர் மாலுவே சோபிததேரர் தெரிவித்துள்ளார்.

செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ளாவிட்டால் பாரிய பாதக விளைவுகளை எதிர் நோக்க நேரிடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படும் வகையில் சில அரச ஊடகங்கள் தகவல்களை வெளியிட்டு வருகின்றன.

அச்சுறுத்தல்கள் சேறு பூசல்களின் மூலம் தமது செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியாது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் முனைப்புக்கள் தொடரும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் இணையத்தளமொன்று உருவாக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# காணாமற் போன சிறுவனை கண்டுபிடிக்ககோருகிறது ஐ.தே.க.

එක්සත් ජාතික පක්ෂය
ஐக்கிய தேசியக் கட்சி
UNITED NATIONAL PARTY

“மீகலவை பகுதியில் காணாமற் போயுள்ள 4 வயதுச் சிறுவனை கண்டுபிடிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்“ என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை சாடியுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

“அரசிற்கு எதிராக இவ்வாறான குற்றங்களை தொடர்ந்து செய்பவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

கடத்தல் சம்பவங்கள் மிகவும் மோசமான நிலைமையை எட்டியுள்ளன. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாதுகாப்பாக தம்மிடமோ அல்லது வீடுகளிலோ வைத்துக்கொள்ள முடியாதுள்ளது. நாளொன்றுக்கு 5 சிறுவர்கள் வீதம் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. அரசியல் பின்னணியிலே இவை இடம்பெறுகின்றன. நாட்டில் இடம்பெறும் குற்றங்களை நிறுத்துவதற்கு பொலிஸ் துறையும் நீதித்துறையும் சுதந்திரமாக செயற்பட வேண்டும் என அரசாங்கத்திற்கு வலியுறுத்துகிறோம் என அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.

# காரை.யாழ்ரன் கல்லூரியில்

## சரஸ்வதி சிலை திறப்பு

(காரைநகர்)

காரைநகர் யாழ்ரன் கல்லூரியின் சரஸ்வதி சிலை திறப்புவிழா வைபவமும் நுழைவாயில் வளைவுக்கான அடிக்கல் நாட்டுவிழாவும் கடந்த செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெற்றது.

சுவிஸ்நாதன் என்றழைக்கப்படும் சுப்பிரமணியம் கதிர்காமநாதன் என்பவரின் நிதி உதவியினால் அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலை திறந்து வைக்கப்பட்டது.



இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண உதவிப் பொலிஸ்மா அதிபர் றொஹான் டயஸ் சிறப்பு விருந்தினர்களாக ஈ.பி.டி.பி.காரைநகர் பிரதேச அமைப்பாளர் வி.கண்ணன் (ரஜினி) பாடசாலை அதிபர் முருகமூர்த்தி, பாடசாலை நிர்வாக செயலாளர் சிற்சபேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து மணற்காடு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் பிரதம குருஞான சம்பந்தக் குருக்களினால் பூசை வழிபாடுகள் ஆற்றப்பட்டு ஆசியுரை வழங்கப்பட்டு பின்னர் பாடசாலை வளாகத்திற்கு விருநதினர்கள் பாண்ட் வாத்தியங்கள் சகிதம் அழைத்து வரப்பட்டனர்.

# நல்லூர் ஆலயச்சூழலில் இன்று....



நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஆன்மீக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலைநிகழ்வுகளும் தினமும் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

இதில் இரண்டாம் நாளான இன்று திருப்பெரும் வடிவம் என்னும் விடயம் பற்றி சிவஸ்ரீ கு.சுமுகலிங்கம் சொற்பொழிவாற்றவுள்ளார். தொடர்ந்து தொல்புரம் ஆதி முத்துமாரி ஆம்பாள், கைதடி பெரியதம்பிரான் ஆலயம், பண்டத்தரிப்பு மார்க்கண்டு சுவாமிகள், வேலணை சரவணை ஸ்ரீ செல்லக்கதிர்காமம் முருகன் ஆகிய அறநெறிப் பாடசாலைகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

♦♦♦ ♦♦♦ ♦♦♦

நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்வு தினமும் மாலை 6.45 முதல் 8.15 மணிவரை நடைபெற்று வருகிறது. இதில் இரண்டாம் நாள் நிகழ்வான இன்று திருமுறைக்கச்சேரி இடம்பெறவுள்ளதுடன் அரங்க இசை கலைஞர்களாக எஸ்.திருஞானசம்பந்தன் (பாட்டு), செல்வி க.சித்திரா (உடன்பாடுபவர்), என். செல்வச்சந்திரன் ஹார்மோனியம், சதா வேல்மாறன் (மிருதங்கம்), எஸ்.செந்தூரன் (முகர்சிங்), ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(42)

## நல்லூர் கந்தசுவாமி ஆலய கொடியேற்றத் திருவிழா பக்திபூர்வமாக நேற்று இடம்பெற்றபோது.....









படப்பிடிப்பு இ.இராஜகுமார்

# நல்லைக் கந்தனுக்கு இன்று 2 ஆம் நாள் திருவிழா



## பகைமை ஒழிந்திடுமே!

நல்லையம் பதியுறையும் நான்முகனின் குருவானவரே!
எல்லையிலா சக்திவேலை எந்நாளும் கையிலுடையவரே!
தொல்லைதனை சூழ்ந்திருக்கும் செந்தமிழர் பகைதனையே!
இல்லையெனப் பூமியிலே! இல்லாதொழிக்க வாருமையா!

-கவிஞர் சரசாலையூரான்-

## வீழ்ந்து துதிப்போம்!

நல்லை முருகன் தாழ் நாளாந்தம் வீழ்ந்து துதி
இல்லை நடக்குமாம் எதுவுமாகில் - தொல்லையிலா
வாழ்வதும் தொடர்வதற்கு வாகனனாம் தோகைமயில்
தோள்கொடுப் பான்கந்த வேள்!

-நவாலியூர்க்கவிராயர்-

## ஒரு ரூபாய் போதுமே!

கோடியிருந்தென்ன மாடியிருந்தென்ன
கும்பிட ஒரு ரூபாய் போதும்,
வாடியிருந்தாலும் வதங்கியிருந்தாலும்
வணங்கிப்பார் அது கிடைக்கும்.

தேடி வைத்த பொருள் தெய்வம் தந்தாலும்
தேறும் வட்டிக்கு கொடுக்காதே,
ஓடி ஓடி நீ உழைத்த ஒரு ரூபாய்தான்
உன்னை நல்லூருக்கு அழைக்கும்.

-கே.எஸ்.சிவஞானராஜா கொக்குவில்-

## கர்மவினை அகலுமே!

நல்லூருக்கு போனால் கர்மவினைபோம்
நல்லூருக்குவந்தால் நல்லதெல்லாம் வரும்
நல்லதமிழ் செய்யவா, நல்லூருக்குவாரும்
நால்வேதமறியவா நல்லூருக்கேவா
வேதமந்திரங்கள் கேட்கவா அங்கதான்போ
வேண்டாதார் உறவுதுறக்க வேணுமா
நல்லூருக்கேவா சித்தர் பத்தரையும் காணலாம்
நல்லூர் தேசம் கேட்டு உய்திபெற தேரடிக்குவா!

-மண்டைதீவு மகிழ்நன்-

## அபயமளிக்கும் அவன்கரங்கள்!

கொல்லவரும் கொடூரங்கள் அவன் வேலால் அழியட்டும்
உல்லாசமாய் அழகன் மயில்மீதில் ஏறட்டும்
சல்லாபத் துணைவியரும் சங்கமித்தே உலாவட்டும்
இல்லையென்ப தவனருளால் இல்லாமல் மறையட்டும்
கல்விக்குக் குருவாக கந்தனவன் அமரட்டும்
செல்வத்தின் செழுமையினை அடியவர்க்கு அருளட்டும்
நல்லமழை அவனருளால் நாடெல்லாம் கொட்டட்டும்
நெல்விளையும் களனியெலாம் நிரம்பியே வழியட்டும்
தெல்லோட்டி அவனருளே தினமெம்மை நடத்தட்டும்
மல்லோட்டி அவன்கரமே அபயமெமக் களிக்கட்டும்
புல்லரிக்கும் அவன்புகழை புவிமுற்றும் பாடட்டும்
வெல்லும் வாழ்வையவன் வேலெமக்குச் சொல்லட்டும்!

-ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம் மூளாய்-

# கொமன்வெல்த் விளையாட்டு விழா

## ஆஸி. பளுதூக்கல் வீரர் கைது



(கிளாஸ்கோ)

கிளாஸ்கோவில் நடைபெற்று வரும் கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் பளுதூக்குதலில் 77 கிலோ உடல் எடைப்பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்ற அவுஸ்ரேலிய அணியைச் சேர்ந்த 29 வயதான பிரான்சிஸ் எடோன்டி, கொமன்வெல்த் விளையாட்டு வீரர்கள் கிராமத்தில் வேல்ஸ் அணி பளுதூக்குதல் வீரருடன் தகராறில் ஈடுபட்டதாக ஸ்கொட்லாந்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் காவலில் இருக்கும் பிரான்சிஸ் எடோன்டியின் அடையாள அட்டை அங்கீகாரத்தை இரத்துச் செய்ய கொமன்வெல்த் விளையாட்டு சங்கம் உத்தரவிட்டுள்ளது. அவரது பதக்கம் பறிக்கப்படுமா? என்பது பற்றி எதுவும் தெரியவில்லை.




## 200 மீற்றரில் ஜமேக்கா ஆதிக்கம்

(கிளாஸ்கோ)


கொமன்வெல்த் விளையாட்டு விழாவில் நேற்று முன்தினம் ஆண்கள் 200 மீற்றர் ஓட்டப்பந்தயம் நடைபெற்றது. இதில் ஜமேக்கா ஆதிக்கம் செலுத்தியது. 3 பதக்கங்களையும் அந்நாட்டு வீரர்களே வென்றனர்.

தங்கப்பதக்கத்தை ரஷீத் ட்வேர் (20.14 வினாடி), வெள்ளியை வோர்ரன் (20.26), வெயர், வெண்கலத்தை லிவர் மோர் (20.32) கைப்பற்றினர்.

எங்கள் அணியின் நட்சத்திர வீரர் உசைன் போல்ட் இப்போட்டியில் பங்குபற்றாதபோதிலும் நாங்கள் முதல் மூன்று இடங்களை வென்றிருப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது என தங்கம் வென்ற ட்வேர் வெற்றியின் பின் குறிப்பிட்டார்.

பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் நைஜீரிய வீராங்கனை பிளஸ்சிங் (22.25 வினாடி) தங்கம் வென்றார். இவர் 100 மீற்றர் ஓட்டத்திலும் தங்கம் வென்றுள்ளார். வெள்ளியை ஜோடி வில்லியம்ஸ் (இங்கிலாந்து), வெண்கலத்தை பியன்கா வில்லியம்ஸ் (இங்கிலாந்து) ஆகியோர் வென்றனர்.

## 400 மீற்றர் ஓட்டத்தில் சாதனையுடன் தங்கம்



(கிளாஸ்கோ)

கொமன்வெல்த் விளையாட்டில் ஹம்ப்டன் மைதானத்தில் நேற்று முன்தினம் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்பந்தயம் நடைபெற்றது. இதில் கிரனடா நாட்டு வீரர் கிரானி ஜேம்ஸ் 44.24 வினாடிகளில் இலக்கை கடந்து புதிய போட்டிச் சாதனையுடன் தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார்.

இதற்கு முன்பு 1998ஆம் ஆண்டு மலேசிய கொமன்வெல்த் போட்டியில் வேல்ஸ் வீரர் இவான் தோமஸ் 400 மீற்றர் ஓட்டத்தில் 44.52 வினாடிகளில் இலக்கை கடந்ததே சாதனையாக இருந்தது. 16 ஆண்டு கால இச்சாதனையை கிரானி ஜேம்ஸ் முறியடித்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் வோன் நீ கெர்க் (44.68 வினாடி) வெள்ளிப்பதக்கம் பெற்றார். 21 வயதான கிரானி ஜேம்ஸ் லண்டன் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்று அசத்தியவர்.


உலக தடகளம், உலக ஜூனியர், உலக இளையோர், கொமன்வெல்த் இளையோர் அனைத்திலும் தங்கப்பதக்கம் வென்றுள்ள இவர், இப்போது கொமன்வெல்த்திலும் தனது பெயரை அழுத்தமாக பதிவு செய்திருக்கிறார்.

400 மீற்றர் ஓட்டத்தில் 43.18 வினாடிகளில் பந்தய தூரத்தை கடந்து உலக சாதனை படைத்திருக்கும் அமெரிக்காவின் மைக்கல் ஜோன்சனும் இந்த ஆட்டத்தை நேரில் பார்த்தார். இப்போது உங்களது அடுத்த இலக்கு ஜோன்சனின் சாதனையை தகர்ப்பது தானே என்று கிரானி ஜேம்சிடம் கேட்ட போது, அப்படியொரு எண்ணம் இல்லை. செப்ரெம்பர் மாதம் தான் எனக்கு 22ஆவது வயது பிறக்கிறது.

மைக்கல் ஜோன்சன் தனது 32ஆவது வயதில் தான் உலக சாதனையை படைத்தார். எனவே நான் இன்னும் 10 ஆண்டுகள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கிறது. என்னைப் பொறுத்த வரை தொடர்ந்து சிறப்பான திறனை வெளிப்படுத்த முயற்சிக்கிறேன். அவ்வளவு தான் என்றார்.

## பதக்கப் பட்டியல்

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| இங்கிலாந்து | 44 | 40 | 39 | 123 |
| அவுஸ்ரேலியா | 36 | 36 | 41 | 113 |
| கனடா | 27 | 13 | 25 | 065 |
| ஸ்கொட்லாந்து | 14 | 13 | 25 | 043 |
| இந்தியா | 13 | 20 | 14 | 047 |
| நியூசிலாந்து | 13 | 11 | 15 | 039 |
| தென்னாபிரிக்கா | 11 | 10 | 15 | 036 |



## களத்திற்கு வெளியில்...

சுழற்பந்து வீச்சாளர்களிடம் தடுமாறியதே இங்கிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்டில் நாங்கள் தோல்வியடையக் காரணம். அடுத்து வரும் போட்டிகளில் கள நிலைக்கு ஏற்ப எத்தனை பந்து வீச்சாளர்களுடன் களமிறங்குவது குறித்து முடிவெடுப்போம்.நல்ல கிரிக்கெட்டை நாங்கள் வெளிப்படுத்தவில்லை. வேகப்பந்து வீச்சில் நன்றாக ஆடினோம். ஆனால் சுழற்பந்து வீச்சாளர் மொய்ன் அலி ஆதிக்கம் செலுத்தி விட்டு விட்டோம். ஆடுகளத்தன்மை மாறியதால் அது அவருக்கு சாதகமாக அமைந்தது. என்றாலும் அவருக்கு எதிராக நாங்கள் சிறப்பாக விளையாடிருக்க வேண்டும். அறிமுக பந்துவீச்சாளர் பங்கஜ் சிங் உண்மையிலேயே நன்றாகத்தான் பந்து வீசினார். அவருக்கு 3 விக்கெட்டுக்கள் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் அதிர்ஷ்டம் இல்லை. எங்களது பந்து வீச்சில் இன்னமும் முன்னேற்றம் தேவை. 4 பந்து வீச்சாளர்களுடன் களம் இறங்குவது சரியான வியூகமா? என்பது குறித்து சிந்திக்கவேண்டும். இந்த டெஸ்டில் கூடுதலாக சேர்க்கப்பட்ட துடுப்பாட்ட வீரர் ஓட்டங்கள் குவிக்கவில்லை என்று சொல்ல முடியும். பின்னர் கூடுதலாக சேர்க்கப்பட்ட பந்து வீச்சாளர் விக்கெட் எடுக்கவில்லை என்று சொல்லலாம். எனவே இந்த விடயத்தில் நிறைய விவாதிக்க வேண்டியது அவசியம். ஆடுகளத்தன்மையின் அடிப்படையில் அடுத்த டெஸ்டில் எத்தனை பந்துவீச்சாளர்களுடன் களம் இறங்குவது என்பது குறித்து முடிவு செய்வோம்.

**டோனி (இந்திய அணிக் கப்டன்)**

இந்திய அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் நாங்கள் வெல்வதற்கு கூட்டு முயற்சியுடன் செயற்பட்டதே காரணம். அடுத்து வரும் போட்டிகளில் இதே உணர்வுடன் செயற்பட்டு தொடரை வெல்வோம். இப்போது தான் நிம்மதி என்பதை விட, மகிழ்ச்சி என்ற வார்த்தையை பயன்படுத்துவதே சரியாக இருக்கும். ஆட்டத்தின் முதல் நாளில் இருந்தே மிகச்சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினோம். எல்லாப்பகுதியிலும் எங்களது கை முழுமையாக ஓங்கியிருந்தது. வெற்றிக்கான பெருமை அனைத்தும் ஒட்டுமொத்த அணியினரையே சாரும். 11 வீரர்களும் தங்களது பங்களிப்பை அளித்தனர். சுழற்பந்து வீச்சாளர் மொய்ன் அலி அபரிமிதமான முன்னேற்றம் கண்டு வருகிறார். அவரது கடினமான உழைப்புக்கு கிடைத்த பரிசு இது.

**குக் (இங்கிலாந்து அணிக் கப்டன்)**

## இந்தியா படுதோல்வி


இந்தியாவிற்கு எதிரான மூன்றாவது டெஸ்டில் இங்கிலாந்து அணி 266 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டி நேற்று முன்தினம் இங்கிலாந்தின் சௌத்தாட்படனில் நிறைவடைந்தது.

இதில் முதல் இனிங்ஸில் இங்கிலாந்து அணி 7 விக்கெட் இழப்பிற்கு 569 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்தியது. இதனை தொடர்ந்து ஆடிய இந்திய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 330 ஓட்டங்களைப் பெற்றது.

239 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இந்நிலையில் 445 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய இந்திய அணி மெய்ன் அலி, அண்டர்சன் ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து. இறுதியில் இந்திய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதன் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இரு அணிகளும் ஒவ்வொரு வெற்றியைப் பதிவு செய்துள்ளன. போட்டியின் ஆட்டநாயகனாக அண்டர்சன் தெரிவு செய்யப்பட்டார்.

## விரைவில் இணைவேன்



என்னுடைய முதுகுக் காயம் குணமடைந்து வருகிறது, விரைவில் அணி வீரர்களுடன் இணைவேன் என பிரேசில் கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு சிகிச்சையை விரைவில் முடித்து 100 சதவீதம் உடற் தகுதியை விரைவில் எட்டுவேன். அடுத்த சீசனில் முழு உத்வேகத்துடன் களமிறங்குவேன். ஐரோப்பாவில் விளையாடுவது எப்போதும் என் கனவாகவே இருந்து வந்துள்ளது, இங்கும் நிறைய வெற்றிகளைக் குவிக்கவே விரும்புகிறேன்.

நான் உலகின் தலைசிறந்த வீரராக விரும்புகிறேன் என்பதை விட பிரேசில் வெற்றி பெற உதவும் ஒரு சிறந்த வீரராகவே இருக்க விரும்புகிறேன். ஜப்பானியப் பெண்கள் அழகாகவே இருக்கின்றனர். ஆனால் நான் ஒரு பிரேசில் நாட்டுக்காரன். எனவே பிரேசில் பெண்களைத்தான் எனக்குப் பிடிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கை அணி அறிவிப்பு

(கொழும்பு)

பாகிஸ்தான் அணிக்கு எதிராக நடைபெறவுள்ள டெஸ்ட் தொடருக்காக 15 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் மற்றும் இலங்கை அணிகளுக்கிடையில் 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையிலேயே 15 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

மெத்தியூஸ் தலைவராக செயற்படும் அதேவேளை, லகிரு திரிமன்னே உபதலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

அணி விபரம்: கௌசல் சில்வா, உபுல் தரங்க, குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன், கித்துருவன் விதானகே, நிரோசன் டிக்வெல்ல, ரங்கன ஹேரத், டில்ருவான் பெரேரா, சமிந்த ஏரங்க, சுரங்க லக்மல், சங்க வெலகெதர, தம்மிக்க பிரசாத், நுவான் பிரதீப்.





# விளையாட்டுச் செய்திகள்

## ஹென்றியரசர் கல்லூரி அணிக்கு அமோக வரவேற்பு

(இளவாலை)

தேசிய மட்ட கால்பந்தாட்டப் போட்டியில் கிண்ணம் வென்ற இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணிக்கு நேற்று முன்தினம் பாடசாலைச் சமூகத்தினால் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

கொழும்பு ஆனந்தாக் கல்லூரியினால் தேசிய ரீதியாக நடாத்தப்பட்ட அழைக்கப்பட்ட பாடசாலை அணிகளின் 17 வயதுப் பிரிவுக்கான கால்பந்தாட்டப் போட்டி அண்மையில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

அணிக்கு 7 பேர் கொண்ட இச்சுற்றுப்போட்டியில் இறுதிப் போட்டியில் பொலநறுவை றோயல் மத்திய கல்லூரி அணியை இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப் பற்றிக் கொண்டது. இந்நிலையில், கிண்ணம் வென்ற வீரர் களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலைச் சமூகத்தினால் நடாத்தப்பட்டது. இதன்போது, அணி வீரர்கள். தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து ஊர்வலமாக கல்லூரி வரையிலும் அழைத்து வரப்பட்டனர். இதில், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு வீரர்களைப் பாராட்டியதுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்தமை குறிப் பிடத்தக்கது. (48)

## மத்தியஸ்தர் சங்க பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 10ஆம் திகதி கொற் றாவத்தை அ.த.க. பாடசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் பா. முகுந்தன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கால்பந்தாட்ட நடுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், மத்தியஸ்தர் சங்கத்தின் ஆக்கபூர்வ செயற்பாடுகள் குறித்தும் விவாதிக்கப்படும் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (85)

## முல்லை வளர்மதியின் இறுதிப் போட்டிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வளர்மதி விளையாட்டுக்கழகம் நடாத் தும் கால்பந்து மற்றும் கரப்பந்தாட்டத் தொடரின் இறு திப் போட்டிகள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த வாரம் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன. கரப்பந்தாட்டத் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் முள்ளியவளை வித்தியா மற்றும் முல்லைத்தீவு விநாயகர் அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் வித்தியா அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறு திப் போட்டியில் முல்லைத்தீவு வளர்மதி அணியும் அல் அராக் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய வளர்மதி அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடை பெறும் இறுதிப் போட்டியில் வளர்மதி, வித்தியா அணிகள் மோதவுள்ளன.

இதேவேளை, கால்பந்தாட்டப் போட்டியின் முத லாவது அரையிறுதி ஆட்டத்தில் முல்லை சென் யூட் அணியும் செம்மலை உதயசூரியன் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய சென் யூட் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் அளம்பில் இளந்தென்றல் அணியும் முல்லை சென். அன்ரனீஸ் அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகை யில் முட்டிமோதிக் கொண்டன. இதன் விளைவாக இறுதி வரை இரு அணிகளாலும் ஒவ்வொரு கோலையே பெற்றுக்கொள்ள முடிந்தன. நிலையில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் அளம்பில் இளந்தென்றல் அணி 5-3 என்ற கோல் கணக் கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற் றது. இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும் இறுதிப் போட்டியில் சென். யூட், இளந்தென்றல் அணிகள் மோதவுள்ளன. இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தின ராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் வேத நாயகன் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)



## மாவட்ட மட்ட பெண்கள் மென்பந்து கிரிக்கெட் பருத்தித்துறை பிரதேச செயலகம் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்ட பெண்கள் மென்பந்து கிரிக்கெட் தொடரின் சம்பியன் பட்டத்தை பருத்தித்துறை பிரதேச செயலக அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட செயலகத்தின் விளையாட்டுப் பிரிவினால் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடர் கடந்த 27ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

அணிக்கு ஆறு பேர் கொண்ட இச்சுற்றுப் போட்டியில் கர வெட்டி, பருத்தித்துறை, சண்டிலிப்பாய், தெல்லிப்பளை, காரை நகர் ஆகிய பிரதேச செயலக அணிகள் பங்குகொண்டன.

ஐந்து ஓவர்களைக் கொண்ட இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பருத்தித்துறை பிரதேச செயலக அணி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அனுலா 22 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். ஆட்டமிழக்காது தர்சினி 22, சுகிர்தா 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அபிராமி ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 65 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலை யில் ஆடிய சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி 4.1 ஓவர் கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 23 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் கலை யரசி 15 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சுகிர்தா இரண்டு, தர்சினி, அனுலா ஆகீயோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இதன் மூலம் பருத்தித்துறை பிரதேச செயலக அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (93)

## இன்றைய ஆட்டம்

(ஆவரங்கால்)

ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும் கரப்பந் தாட்டப் போட்டித் தொடர் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முதல் நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் இன்றைய தினம் இரு போட்டிகள் நடைபெறவுள்ளன. முதல் போட்டியில் புத்தூர் தமிழ்மதி அணியும் தொண்டைமானாறு பொன் ஒளி அணி யும், இரண்டாவது போட்டியில் புத்தூர் கலைமதி அணியும் பருத்தித்துறை விவேகானந்தன் அணியும் மோதவுள் ளன. (93)





வலைப்பாடு புனித அன்னமாள் ஆலய பெரு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட கொன்சலஸ் அடிகளார் நினைவுக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் இரண்டாமிடத்தை மன்னார் சாவற்காடு கில்லறி அணி பிடித்துக் கொண்டது. இதில் கில்லறி அணிக்கு கிண்ணம் வழங்கப்படுவதையும், அணி வீரர்கள் விருந்தினர்களுடன் நிற்பதையும் காணலாம். வலைப்பாட்டில் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் மன்னார் பள்ளிமுனை சென். லூசியஸ் அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (29)

## முன்பள்ளி விளையாட்டு

(நவாலி)

நவாலி முருகானந்தா முன்பள்ளியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2.00 மணிக்கு முன்பள்ளி நிலைய முன்றிலல் நடைபெறவுள்ளது. நிலையத் தலை வர் கு. சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி மோகனதாஸ், சிறப்பு விருந்தினராக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றூபா உதயரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், பெரியோரை தவறாது கலந்து கொண்டு சிறார்களை உற்சாகப்படுத்துமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (85)

# காலம் கடந்த ஞானம்

– எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.

காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக மூன்று சர்வதேச நிபுணர்களை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 15ஆம் திகதி நியமித்தார்.

அத்தோடு விசாரணை ஆணைக்குழுவின் செயல் வரம்புகளை விஸ்தரித்து, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் இடம்பெற்ற போரின் இறுதிக் கட்டத்தில் சாதாரண மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பாகவும் ஆணைக்குழு விசாரணை செய்ய வேண்டும் என்று பணித்தார்.

இது மனித உரிமை மற்றும் பொறுப்புக் கூறல் என்ற விடயங்களில் அரசாங்கம் இதுவரை கொண்டிருந்த நிலைப்பாட்டிலிருந்து முற்றாக விலகிச் சென்றதையே காட்டுகிறது. போரின் போது சாதாரண மக்கள் கொல்லப்படவில்லை என்பதும் இலங்கையில் மனித உரிமை மற்றும் பொறுப்புக் கூறல் ஆகிய விடயங்களில் வெளிநாட்டவர்கள் தலையிட முடியாது என்பதுமே இதுவரை அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருந்தது.

போரின் போது எவரும் காணாமற் போகவில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, டெய்லி மிரர் பத்திரிகைக்கு கடந்த வருட ஆரம்பத்தில் வழங்கிய பேட்டியொன்றின் போதும் கூறியிருந்தார்.

அவ்வாறிருக்க, சர்வதேச நெருக்குதலின் காரணமாக காணாமற் போனோர் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவை ஜனாதிபதி, கடந்த வருடம் நியமித்தார். அந்த ஆணைக்குழுவுக்கு இப்போதைக்கு கிடைத்திருக்கும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை இருபதாயிரத்தை எட்டிவிட்டது.

அதேபோல், அரசாங்கம் இப்போது போரின் போது சாதாரண மக்கள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்பதையும் ஆராய வேண்டும் என காணாமற்போனோர் தொடர்பான ஆணைக்குழுவுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

அதாவது, போரின் போது சாதாரண மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்பது இப்போது சர்ச்சைக்குரிய விடயமல்ல. போரின் போது சாதாரண மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. அவர்கள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்பதையே சர்ச்சைக்குரிய விடயமாக அரசாங்கம் இப்போது கருதுகிறது.

அதன் பிரகாரம் போர் நடைபெற்ற காலத்தில், சாதாரண மக்கள் கொல்லப்படுவதற்கு ஏதுவான அடிப்படை காரணிகளையும் நிலைமைகளையும் ஆராய வேண்டும் என்றும் இக் கொலைகளால் சர்வதேச மனித உரிமை மற்றும் மனிதநேய சட்டங்களை மீறியதன் மூலம் இக் கொலைகளுக்கு ஏதாவது ஒரு நபரோ குழுவோ அல்லது நிறுவனமோ பொறுப்புக் கூற வேண்டுமா என்பதையும் ஆராய வேண்டும் என்றும் ஜனாதிபதி புதிய ஆணைக்குழுவிற்கு பணித்துள்ளார்.

சர்வதேச நெருக்குதல் தீவிரப்பட்டதன் பின்னர் தான் அரசாங்கம் விசாரணை நடவடிக்கை எடுத்துள்ளது. இதனை அரசாங்கம் போர் முடிவடைந்தவுடன் அல்லது குறைந்த பட்சம் 2010ஆம் ஆண்டாவது செய்திருந்தால் அமெரிக்கப் பிரேரணைகள் மூலம் இலங்கை மனித உரிமை மீறும் நாடாக சித்தரிக்கப்பட்டும் இருக்காது. சர்வதேச விசாரணையும் வந்திருக்காது.

அப்போது அவ்வாறு செய்ய அரசாங்கத்திற்கு எவ்வித தடையும் இருக்கவில்லை. அவ்வாறு போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களைப் பற்றி விசாரணை செய்வதை எதிர்ப்பார் என்று நினைக்கக் கூடிய அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் 2010ஆம் ஆண்டு ஞாயிறு லங்காதீப பத்திரிகைக்கு எழுதி வரும் "தொரமடலாவ" என்ற பத்தியொன்றில் அவ்வாறானதோர் உள்ளக விசாரணையொன்றை ஆதரித்து கருத்து வெளியிட்டு இருந்தார்.

எந்தவொரு போரின் போதும் சட்ட விரோத கொலைகள் மற்றும் கற்பழிப்புக்கள் இடம் பெறும் என்றும் 1971ஆம் ஆண்டு கிளர்ச்சியின் போது கதிர்காமத்தில் இடம்பெற்ற மனம்பேரி கொலையை விசாரித்து குற்றவாளிகளை தண்டித்ததைப் போல், புலிகளுக்கு எதிரான போரின் போதும் சட்டத்தை மீறியோருக்கு எதிராக விசாரணைகளை நடத்த வேண்டும் என்றும் அமைச்சர் ரணவக்க அந்த பத்தியில் கூறியிருந்தார்.

அரசாங்கம் போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களைப் பற்றி விசாரணை செய்ய வேண்டும் என்பதை ஏற்காததனால் இப்போது போர் குற்றங்களை விசாரிக்கும் இரண்டு விசாரணைகள் நடைபெறப்போகின்றன. ஒன்று மனித உரிமை உயர்ஸ்தானிகரின் அலுவலகத்தினால் நடத்தப்படும் விசாரணை. மற்றையது கடந்த வாரம் ஜனாதிபதி வழங்கிய பணிப்புரையின் பிரகாரம் காணாமற்போனோருக்கான ஆணைக்குழுவினால் நடத்தப்படப் போகும் விசாரணை.

ஒரு வகையில் இது அரசாங்கம் தாமே நிராகரித்த இவ் வருட ஜெனிவா பிரேரணையின் படி எடுத்த நடவடிக்கை என்றும் கூறலாம். ஏனெனில், அந்தப் பிரேரணையிலும் இது போன்று சர்வதேச விசாரணையொன்றும் தேசிய விசாரணையொன்றும் சிபாரிசு செய்யப்பட்டு இருந்தது.

இலங்கையில் மனித உரிமை நிலைமையை விசாரணை செய்வதற்காக எந்தவொரு வெளிநாட்டவரையும் நாட்டுக்குள் வர அனுமதிப்பதில்லை என அரசாங்கம் கூறிக்கொண்டிருந்தது. ஆனால், மக்ஸ்வெல் பரணகமவின் தலைமையிலான காணாமற்போனோர் தொடர்பான ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்காக மூன்று சர்வதேச நிபுணர்களை நியமித்ததன் மூலம் அரசாங்கம் அந்த நிலைப்பாட்டில் இருந்தும் விலகியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

நவநீதம்பிள்ளையின் விசாரணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கும் மூவரைப் போலவே, காணாமற்போனோர் தொடர்பான ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள மூவரும் சர்வதேச ரீதியில் பரபரப்பை ஏற்படுத்திய சில மோதல்களின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளில் சம்பந்தப்பட்டவர்களாவர்.



Sir Desmond de Silva　Prof David Crane　Sir Geoffrey Nice

அவர்களில் சேர் டெஸ்மண்ட் டி சில்வா பிரிட்டிஷ் சட்டத்தரணியும் சியரா லியோனில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேச விசாரணையில் சம்பந்தப்பட்டவருமாவார். அமெரிக்க அரசாங்கத்தின் அதிகாரியாகவிருந்த பேராசிரியர் டேவிட் கிரேன் என்பவரும் அதே விசாரணையில் சம்பந்தப்பட்டவராவார்.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டு இருக்கும் மற்றைய ஆலோசகரான பிரிட்டிஷ் பரிஸ்டர் பேராசிரியர் சேர் ஜெப்ரி நைஸ் முன்னாள் யூகோஸ்லாவியாவில் இடம்பெற்ற போர் குற்றங்களை விசாரித்த சர்வதேச நீதிமன்றத்தின் தலைவராகவிருந்தவர்.

டெஸ்மண்ட் டி சில்வா ஒரு காலத்தில் கண்டியில் வாழ்ந்த பிரபல அரசியல்வாதியான ஜோர்ஜ் ஈ.டி. சில்வாவின் பேரனாவார். இப்போது அவர் பிரிட்டிஷ் பிரஜையாக இருக்கிறார்.

இந்த நிபுணர்கள் குழுவின் விசாரணை அறிக்கையும் அனேகமாக அரசாங்கத்திற்கு சாதகமாக அமையும் என்று ஊகிக்க முடியாது.

அது அரசாங்கத்திற்கு சாதகமாக அமையுமா பாதகமாக அமையுமா என்பது வேறு விடயம். ஆனால் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்காக நடவடிக்கை எடுத்தமை காலம் கடந்த செயலாக இருந்த போதிலும் அதனை வரவேற்கத்தான் வேண்டும்.

# சொர்க்கம் என்பது ஒரு வகையான நூலகம் தான்!

**1995** செப்ரெம்பர் மாதம் கோணங்கியின் கல்குதிரை சிறப்பிதழ் வெளிவந்தது கேபோவுக்குத் தான். லத்தீன் அமெரிக்க உலகம் அன்போடு கபிரியல் கார்ஸியா மார்க்வெஸ் என்பவரை "கேபோ" என்று தான் குறிப்பிடும்.

மஜிக்கல் ரியலிசம்... 1982இல் வாங்கிய நோபல் பரிசு... பாப்லோ நெருடாவின் நண்பர்.. ..பிடல் காஸ்ட்ரோவின் நெருங்கிய நண்பர்.....

கல்குதிரைக்கு GABRIEL என்ற பெயரைக் குறிப்பிடுவதிலேயே ரொம்ப சிரமம் இருந்தது. அட்டையில் "காப்ரியல்". முதல் பக்கத்தில் "காப்ரியேல்" என்று சந்தேகத்துடன் இரண்டு விதமாக அச்சேற்றியிருந்தார்கள். இத்தனைக்கும் கபிரியல் என்ற கிறிஸ்தவப் பெயர் ஒன்றும் அன்னியமானது இல்லை.

பைபிளில் கன்னி மேரியிடம் காட்சி தரும் ஏஞ்சல் "I am Gabriel! The angel of God!" என்று தன்னை சுய அறிமுகம் செய்து கொள்கிற காட்சி உண்டு.



நவீன தமிழ் இலக்கிய கர்த்தாக்களுக்கு இவ்வளவு குழப்பம் கபிரியல் என்ற பெயரில் இருந்த போது கல்குதிரை அவர் படைப்புகளை ஆங்கில வழியாக தமிழில் மொழி பெயர்ப்பதில் எத்தகைய துயர அனுபவமாய் இருந்திருக்கும் என்பதை சொல்லவேண்டியதே இல்லை.

கபிரியல் கார்ஸியா மார்க்வெஸ் சிறப்பிதழ் கல்குதிரையின் 12ஆவது இதழ்.

GABRIEL என்ற பெயரை கப்ரியல் என்று எழுதுவதிலும் ஒரு சிக்கல் இருக்கிறது. "ப்" என்பது "ட" உச்சரிப்பாக இல்லாமல் ''P'' உச்சரிப்பாக அதாவது GAPRIEL என்று மாற வாய்ப்பு அதிகம் என்பதால் "கப்ரியல்" என்று எழுதாமல் "கபிரியல்" என்றே எழுத வேண்டியுள்ளது.

இப்போது காலச்சுவடு க்ளாசிக் வரிசை வெளியீடு "தனிமையின் நூறாண்டுகள்" நூலில் "காப்ரியேல் கார்சியா மார்க்கேஸ்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மொழிபெயர்ப்பு: சுகுமாரன்.

ஆல்பர் காம்யூ பெயரை ஒவ்வொருவரும் ஒவ்வோர் விதமாக உச்சரிப்பதைப் பற்றி சுந்தர ராமசாமி "ஜேஜே சில குறிப்புகள்" நாவலில் குறிப்பிட்டு விட்டு தன் அத்தை மகள் பெயர் காமு என்பதால் "நான் வசதிக்காக காமு என்று சொல்ல ஆரம்பித்தேன்" என்பார்.

லத்தீன் அமெரிக்கப் படைப்புகளை ஆங்கில மொழிபெயர்ப்பாகப் படிப்பது தான் ஓரளவு நல்லது. தமிழ் மொழி பெயர்ப்புகளில் படிப்பது தலைவிதி தான். ஆங்கிலம் தெரியாத வாசகர்களும், எழுத்தாளர்களும் தமிழ் இலக்கிய உலகில் மிக, மிக அதிகம். மொழி பெயர்ப்பே மூல ஆசிரியரை சிதைக்கிற விஷயம் என்கிறபோது ஆங்கில மொழிபெயர்ப்பின் வழியாக தமிழில் மொழிபெயர்த்து, அதை படிப்பதென்பது ஒருவகை "ஊனம்".

ஆல்பர் காம்யூ வின் "அந்நியன்" பிரெஞ்ச் மொழியிலிருந்து நேரடியாக மொழிபெயர்க்கப்பட்டதால் விசேஷமானதாய் இருந்தது.

நாகார்ஜுனன் பிரெஞ்ச் மொழியிலிருந்து ரைம்போ, போதலேர் கவிதைகளை ஆங்கில வழியாக அல்லாது நேரடியாக தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

சாதாரணமாக ஒரு முதியவர் இறப்பென்பது அனுபவச்செறிவு காரணமாக துயரமானது. ஒரு நூலகம் மறைந்து போவதைப் போன்றது. அப்படித்தான் மார்க்வெஸ் இறப்பும்.

போர்ஹே சொல்வார்: "சொர்க்கம் என்பது எப்படி இருக்கும்? எனக்கென்னவோ சொர்க்கம் என்பது ஒரு வகையான நூலகம் தான்" என்பார்.

87 வயதில் கபிரியல் கார்ஸியா மார்க்வெஸ் இறந்திருக்கிறார்.

ஒரு முதிய எழுத்தாளரின் மறைவு நிஜமாகவே மிக மகத்தான இழப்பு தான். ஒரு பிரமாதமான, பிரமிப்புக்குரிய அற்புத நூலகம் திடீரென்று காணாமல் போய் விடுகிறது என்றால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. வேதனையின் பரிமாணம் கூடிப்போய் விடுகிறது.

– R.P. ராஜநாயஹம் –

# உள்ளங்கை வழுக்கை

- இடைக்காடு இளைய பண்டிதன் -

மகாராஜா கிருஷ்ணதேவராயருக்கு ஒரு தெனாலி ராமன்!

சக்கரவர்த்தி அக்பர் பாதுஷாவிற்கு ஒரு பீர்பால்!

இவர்கள் போல, இந்த அரசவையிலும் ஒரு விகடகவி!

தனது சமயோசித - சாதுரியங்களினால் மன்னரின் பெருமதிப்பினைத் தொடர்ந்தும் தனக்கேயுரித்தாக தக்கவைத்திருந்த இவனே அதிகமதிகமாக - அடிக்கடி பரிசில்களையும், பாராட்டுதல்களையும் மன்னரிடத்தில் பெற்றுக்கொண்டுமிருந்தான்.



மனம் பொறுக்குமா மற்றப் புலவர்களுக்கு?! சமயம் பார்த்திருந்த அவர்கள், தமக்குள் கலந்து திர்மானித்ததொரு திட்டத்துடன் இவனை மட்டம் தட்டுவதற்கென நாளும் குறித்தனர். மன்னரும் வேடிக்கை விருப்புடன் அவர்களுக்கு இசைந்து கொடுத்தார்.

அந்த நாளும் வந்தது; அரசவை கூடியது. விகடகவியை நோக்கி வினாக்களைக் தொடுத்தனர் அப்புலவர்கள்.

"விகடகவியாரே! உமது உள்ளங்கைகளில் உரோமங்கள் ஏன் இல்லாதிருக்கின்றன?"

"மன்னர்பிரானிடம் அடிக்கடி தானங்கள் பெற்றுவருவதனால் அவ்விடங்கள் தேய்ந்து தேய்ந்தே அந்த உரோமங்கள் கொட்டியிருக்கும்" - சற்றும் தாமதியாது பதிலிறுத்தான் விகடகவி.

திகைத்து நின்ற பொறாமைப் புலவர்கள் தம்மைச் சுதாகரித்துக் கொண்டு - "மன்னர் பிரானின் உள்ளங்கைகளும் வழுக்கையாகத் தானே காட்சியளிக்கின்றன?! அது எப்படியோ?" - என, இடக்கு முடக்காக அடுத்துக் கேட்டனர்.


"தானங்களை அள்ளி அள்ளித் தருவதனாற் போலும் அவை அவ்விதம் ஆகிவிட்டன" - தயக்கமின்றி வெளிவந்தது விகடகவியின் பதில்.

தடுமாறித் தத்தளித்து, தம்முள் குசுகுசுத்து விட்டு - "சரி! இதற்குத் தக்க விடைதாரும் பார்க்கலாம். நீரோ தவறாது தானம் பெறுகிறீர், மன்னரும் தாராளமாய்த் தருகிறார். எமக்குத்தான் அந்தப் பாக்கியம் கிடையவே கிடையாதே?! இதோ...! எமது உள்ளங்கைகளிலும் உரோமம் ஒன்றுகூட இல்லையே... ஏன் அப்படி?" - என்றனர் அவர்கள் வீராப்பாக,

"ஓகோ! அதுவா? நான் மன்னர்பிரானிடமிருந்து தானம் பெறுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நீங்கள் மனம் வெதும்பி, உங்கள் உள்ளங்கைகளைக் ஒன்றோடொன்று பிசைந்து பிசைந்து சூடேற்றிக் கொள்வதனால், அங்குள்ள உரோமங்கள் அத்தனையும் உஷ்ணத்தால் உதிர்ந்து போயிருக்கலாம் அல்லவோ?!" - எனக்கூறி முடித்தான் விகடகவி.

வெட்கிய அந்தப்புலவர் குழாம், மன்னர் முன்னிலையில் விகடகவிக்கும் தலைசாய்த்தது.

அவ்வித்தக விகடகவிக்கு விலை மதிப்பிலா விருதும் வாய்த்தது.




# ஆங்கிலத் திறன் வளர்க்க விளையாட்டு!

கூகுள் அண்மையில் இன்னும் ஒரு குரோம் சோதனைத் தளம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. இந்த தளத்தின் மூலமாக, ஆங்கிலச் சொற்களின் எழுத்துக்கள் சார்ந்த நம் திறனை சோதனை செய்து கொள்ளலாம். இது Spell Up என அழைக்கப்படுகிறது. இது ஒரு விளையாட்டு விளையாடுவதைப் போன்ற அனுபவத்தைத் தருகிறது. இருப்பினும் இதனை ஆங்கிலச் சொற்களைக் கற்றுக் கொள்ளும் அனுபவமாகவும் எடுத்துக் கொள்ளலாம்.


இந்தத் தளம் எப்படி செயற்படுகிறது என்று காட்டிட சிறிய வீடியோ படம் ஒன்று http://googleblog.blogspot.com/2014/05/speak-and-learn-with-spell-up-our.html என்ற முகவரியில் உள்ள இணைய தளத்தில் கிடைக்கிறது. ஆர்வமுள்ளவர்கள் முதலில் இதனைக் காணலாம்.

இந்த விளையாட்டு உள்ள இணைய தளம் https://spellup.withgoogle.com/ என்ற முகவரியில் இயங்குகிறது. இந்த தளம் சென்றவுடன், விளையாடுவதற்கு ஸ்பீக்கர் மற்றும் மைக் ஆயத்த நிலையில் இருக்க வேண்டும். அவை இல்லை என்றால், விளையாட்டினை மேற்கொள்ள நமக்கு அனுமதி கிடைக்காது. கணனி அல்லது மடிக்கணனியில் இதனை விளையாடுவதை விட, ஸ்மார்ட் போனில் விளையாடுவது எளிதாக உள்ளது.

ஆங்கில மொழியை முதல் மற்றும் இரண்டாவது மொழியாகக் கொண்டவர்களுக்கு, விளையாட்டு விளையாட்டாக அதன் சொற்கள், அவற்றின் எழுத்து ஆகியன குறித்து அறிந்துகொள்ள இந்த தளம் மிகவும் உதவும். ஸ்பெல்லிங், எப்படி உச்சரிப்பது, இல்லாத எழுத்தைக் கண்டுபிடிப்பது எனப் பல வகைகளில் இதனை விளையாடலாம். சரியான விடை அளிக்க, அளிக்க பக்கத்தில் ஒரு கோபுரம் எழுப்பப்படும். தவறான விடை தரும்போது, அந்த கோபுரம் சரியும். உங்களின் ஆர்வத்தைத் தூண்டி, ஆங்கிலச் சொற்களைக் கற்றுக் கொள்வதனை எளிதாக்குகிறது இந்த தளம்.

# விண்டோஸ் 7 விந்தைகள்!

விண்டோஸ் 7 சிஸ்டம் கொண்டுள்ள பல விஷயங்கள் இன்னும் பலருக்குத் தெரியாமலேயே உள்ளன. பொதுவாகவே, கம்ப்யூட்டர் இயக்கத்தில், Undo cumented Features எனச் சில உண்டு. இவ்றறைப் பற்றி ஒரு சிலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்புண்டு. மேலும், இந்த சிஸ்டத்தினை வடிவமைத்தவர்கள், அவர்களுக்கு மட்டுமே தெரிந்திடும் வகையில் சில விசேஷ அம்சங்களை உருவாக்கி வைத்திருப்பார்கள். அவற்றை Easter Eggs என அழைப்பார்கள். அப்படிப்பட்ட சில வசதிகள் குறித்தும் Easter Eggs குறித்தும் பார்க்கலாம்.




### சில ஷோர்ட்கட் கீகள்

1. புரோகிராமிற்கான ஐகொன் ஒன்றில் கிளிக் செய்யும் முன், Shift கீயை அழுத்திக் கொண்டு கிளிக் செய்தால், அந்த புரோகிராமின் விண்டோ ஒன்று ஏற்கனவே திறந்து செயற்பட்டுக் கொண்டிருந்தாலும், புதியதாக, ஒரு செயற்பாட்டு விண்டோ திறக்கப்படும். எடுத்துக் காட்டாக, வேர்ட் புரோகிராமினைத் திறந்து, டொகுமெண்ட் ஒன்றில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். புதிய விண்டோ ஒன்றில், புதிய டொகுமெண்ட் ஒன்றைத் திறக்க வேண்டும் எனில், இவ்வாறு செய்திடலாம். புதிய வேர்ட் விண்டோ ஒன்று திறக்கப்படும்.

2. ஐகொன் அழுத்துகையில், Shift + Ctrl கீகளை அழுத்திக் கொண்டு செய்தாலும், மேலே கூறிய செயல்பாடு மேற்கொள்ளப்படும். இதில் என்ன வேறுபாடு என்றால், இந்த விண்டோ, முற்றிலும் Administrator உரிமையுடன் திறக்கப்படும்.

3. Ctrl பட்டனை அழுத்திக் கொண்டு, இதே போல புரோகிராம் ஐகொன் ஒன்றில் கிளிக் செய்தால், திறந்து செயல்படுத்தப்படும் விண்டோக்களில், இறுதியாகத் திறந்த விண்டோ திறக்கப்படும்.

திறக்கப்பட்ட விண்டோவின் மேல் பட்டியில் கேர்சரை வைத்து கிளிக் செய்தால், அது மினிமைஸ் செய்யப்படும். இதனை மொனிற்றர் திரையில் எங்கு வேண்டுமானாலும் கொண்டு சென்று அமைக்கலாம். இதன் அளவினை நாம் விரும்பும் வகையில் சிறிதாக்கலாம் பெரியதாகவும் அமைக்கலாம். இதனை மவுஸ் தொடாமலும் அமைக்கலாம்:

விண்டோஸ் Logo கீயினை அழுத்திக் கொண்டு Up அம்புக்குறியினை அழுத்தினால், விண்டோவின் அளவைப் பெரிதாக்கலாம்.

அதேபோல, விண்டோஸ் Logo கீயினை, வலது அல்லது இடது அம்புக் குறியுடன் அழுத்த, விண்டோ திரையின் இடது அல்லது வலது பக்கமாக நகர்த்தப்படும்.

4. GodMode: இது ஒரு மிக மிகப் பயனுள்ள Tool. விண்டோஸ் 7 சிஸ்டத்தின் இயக்க செயல்பாடுகள் அனைத்தையும் இதன் மூலம் Setup செய்திடலாம். ஏழத்தாழ 270 சிஸ்டம் அமைப்பு செயல்பாடுகளை இதன் மூலம் மேற்கொள்ளலாம். இதற்கு டெஸ்க்டொப்பில், புதிய போல்டர் ஒன்றை உருவாக்கவும். இதன் பெயராக "GodMode.{ED7BA470-8E54-465E-825C-99712043E01C}" என்பதனை அமைக்கவும் (மேற்கோள் குறிகள் இல்லாமல்). இந்த போல்டரின் ஐகொன் படம் மற்றவற்றிலிருந்து சற்று வித்தியாசமாக நீல நிறத்தில் அமைந்திருக்கும். Control panel க்கான ஐகொன் போலக் காட்சி அளிக்கும். பின்னர் அந்த போல்டரைத் திறந்து பார்க்கவும். கம்ப்யூட்டர் இயக்க செயல்பாடுகள், ஏறத்தாழ 45 பிரிவுகளில் பிரிக்கப்பட்டுத் தரப்படும். Administrative Tools, Fonts, Windows Firewall, Update, User Accounts எனப் பல பயனுள்ள பிரிவுகளில், 270க்கும் மேற்பட்ட Set up செயல்பாடுகளுக்கான லிங்க் கிடைக்கும். இவற்றில் தேவையானதில் கிளிக் செய்து, நாம் புதிய Set up வழியை மேற்கொள்ளலாம். இந்த Tool அதன் பெயருக்கேற்ப, நம்மை நம் கம்ப்யூட்டரின் கடவுளாக மாற்றுகிறது.

5. பைல்களை சுவடு இன்றி அழிக்க: நாம் அலுவலகத்தில் பயன்படுத்திக் கொண்டிருக்கிற கம்ப்யூட்டரை, அடுத்து நம் இருக்கையில் அமர்ந்து செயல்படப் போகும் இன்னொருவரிடம் தர வேண்டியதிருக்கும். நம் கம்ப்யூட்டரில் நம் சொந்த பைல்களைப் பதிந்து வைத்திருக்கலாம். என்னதான் அழித்தாலும், Recuva போன்ற புரோகிராம்களால், அவற்றை மீண்டும் பெற்றுவிடலாம். இவ்வாறு இல்லாமல் சுவடே இல்லாமல், மொத்தமாக, முழுமையாக நீக்க விண்டோஸ் 7 வழி ஒன்று கொண்டுள்ளது.

இதற்கு Command Prompt செல்லவும். Start தேடல் கட்டத்தில் cmd என டைப் செய்து எண்டர் அழுத்தினால், இந்த கட்டளைப் புள்ளி கொண்ட விண்டோ கிடைக்கும். இதில் "cipher /w:C" என டைப் செய்து Enter தட்டவும். அழிக்கப்பட்ட அல்லது அழிக்கப்படாத பைல்கள் அனைத்தும் முழுமையாக நீக்கப்படும். இந்தக் கட்டளையை எந்த ட்ரைவில் உள்ள பைல்களுக்கு என செயல்படுத்துகிறோமோ, அதற்கான ட்ரைவ் எழுத்தினை, கட்டளையில் அமைக்க வேண்டும்.

### இன்னும் சில ஷோர்ட் கட் கீகள்:

உங்கள் கம்ப்யூட்டரில் நிறைய விண்டோக்கள் திறந்த நிலையில் உள்ளதா? ஒவ்வொன்றிலும் ஏதேனும் புரோகிராம் ஒன்று திறக்கப்பட்டு, பைல் ஒன்று செயல்பாட்டில் உள்ளதா? அல்லது எந்த செயல்பாடும் இன்றி திறக்கப்பட்ட நிலையில் உள்ளதா? இவற்றை மூடிட, Windows Logo + Home என்ற கீகளை அழுத்தவும். ஒவ்வொரு முறை அழுத்தும்போதும், ஒவ்வொரு விண்டோ மூடப்படும். நீங்கள் அப்போது டெஸ்க்டொப்பில் திறந்து வைத்து செயல்படும் விண்டோ மட்டும் திறந்தபடியே இருக்கும்.

திரையில் உள்ள சிறிய எழுத்துக்களைப் பார்க்க இயலவில்லையா? விண்டோஸ் கீயை அழுத்திக் கொண்டு, Num Lock பட்டன் அழுத்திய நிலையில் + கீயை அழுத்தவும். விண்டோஸ் இயக்கத்தின் Magnifire செயல்படத் தொடங்கும். முதலில் இருந்த விண்டோவிற்கு மேலாக ஒரு சிறிய வீண்டோ காட்டப்படும். பழைய விண்டோவில் கேர்சர் இருக்கும் பகுதி மட்டும் இங்கு பெரிது படுத்தப்பட்டு காட்டப்படும். மைனஸ் கீ அழுத்தினால், காட்டப்படும் அளவு குறைத்துக் காட்டப்படும்.

# மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

அன்ன சத்திரங்கள் ஆயிரம் அமைத்தல், ஆலயம் பதினாறாயிரம் அமைத்தல் முதலான தர்ம நெறிகள் பல உள்ளன. தர்மங்களில் சிறந்த தர்மம் எழுத்தறிவில்லாத ஏழை ஒருவனுக்கு எழுத்தறிவினை ஊட்டுதலே எனப் பாரதியார் குறிப்பிடுகின்றார்.

எழுத்தறிவித்தலை நோக்கமாகக் கொண்டு பாடசாலைகள் அமைக்கப்பட்டன. அப்பாடசாலைகளில் ஏழைகள் கல்வியைப் பெற்றுக்கொள்வதை நோக்கமாகக் கொண்டு இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. இலவசக் கல்வியின் தந்தை என அழைக்கப்பட்ட கன்னங்கரா அவர்களின் இலவசக் கல்வித் திட்டம் தற்போது அமுலில் உள்ளது. ஆனால் தற்போது இலவசக் கல்வி நடைமுறையில் உள்ளதா என்று கேள்வியை எழுப்பும் வகையில் பாடசாலைகளில் பணம் பறிப்பு செயற்பாடுகள் அதிகரித்து வருவதை எவரும் கண்டு கொள்வதாக தெரியவில்லை.

பாடசாலைகளில் ஒரு மாணவனிடம் எவற்றுக்கெல்லாம் பணம் அறவிடப்படுகின்றது என்பதை ஒரு பெற்றோர் கவலையோடு தெரிவிக்கின்றனர்.

பாடசாலைகளில் இடம்பெறுகின்ற விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள், கலை விழாக்கள், பரிசளிப்பு விழாக்கொண்டாட்டங்கள் என்ற வகையில் பணம் வசூலிக்கப்படுவதாக அந்தப் பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

இது ஓரளவு பரவாயில்லை மின்சாரக் கட்டணங்களை செலுத்துவதற்கும் பாடசாலையை அழகுபடுத்துகின்றோம் என்ற பேரோடு வசூலிக்கிப்படுகின்ற பணம் தொடர்பாக இன்னொரு பெற்றோர் கவலை கொள்கின்றார்.
பாடசாலைகளில் வர்ணப் பூச்சுக்களை பூசுவதற்கு பணம் அறிவிடப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது.

ஆம் பாடசாலைகளில் பாடசாலைக்கு வெளியில் சமயம் என்ற பெயரில் ஆலயங்களுக்கான நன்கொடை என்ற வகையிலும் பணம் வசூலிக்கப்படு கின்றது இது மாணவர்களுக்கு மாத்திரம் அலல ஆசிரியர்களும் இத்தகைய பண வசூலப்பு பொறிக்குள் சிக்கிக் கொள்கின்றனர்.

கடவுளின் பெயரில் இத்தகைய பண வசூலிப்பு இடம்பெறுவதனால் ஆசிரியர்கள், பெற்றோர் கடவுளால் தமக்கு ஆபத்து ஏதேனும் ஏற்பட்டு விடுமோ என்ற கவலையில் தம்முடைய தேவைகளில் ஒன்றைக் குறைத்து பணத்தை செலுத்துகின்ற தன்மையைக் காணமுடிகின்றது.

சில பாடசாலைகள் பிரபல்யமான ஆலயங்களின் திருவிழாக்களைப் பொறுப்பேற்று செய்வதற்காகவும் பணத்தை வசூலிக்கினறன. இங்கு பாடசாலையின் ஒருசிலர் பெயர் வாங்கிக் கொள்வதற்காக குறிப்பிட்ட தொகையை விட உயர்வான பணத்தொகையை மாணவர்களிடமிருந்து அறவிடுகின்றார்கள்.

> பாடசாலைகளில் இடம் பெறுகின்ற விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் கலை விழாக்கள் பரிசளிப்பு விழாக் கொண்டாட்டங்கள் என்ற வகையில் பணம் வசூலிக்கப் படுவதாக அந்தப் பெற்றோர் கவலை தெரிவித்தனர். இது ஓரளவு பரவாயில்லை மின் சாரக் கட்டணங்களைப் செலுத்துவதற்கும் பாட சாலையை அழகுபடுத்து கின்றோம் என்ற பேரோடு வசூ லிக்கிப்படுகின்ற பணம் தொடர்பாக இன்னொரு பெற் றோர் கவலை கொள்கின்றார். பாடசாலைகளில் வர்ணப் பூச்சுக்களை பூசுவதற்கு பணம் அறிவிடப்படுவதாகவும் குறிப் பிடப்படுகின்றது.

# பாடசாலைகளில் தவணைக்கட்டணம் கூடுதலாக பெறுவது தொடர்பாக

கோயில் திருவிழாக்களுக்கு இத்தகைய பணங்கள் அறவிடுவதைக் காட்டிலும் இன்னொரு வகையான வேதனையான பண அறவீடும் இடம்பெறுகின்றது.

ஆலயம் அமைப்பதிலும் பாடசாலை அமைத்தல் அறம் என பாடிய பாரதியார் செய்த புரட்சியின் வழி நின்று பாடசாலைக்குள் ஆலயத்தை அமைப்பதற்கான பண வசூலிப்புகளும் இடம்பெறுகின்றன.

ஆலயம் ஒன்று வழிபடுவதற்கு தேவையானதே தறபோது இருக்கின்ற ஆலயங்களே வழிபடுவதற்கு போதுமான நிலையில் புதிதாக ஆலயங்கள் அதுவும் பாடசாலைகளில் நிறுவுவது ஏனென்று புரியவில்லை.

பாடசாலையில் ஆலயத்தை அமைத்து பெயர் பெறுவதை நோக்காகக் கொண்டு இத்தகைய ஆலயங்கள் அமைக்கப்படுகின்றன.

இதனால் எதிர்காலத்தில் பாடசாலைகளில் அமைக்கப்பட்ட ஆலயங்களுக்கு திருவிளாக்கள் நடைபெறுகின்ற சூழ்நிலையும் உருவாகலாம். கொடியேற்றம் முதல் தீர்த்தோற்சவம் வரையான திருவிழாக்களும் இடம்பெறலாம் அதற்கும் பணம் அறவிடலாம்.

இந்து சமயத்தின் நம்பிக்கையை கோட்பாட்டை குறை கூறுவது இக் கட்டுரையின் நோக்கம் அல்ல பாடசாலைகளில் இத்தகைய பெரும் எடுப்பிலான ஆலயங்கள் அமைக்கப்படுதல் பொருத்தமானதா என்பதே கேள்விக்குரிய விடயமாகும்.

இந்துப் பண்பாட்டை வளர்க்கவும் பேணவும் இத்தகைய ஆலயங்கள் வழிவகுக்கும் என வாதிடலாம் ஆனால் இத்தகைய சூழ்நிலையில் பாடசாலைகளில் ஏனைய சமயங்களைச் சேர்ந்தவரும் தமது சமய தெய்வங்களுக்கு ஆலயம் அமைக்க முன்வந்தால் நிலைமை என்னவாகும்?

பாடசாலை மாணவன் ஒருவனிடத்தில் ஒருகுறிபபிட்ட தொகைப் பணத்தை மட்டுமே அறிவிடலாம் என சுற்றறிக்கைகள் கூறுகின்றன.

இவை அறிக்கைகளாக மட்டுமே காணப்பட பல்தேசிய கருத்தாகவும் பணம் பாடசாலைகளில் அறவிடப்படுகின்ற தன்மைகளை தற்போது காணக்கூடியதாக உள்ளது.

இதன் மூலம் பண சக்தி குறைந்த ஏழைகளுக்கான இலவசக் கல்வி நடைமுறையானது எதிர்காலத்தில் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட போகின்றது என்பதில் கேள்வியே எழுகின்றது.

பாடசாலைகளில் இத்தகைய பண அறவீடுகள் இடம்பெறுகின்ற போது ஆசிரியர் சங்கங்களில் இதுபற்றி அக்கறை கொண்டு சிறு அறிக்கைகளை மட்டும் விட்டுக்கொண்டு இருப்பதையே காணமுடிகின்றது.

அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதற்கு ஆசிரிய சங்கங்களில் தூண்டுதல் அளிப்பதாக தெரியவிலலை.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பில் விழிப்பாக இருப்பதாக தெரியவல்லை.

அதிகாரிகள் மட்டத்தில் இந்த விடயம் தெரியாமல் இல்லை. இக்கட்டுரையில் குறிப்பிடுவதற்கு அப்பால் பல பண அறவீடுகள் தொடர்பாக அவர்கள்அறிந்துள்ளார்கள்.


ஆனால் அவர்கள் இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதில் அக்கறை கொண்டவர்களாக இல்லை தெரிந்தும் தெரியாமலும் உள்ள நிலையே காணப்படுகின்றது.

பெற்றோர் மத்தியில் பாடசாலைகளில் பண அறவீடு தொடர்பில் விழிப்பு ஏற்பட்டு விட்டது அவர்கள் இதனை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க முயன்றால் ஏற்படும் விளைவுகளை உணர்ந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும்.


- பூஞ்சிட்டு





**அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் ஐவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.**





(i) 18
(ii) 16
(iii) 14




(i) 04
(ii) 06
(iii) 08




(i) 23
(ii) 25
(iii) 28




(i) 8 (ii) 7 (iii) 20 (iv) 6

| | |
|---|---|
| 13 | 15 |
| 17 | 19 |

| | |
|---|---|
| 14 | 16 |
| 18 | 20 |

| | |
|---|---|
| 11 | 13 |
| 24 | 26 |

| | |
|---|---|
| 18 | 20 |
| ? | 36 |

(i) 26 (ii) 34 (iii) 22 (iv) 33

**26.07.2014 வெளியான புதிர்ப்போட்டியின் விடைகள்**

1) (iii)
2) (ii)
3) (iii)

**அனுப்பவேண்டிய முகவரி**
**தினமுரசு**
**புதிர்ப்போட்டி**
**இல: ------- 373,**
**பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் : சி.சபிதா
தரம் :- 12
பாடசாலை:- யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

பெயர் :- ச.றொக்சன்
தரம் :- 9
பாடசாலை:- யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி.

பெயர் :- ச.றொபேக்கா
தரம் :- 8
பாடசாலை:- யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி.

பெயர் :- ஸ்ரீ.கௌஷிகன்
தரம் :- 7
பாடசாலை:- யா/ இந்துக் கல்லூரி.

பெயர் :- சி.சுபர்ணா
தரம் :- 5
பாடசாலை:- யா/ வல்வை மகளிர் மகா வித்தியாலயம்.

பெயர் :- இ.கஜிந்தன்
தரம் :- 6
பாடசாலை:- கி/ தருமபுரம் மத்திய கல்லூரி.

பெயர் :- இ.கஜிந்தன்
தரம் :- 6
பாடசாலை:- கி/ தருமபுரம் மத்திய கல்லூரி.

# வருடாந்த ஆசிரியஇடமாற்றம் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்து

வடமாகாண கல்வித்திணைக்களத்தின் NP/20/ET/F/2/DT இலக்க 17/07/2014 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் வலிகாமம் வலயத்திற்குள் இடமாற்றம், வலயங்களுக்கிடையிலான (மாவட்டங்களுக்குள்ளான) மற்றும் மாவட்டங்களுக்கிடையிலான இடமாற்றங்கள், மாகாணங்களுக்கிடையிலான இடமாற்றங்கள் என்பன மேற்கொள்ளப்படவுள்ளதாக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

வருடாந்த இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க விரும்பும் ஆசிரியர்கள் தமக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து அதிபர் ஊடாக வலயக்கல்வி அலுவலக நிர்வாகப்பிரிவில் சமர்ப்பிக்க வேண்டும்.

வலயத்துக்கான இடமாற்றம் தொடர்பில் ஏழு வருடங்களுக்கு மேல் ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாக கடமையாற்றிய ஆசிரியர்கள் இடமர்றறம் செய்யப்படல் வேண்டும் இவ்விடமாற்ற வயதெல்லை 55 வருடங்கள் ஆகும், இடமாற்றம் யாவும் 01/01/2015 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதால் ஆசிரியர்களது வயது, சேவைக்காலம் என்பன 31/12/2014 ஆம் திகதி வரை கணிப்பிடப்படும், சேவைக்காலக் கணிப்பீட்டின் போது பின்வரும் சேவைக்காலங்கள் நியமனக் கடிதத்திற் குறிப்பிடப்பட்டுள்ள கட்டாய சேவைக்காலத்துடன் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது. (சேவைக்காலம் குறிப்பிடும் போது கீழ்வரும் விடயங்கள் தனித்தனியே காட்டப்பட வேண்டும்), ஆசிரியரின் பயிற்சி மற்றும் விடுமுறைக்காலங்கள், ஆசிரியர் தனது நலன் கருதி பெற்றுக்கொண்ட தற்காலிக இணைப்புக்கள், நிபந்தனை அடிப்படையிலான இடமாற்றங்கள் என்பன அவசியமானது,

விண்ணப்பங்கள் யாவும் முறையான விண்ணப்பப்படிவத்தில் 3 பிரதிகளில். தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும் .விண்ணப்பம் முழுமையாகப் பூரணப்படுத்தப்பட்டிருப்பதோடு, காரணங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் முதல் நியமனக் கடிதப் பிரதியும் சான்றுப்படுத்தக்கூடிய ஆவணங்களும் இணைக்கப்பட வேண்டும் (விண்ணப்பங்கள் கோட்டக் கல்வி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளவும்), நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பான விபரங்கள் விண்ணப்பதாரிக்கு அறியத்தரப்படும், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் குறித்த நிரல் முறையூடாக வலயக்கல்வி அலுவலக நிர்வாகப் பிரிவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் விண்ணப்ப முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் வீண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# "காந்தீயம்" வெளிவந்துள்ளது

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் வெளியீடான 'காந்தீயம்' பத்திரிகையின் யூலை - ஆகஸ்ட் மாத இதழ் வெளிவந்துள்ளது.

இதில் காந்தியடிகளின் 66 ஆவது சிரார்த்த தின நிகழ்வில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி "சமகாலக் கல்வியில் காந்தியச் சிந்தனைகள்" என்ற தலைப்பில் ஆற்றிய நினைவுப் பேருரையின் சுருக்கம், காந்தியம் தான் உலகு உய்யவழி என்ற தலைப்பிலான கட்டுரை, நூல் அறிமுகம், காந்தி சமாதான விருதுபெறும் இலங்கையர் என்ற தலைப்பிலான ஆசிரியர் தலையங்கம், மகாத்மாகாந்தியினுடைய கல்விச்சிந்தனைகள் சுயதேவைப்பூர்த்திக்கான பரிந்துரைகளே என்ற தலைப்பிலான ஆக்கம், பல்லவராயன் கட்டில் இடம்பெற்ற காந்தியதிருமணம் பற்றிய குறிப்பு, மில்க்வைற் கனகராசா பற்றிய கட்டுரை, சாத்துவிகம் பேணிய அஹிம்சாவாதி என்ற தலைப்பிலான மணிமன்றனின் கவிதை, கலாநிதி ஆரியரட்ணாவுக்கு காந்தி சமாதான விருது கிடைத்தமை பற்றிய செய்தி என்பன இவ்விதழை அலங்கரிக்கின்றன.

இவ்விதழின் இலவச பிரதி ஒன்றைப் பெற விரும்பும் அன்பர்கள் ரூபா 10.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரி எழுதப்பட்ட நீண்ட தபாலுறையை ஆசிரியர் 'காந்தீயம்' இல.774,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ள முடியும். என்று காந்தீயம் பத்திரிகை ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி தெரிவித்துள்ளார்.

# கட்டடத் தொகுதியை பயன்படுத்த கோரிக்கை

(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட கொடிகாமம் பருத்தித்துறை வீதி பஸ்தரிப்பிடத்திற்கு மேலே உள்ள முதலாவது மாடி கட்டடத்தொகுதி பயன்படுத்தாமல் உள்ளதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இக்கட்டட தொகுதியில் உள்ள பகுதி பொது மக்கள் கடை அமைப்பதற்கு கொடுத்தால் பெரும் தொகை பணம் அறவிடப்பட்டு அதன்மூலம் பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தலாம் எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே பயன்பாட்டிற்கு உகந்ததாக உள்ள கட்டடத் தொகுதியினை வியாபார நடவடிக்கைகளுககு அல்லது இலாபம் ஈட்டக்கூடிய வகையில் பொதுமக்களுக்கு வழங்கவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)



யாழ். நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலையில் அண்மையில் நடைபெற்ற ஆடிப்பிறப்பு விழாவில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஆடிக்கூழ் பரிமாறுவதைக் காணலாம்.

# அறநெறிப்பாடசாலை ஆரம்பித்து வைப்பு

இந்துசமயப்பிள்ளைகளின் நன்மைகருதி உடுவில் தென்கிழக்குப் பகுதியிலுள்ள வைரவர் ஆலயத்தில் இலக்சுமி அறநெறிப் பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அறநெறிப்பாடசாலையினை மருதனார்மடம் ஸ்ரீ ஆஞ்சநேயர், ஆலய அறநெறிப்பாடசாலையின் அதிபர் என்.பி.ஸ்ரீந்திரன் ஆரம்பித்து வைத்துள்ளார்.


இந்த ஆரம்ப வைபவத்தில் ஜே/183 உடுவில் தென்கிழக்குப்பிரிவில் கிராமஉத்தியோகத்தர் பிரபாகரன் இக்கிராமத்தின் அண்ணா சனசமூக நிலைய உறுப்பினரும் சமூக சேவகியுமான திருமதி.துரைசிங்கம் இராஜலக்சுமியும் விருந்தினர்களாக கலந்து கொண்டிருந்தனர்.

இந்த வைபவத்தில் பெருந்தொகையான மாணவர்களும் ஊர்மக்களும் கலந்து கொணடனர்.

அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தார். கிராம உத்தியோகத்தர் இக்கிராமத்தில் இந்துப் பிள்ளைகளிடத்தில் எமது இந்துசமயப் பண்பாடுகளை, அறச்சிந்தனைகளை வளர்த்தெடுப்பதற்கு இந்த அறநெறிப்பாடசாலை வழிவகுக்கும் எனவும், இவ்வூர் பிரமுகர்கள் ஒன்றிணைந்து இந்த அறநெறிப்பாடசாலையை சிறந்தமுறையில் நடாத்தவேண்டும் எனவும் தெரிவித்திருந்தார். (06)

# வாரம் ஒரு காரம்

## வடக்கின் அபிவிருத்திக்கு அரசு தடையென்றால் அதை எப்படி சிலரால் முறியடிக்க முடிகிறது.?....




இனவாதத்தைக் கையில் எடுத்து இல்லாத பலவற்றையெல்லாம் இயற்ற முற்பட்டு, அரச எதிர்ப்பை ஆதாரப் படுத்தி, ஆடத் தெரியாத கட்டத்திலெல்லாம் மேடை சரியில்லை யென்று, வீரவசனம் மாத்திரம் பேசி விட்டு, விடிவில்லா இருளுக்குள் தமிழர் வரலாற்றை சிதைக்கின்ற இந்த கூட்டமைப்புக் கும்பல்களிடம் தற்போது சில மக்கள் கேட்கத் தொடங்கும் கேள்வி இதுதான்:

**வடக்கின் அபிவிருத்திக்கு அரசு தடையென்றால் அதை எப்படி சிலரால் முறியடிக்க முடிகிறது. அந்த அரசிடமிருந்து தானே அவர்களும் வடக்கை அபிவிருத்தி செய்கின்றார்கள் அதை ஏன் உங்களால் செய்ய முடியவில்லை?..... துரோகிகள் என்று மக்கள் துரத்தி விடுவார்கள் என்கின்ற பயமா?... அப்படியானால் உங்களுக்காகவா உங்கள் அரசியல் பயணம்?.... மக்கள் ஆதரவினைப் பெற்று அரசியலில் நிலைப்பது தானா உங்கள் இலக்கு?.....**

அன்று விடுதலைப் புலிகளோடு இருந்து அவர்களையும் மக்களையும் ஏமாற்றினீர்கள். இன்று ஒன்பது மாதமாக மாகாணசபையை வைத்து வாக்களித்த மக்களை ஏமாற்றுகின்றீர்கள்.

இவற்றிற்கெல்லாம் அப்பால் தமிழரசுக்கட்சி தனித்து நின்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதிவினை நிராகரித்து பங்காளிக் கட்சிகளை ஏமாற்றினீர்கள். தற்போது தனது வயதைக் காரணம் காட்டி தமிழரசுக் கட்சியையும் தனது ஆளுகைக்குள் கொண்டு வரக்கூடிய வேறோர் தலைவரை நியமித்துவிட்டு, கூட்டமைப்பின் தலைவராகி அனைத்தையும் கட்டுப்படுத்த முயற்சிக்கின்றார் எங்கள் சம்பந்தரய்யா.

இவ்வாறு காலத்துக்குக் காலம் ஏமாற்றுவது தானா உங்கள் அரசியல் இலக்கு?.... அன்று அரச எதிர்ப்பை மக்களும் ஆமோதித்தமையால் அதில் சென்ற உங்கள் பயணம் தேர்தல்களில் மாத்திரம் வெற்றியளித்தது. தற்போது மக்கள் யதார்த்தத்தைப் புரிய ஆரம்பித்து விட்டனர்.

இனிவரும் காலம் மக்களின் கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

இந்திய மத்திய அரசின் மாற்றத்தை இலக்கு வைத்து மோடிக்கு மோதகம் படைத்து, தமிழ் மக்களை ஏமாற்றிய கட்டத்தையும் சுப்பிரமணிய சுவாமிகளின் வார்த்தைகள் சுட்டெரித்து விட்டன.

சர்வதேசம்... சர்வதேசமென மக்களை ஏமாற்றிய உங்களுக்கும், ஏமாந்த மக்களுக்கும் தெளிவான ஒர் பதிலைக் கூறி இருக்கின்றார் இந்திய வெளிவிவகார ஆலோசகக் குழுவில் உள்ளவரான சுப்பிரமணிய சுவாமிகள்.

**இலங்கையின் இறைமைக்கு அப்பால் இந்த மோடியரசு தமிழர் விடயத்தில் என்றுமே தலையிடாது. உள்நாட்டுப் பிரச்சினைகளை அரசும் சிறுபான்மைத் தலைவர்களும் இணக்கப்பாட்டோடு தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் பாதிக்கப்படப் போவது சிறுபான்மைத் தமிழர்களே** என்பதுதான் அவரது கருத்துரையின் சாராம்சமாகும்.

தற்போது மோடியரசின் அழைப்பையேற்று இந்தியா செல்லப்போவதாகச் சொல்லும் கூட்டமைப்பு இனிவரும் சில காலங்களுக்கு இதை வைத்து மக்களை ஏமாற்றப் போகின்றது.

இவற்றிற்கெல்லாம் அப்பால் எங்கள் வடமாகாண முதலமைச்சரையா ஐ.நா வின் விசாரணைக்குழுவிற்கு சாட்சியமளிக்கப் போகின்றாராம். இந்த முதலமைச்சரிடம் இரு கேள்விகளை நாம் கேட்கின்றோம்.

அதில் **ஒன்று**; அரசின் துரோகப்பார்வைக்கு இடமளித்து ஐ.நா வின் விசாரணைக்குழுவிற்கு சாட்சியமளிப்பதால் இம் மக்களுக்கு எதைப் பெற்றுக கொடுக்கப் போகின்றீர்கள்?.. உங்களுக்கே தெரியும் முரண்பாடுகள்தான் இதில் மிச்சமாகுமென்று... பின்பும் ஏன் இதை செய்கின்றீர்கள்?

கொழும்பு அரசு வடக்கு மாகாணத்திற்கான அதிகாரங்களைத் தரவில்லை... தரவில்லை.... என பின்பு கூறுவதில் என்னபயன்?..

**மற்றையது**, ஐ.நா வின் முன்னிலையில் சாட்சியமளிப்பதற்கு உங்களுககு என்ன தகுதியுண்டு? மக்கள்பட்ட துன்பங்கள் எது உங்களுக்கு தெரியும்?.. தெரிந்திருந்தால் மீண்டும் முரண்பாட்டை வளர்க்க முனைந்திருக்க மாட்டீர்களே!...எரிக் சொல்கேமிற்குள்ள தகுதிகூட உங்களிற்கில்லை.

மக்கள் தெளிவாக இதைப் புரிந்து கொள்ள வேண்டும். இவ் விசாரணையால் மக்களுக்கு ஏதாவது நன்மை கிடைக்குமாயின் அரச எதிர்ப்புக்களை நாம் பார்க்க வேண்டிய அவசியமில்லை சாட்சியமளிக்கலாம். அதே சாட்சியத்தால் மீண்டும் மக்களுக்குத் துன்பமென்றால் அங்கு சாட்சியமளிப்பது மக்கட் துரோகமேயாகும்.

மக்களின் வாக்குகளைச் சம்பாதிக்க மீண்டும் மக்கட் துரோகம் செய்கின்றனர் முதலமைச்சர் உட்பட்ட கூட்டமைப்பினர்.

விசாரணை முடிவுகள் மக்களுக்குத் தீர்வினைப் பெற்றுத்தருமா? **நடைமுறைச் சாத்தியத்தை சிந்தித்து செயற்படுவதனால் தான் சிலரால் மக்கள் ஆதரவு குறைந்திருந்தும் வடக்கை அபிவிருத்தி செய்ய முடிகின்றது. இவற்றையெல்வாம் சிந்திக்காது செயற்படுவதனால்தான் மக்களாதரவு பலமாக இருந்தும் பயனற்று இருக்கின்றது.**

**இதை மக்கள் உணரும் வரை வாக்களிப்பால் பயனேதும் கிடையாது.**

# ஆரோக்கியமான இளைஞர் சமூகத்தை விளையாட்டுத்துறையால் உருவாக்க முடியும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

விளையாட்டுத்துறையின் மூலம் உடல், உளரீதியாக முன்னேற்றம் காணும் அதேவேளை, அதனூடாகவே ஆரோக்கியமான இளைய சமூகத்தை கட்டியெழுப்ப முடியுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினருடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக இப்பகுதியில் விளையாட்டுத் துறை பாரிய வீழ்ச்சி கண்டிருந்தது.

இன்றுள்ள அமைதிச் சூழலில் இங்கு விளையாட்டுத்துறை மட்டுமல்லாது ஏனைய துறைகளும் முன்னேற்றம் கண்டு வருகின்றன.

அந்தவகையில் விளையாட்டுத் துறையைப் பொறுத்தமட்டில் இம்மாவட்டத்தில் கூடைப்பந்தாட்டத்துக்கென பொது விளையாட்டுத் திடலொன்று அமைக்கப் படுவது அவசியமானது என்பதைக் கருத்தில் கொண்டு விளையாட்டுத்திடலை அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இவ் விளையாட்டுத் திடல் அமைப்பதற்காக இடமொன்றை தெரிவு செய்வது தொடர்பிலும் அமைச்சர் விசேட கவனம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் உத்தியோகத்தர்களும் அமைச்சரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

# குருநகர் மீன்பிடி வலை தொழிற்சாலை நடவடிக்கைகளை மேம்படுத்த திட்டம்



(யாழ்ப்பாணம்)

வடகடல் நிறுவனத்திற்கு கீழான குருநகர் மீன்பிடி வலைத் தொழிற்சாலைக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் தொழிற்துறை நடவடிக்கைகள் தொடர்பில் நேரில ஆராய்நதறிந்து கொண்டார்.

குறித்த தொழிறசாலைக்கு அமைசசர் நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது மேற்படி தொழிற்சாலையின் தொழிற்றுறை நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்துவது தொடர்பில் அமைச்சர் விசேட கவனம் செலுத்தினார்.

அத்துடன் தொழிற்கூடங்களுக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் தொழில் நடவடிக்கைகளைப் பார்வையிட்ட அதேவேளை, துறைசார்ந்தோருடனும் கலந்துரையாடினார்.

எதிர்காலத்தில் இத்தொழிற்சாலையின் ஊடான தொழிற்றுறைகளை மேலும மேம்படுத்துவது மற்றும் விரிவாக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டிருந்தது.

இத்தொழிற்சாலையின் மேம்பாட்டுக்கென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியின் பயனாக இந்திய அரசு நான்கு இயந்திரசாதனங்களை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மூலப்பொருள், உற்பத்தி, சந்தைப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட அதேவேளை, எதிர்காலத்தில் தொழிற்சாலையின் தொழிற்றுறை நடவடிக்கைகளை மேலும் விரிவாக்குவது குறித்தும் துறைசார்ந்தோருடன் அமைச்சர் கலந்துரையாடினார்.

குறிப்பிட்ட தொழிற்சாலையா... பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் நிறுவனங்களில் ஒன்றான வடகடல் நிறுவனத்தின் கீழ் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது வடகடல் நிறுவனத் தலைவர் திச வீரசிங்கம், தொழிற்சாலை முகாமையாளர் ஜெயரஞ்சித் ஆகியோர் உடனிருந்தனர்.

## தலைமைப்பதவிக்கு போட்டி

# வல்வெட்டித்துறை நகரசபையை 3 மாதத்திற்கு இடைநிறுத்திய முதல்வர்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை நகர சபையில் கடந்த மூன்று வருடங்களாக தலைமைப் பதவியைக் குறிவைத்து தனிப்பட்ட முறையில் தன்னிச்சையாகத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஆளுகையிலுள்ள ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் சபை நடவடிக்கையைக் குழப்பி தவிசாளரை வெளியேற்ற எடுத்துவந்த முயற்சிகளுக்கு வடமாகாண முதலமைச்சர் முற்றுப்புள்ளி வைத்துள்ளார். தமக்குப் பதவியை விட்டுத் தராவிட்டால், வல்வெட்டித்துறை நகர சபையை முடக்கப் போவதாகத் தெரிவித்த இந்தக் குழுவினர் வல்வெட்டித்துறை நகரசபையை முடக்கி, வல்வெட்டித்துறை மக்களுக்கும், தவிசாளருக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தி அவர்களை நகரசபை நிர்வாகத்திற்கு எதிராகத்தூண்டிவிடும் வகையில் நகரசபையின் கொடுப்பனவுகளுக்கான அங்கீகாரம் வழங்கமுடியாதெனத தெரிவித்து தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அதனைத் தொடர்ந்து திண்மக் கழிவகற்றல், குடிநீர் விநியோகம், அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் அலுவலர்கள் ஊழியர்களின் வேதனங்கள் என்பனவற்றிற்கான கொடுப்பனவுகள் யாவும் நிறுத்தப்பட்டிருந்தன. இந்த நிலையில், நகர சபை கட்டளைச் சட்டம் 184 ஆம் பிரிவுக்கு அமைய தொடர்ச்சியாகக் குழப்பத்தை ஏற்படுத்தி வருபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் அல்லாவிடின் வல்வெட்டித்துறையினதும் பொது மக்களினதும் நலன்களையும், கௌரவத்தையும் கருத்தில் கொண்டு சபையைக் கலைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் தவிசாளர் நடராஜா அனந்தராஜ் நேரில சந்தித்து விடுத்த கோரிக்கையின் அடிப்படையில், கடந்த யூலை மாதம் 28 ஆம் திகதியில் இருந்து செயற்படும் வகையில் எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு சபை நடவடிக்கைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டதாக முதலமைச்சரினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் காலப் பகுதிக்குள் சபை நடவடிக்கைகளைக் குழப்பி வருபவர்களுடைய செயற்பாடுகள் தொடர்பாக ஓய்வு பெற்ற நீதியரசர் அரியநாயகம் அவர்களைத் தலைவராகக் கொண்ட விசாரணைக்குழு அமைக்கப்பட்டு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் விசாரணை அறிக்கை கையளிக்ககப் படவேண்டும் என்றும் அறிவுறுத் தப்பட்டுள்ளது. அதுவரை வல் வெட்டித்துறை நகரசபையின் கொடுப்பனவுகள் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளைக கவனிப்பதற்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜக்சீலை முதலமைச்சர் நியமித்து வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து கடந்த 5 நாட்களாக நிறுத்தி வைககப்பட்டிருந்த திண்மக் கழிவகற்றல் மற்றும் குடிநீர் விநியோகப் பணிகள் யாவும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் வல்வெட்டித்துறை மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

# 26 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் கொள்ளை

(கொழும்பு)

நில்பனாகொடை பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கொள்ளைச் சம்பவமொன்றில் 26 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பிரதேசத்திலுள்ள வியாபாரி ஒருவரின் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் வியாபாரியை அச்சுறுத்திவிட்டு இக்கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இளைஞர் மத்திய நிலையம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டல்



மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 13 கிராமங்களிலும் இளைஞர் மத்திய நிலையங்கள் அமைப்பதற்கான அடிக்கல் கடந்த புதன்கிழமை நாட்டப்பட்டன. மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் சிறுவர் நிதியத்தின் நிதியுதவியுடன் இந்த மத்திய நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

# விடைத்தாள் திருத்தப்பணிகளுக்காக 10 பாடசாலைகள் மூடப்படும்

உயர்தர பரீட்சை விடைத்தாள் திருத்தப் பணிகளுக்காக 10 பாடசாலைகள் மூடப்படவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த பாடசாலைகள் இம்மாதம் 30 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை மூடப்படவுள்ளன.

முதற்கட்ட திருத்தப்பணிகளுக்காக 10 பாடசாலைகள் மூடப்படவுள்ளன. அந்த வகையில், கொழும்பு றோயல் கல்லூரி, விசாகா, குருநாகல் மளியதேவ மகளிர் வித்தியாலயம், கேகாலை மகளீர் வித்தியாலயம், கண்டி கிங்ஸ்வுட் உள்ளிட்ட 10 பாடசாலைகள் மூடப்படவுள்ள்ன. இதுதவிர, மேலும் 11 பாடசாலைகளின் வகுப்பறைகள் விடைத்தாள் திருத்தப்பணிகளுக்காக பயன்படுத்தப்படவுள்ளன

றோயல் கல்லூரி - கொழும்பு, விஷாகா வித்தியாலயம் - கொழும்பு, திஸ்ஸ மத்திய மகா வித்தியாலயம் - களுத்துறை, பேர்கசன் உயர் மகளிர் வித்தியாலயம் - ரத்தினபுரி, மளியதேவ மகளீர் வித்தியாலயம் - குருநாகல், புனித ஜோசப் மகா வித்தியாலயம் - குளியாபிட்டிய, கேகாலை மகளீர் வித்தியாலயம் - கேகாலை, கிங்ஸ்வுட் வித்தியாலயம் - கண்டி, வித்தியாலோக வித்தியாலயம் - காலி, விகாரமஹாதேவி மகளிர் வித்தியாலயம் - பதுளை, ஆகிய பாடசாலைகளே மூடப்படவுள்ளன.

# க.பொ.த. (சா/த) மாதிரி வினாத்தாள்

## G.C.E. (O/L) Examination model Paper

வரலாறு

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதற்குரிய இலக்கத்திற்கு புள்ளடியிடுக**

1. இலங்கை வரலாற்றினை எடுத்துக் கூறும் மூல நூலாகக் கொள்ளத்தக்கது.
   1) சூளவம்சம் 2) மகாவம்சம்
   3) ராஜாவலிய 4) தீபவம்சம்

2. இந்தியாவின் ஆரியக்குழுவினரின் இராச்சியத் தலைவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
   1) காமினி 2) மகாபிரஹ்ம
   3) ராஜன் 4) ஜீவக

3. பாகின்கல, பதியகம்பல, பொம்பரிப்பு ஆகிய பிரதேசங்களின் பொது இயல்பாவது
   1) ஆதிக்குடிகள் வாழ்ந்தமைக்கான சான்றுகள் உள்ளன.
   2) வெளிநாட்டவரின் ஆக்கிரமிப்பிற்குட்பட்டமைக்கான சான்றுகள் உள்ளமை.
   3) புராதன குளங்கள் அமைந்த பகுதிகள்.
   4) புராதன பௌத்த சின்னங்களைக் காணலாம்.

4. 4 ஆவது பௌத்த மாநாடு நடைபெற்றது எம்மன்னனது ஆட்சியில்?
   1) பிம்பிசாரன் 2) அஜாதசத்துரு
   3) தர்ம அசோகன் 4) கனிஷ்க

5. கி.பி 5 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்தவர்களுக்கு பொருத்தம் இல்லாத விடயம்
   1) திரிபீடகம் நூல் வடிவம் பெற்றமை.
   2) ருவான்வெலிசாய அமைக்கப்பட்டமை.
   3) புனிததந்ததாது இந்நாட்டிற்குக் கொண்டு வரப்படல்
   4) குட்டம்பொக்குன நிர்மாணம்.

6. "எல்லா நாட்டு மக்களும் என் குழந்தைகளே அவர்களது சுயநலனைப் பேணுதல் என் கடமையாகும்" எனக் கூறிய இந்திய ஆட்சியாளன்,
   1) பிம்பிசாரன் 2) சந்திர குப்த மௌரியன்
   3) அசோகச்சக்கரவர்த்தி 4) சமுத்திர குப்த மௌரியன்

7. இலங்கை வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கையை மிக நீண்ட காலம் ஆட்சிசெய்த மன்னன்
   1) பண்டுகாபயன் 2) துட்டகைமுனு
   3) 2 ஆம் பராக்கிரமபாகு 4) மாயாதுன்னை

8. கிழக்கு உரோமப் பேரரசின் தலைநகரமான கொன்ஸ்தாந்திநோபிளை துருக்கியர் கைப்பற்றியது
   1) கி.பி 1215 2) கி.பி 1453
   3) கி.பி 1688 4) கி.பி 1789

9. கப்டன் டோசன், மேஜர்ஸ்கின்னர் ஆகியோர் இலங்கையில் எத்துறை விருத்தியில் அக்கறை காட்டினர்?
   1) கல்வி 2) தபால் சேவை
   3) பெருந்தோட்டத்துறை 4) பெருந்தெரு

10. மத்தியகால ஐரோப்பாவில் வாழ்ந்த புகழ்பெற்ற கலைஞர்களான டாண்டே, பெட்ரக், பொக்காசியோ ஆகியோர் வாழ்ந்த நாடு எது?
   1) ஜேர்மனி 2) பிரித்தானியா
   3) இத்தாலி 4) பிரான்ஸ்

11. 1931 இல் அமைக்கப்பட்ட டொனமூர் யாப்பின்படி அரசுக்கழக உறுப்பினர் தொகை.
   1) 61 2) 37
   3) 101 4) 225

12. பிரித்தானியாவின் கைத்தொழிலுக்கு வழிவகுத்த கைத்தொழிற்புரட்சி எது?
   1) நெசவுத்தொழில் 2) இரும்புருக்கு
   3) நிலக்கரி 4) மட்பாண்டக் கைத்தொழில்

13. பொலனறுவை மன்னனான 1 ஆம் விஜயபாகு மணந்த திலோக சுந்தரி எவ்வம்சத்தவர்?
   1) சாளுக்கிய 2) பாண்டிய
   3) கலிங்க 4) பல்லவ

14. கிபி. 1206 -1290 வரை வட இந்தியப் பிரதேசத்தை ஆட்சிசெய்த முதல் மொகலாய ஆட்சியாளன்,
   1) குத்புதீன் அயிபெக் 2) கியாஸ் உத்தின்பல்வன்
   3) ரசியா 4) இத்துத்மிஸ்

15. பின்வருவனவற்றுள் யாழ். இராசதானி தொடர்பான சரியான கூற்று,
   1) யாழ். இராச்சியத்தின் தலைநகர் நல்லூர்
   2) சங்கிலி மன்னன் போர்த்துக்கேயரை எதிர்த்தான்.
   3) போர்த்துக்கேயர் கைப்பற்றும் வரை யாழ். இராச்சியம் விஜயநகரபேரரசின் ஒரு பகுதியாக இருந்தது.
   4) யாழ். இராச்சியம் சிதைவுற உள்நாட்டுக் குழப்பங்களே காரணம்.

16. காம்போஜம் அல்லது கம்பூச்சியா எனப்பட்ட பிரதேசம் இந்துமத ஆட்சியாளனால் ஆளப்பட்டது. அம் மன்னன் யார்?
   1) பிரேந்ரா 2) சுரேந்ரா
   3) ஷைலேந்ரா 4) ஜயேந்ரா

17. கோட்டை இராச்சியத்தில் விஜயபாகு கொள்ளை நிகழ்ந்த ஆண்டு எது?
   1) கி.பி 1512 2) கி.பி 1518
   3) கி.பி 1521 4) கி.பி 1543

18. மறுமலர்ச்சி காலத்தில் காண முடியாத விசேட இலட்சணமாவது,
   1) வெவ்வேறு கலைகள் தோற்றம் பெற்றமை
   2) மனிதரைவிட தெய்வம் உயர்வாகக் கருதப்பட்டது.
   3) கிரீக், இலத்தீன் மொழிகள் விருத்தி பெற்றமை
   4) கலைகள் பௌதிகப் பண்புகளாகப் போற்றப்பட்டது.

19. கி.பி 1875 இல் வித்தியாலங்கார பிரிவேனாவை அமைப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்த பிக்கு,
   1) ஹிக்கடுவ சுமங்களதேரர்
   2) பலனசித்தார்த்த தேரர்
   3) மீதெட்டுவத்தை குணானந்த தேரர்
   4) ரத்மலானதர்மாலோக தேரர்

20. இந்தியாவிற்கு வந்த முதல் ஆரியக்குழுவினரின் குடியேற்றம் எது?
   1) சப்த சித்து 2) குருஷேத்ர
   3) ராஜஸ்தான் 4) குஜராத்

21. 1ஆம் விஜயபாகுவின் காலத்தில் வாழ்ந்தவர்களுக்குப் பொருந்தாத விடயங்களைக் கொண்ட தொகுதி,
   A. மகிந்ததேரரின் வருகை
   B. ரன்கொத்விகாரை நிர்மாணம்
   C. பாகியன் என்ற பிக்குவின் வருகை
   D. கலிங்கமாகனின் படையெடுப்பு
   E. காசியப்பனுக்கும் முகலனுக்குமிடையிலான யுத்தம்

   1) AB 2) AC 3) BD 4) DE

22. நிகழ்காலமும் எதிர்காலமும் இறந்தகாலத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படல் தவிர்க்க இயலாதது. அதனை மறந்து செயற்படலானது அத்திவாரமின்றி கட்டடம் கட்டுதல் போன்றது இது யாருடைய கூற்று?
   1) மகாத்மா காந்தி 2) ஜவகர்லால் நேரு
   3) அரிஸ்டோட்டல் 4) ஈ. எச், கார்

23. கீழைத்தேசங்களுக்கு வந்து ஐரோப்பியர் முதலாம் நிரலிலும் அவர்களது மத்திய நிர்வாக மையங்கள் இரண்டாம் நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றைச் சரியாகத் தொடர்புபடுத்தினால் கிடைக்கும் விடை.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| i) ஆங்கிலேயர் | A. பாண்டிச்சேரி |
| ii) போர்த்துக்கேயர் | B. பத்தேவியா |
| iii) பிரான்சியர் | C. கோவா |
| iv) ஒல்லாந்தர் | D. மெட்ராஸ் |

   1) DCBA 2) CDBA
   3) BCDA 4) DCAB

24. 14 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் வடபகுதி "விஜயநகரப் பேரரசின் ஆட்சிக்குட்பட்டிருந்தமையை கூறும் தென்னிந்திய இலக்கிய மூலாதாரம் எது?
   1) ஆலம்பூண்டி 2) ஆர்ப்பக்காமம்
   3) பல்லவராயன் பெட்டி 4) திருவர்லங்காடு

25. வெளிநாட்டு வர்த்தகத்தில் இலங்கை முக்கிய இடம் வகித்ததாக கொஸ்மஸ்ஸின் அறிக்கை கூறுகிறது. இதன்மூலம் தெரிவிப்பது,
1) புராதன காலத்தில் நாடுகாண் பயணிகள் இந்நாட்டிற்கு வந்துபோனமை
2) பருவக்காற்றுகளின் துணையுடன் கடற்பயணங்கள் இலகுவாயிருந்தமை.
3) புராதன காலத்தில் இலங்கை வெளிநாட்டு வர்த்தகத்தில் மத்திய நிலையமாகச் செயற்பட்டமை.
4) கடற்பயணங்களுக்கு ஆதரவளிப்பதில் இலங்கை முன்னோடியாக இருந்தமை.

26. கீழே தரப்பட்டுள்ள விடயங்களுள் ஐக்கிய நாடுகள் சபை பற்றிய விடயங்களை மட்டும் கொண்ட விடை எது?
A. இனங்களுக்கிடையில் நட்புறவைப் பேணல்.
B. குறித்த வலயத்துக்குட்பட்ட மக்களின் நலனைப் பேணல்.
C. சர்வதேச ரீதியில் சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணல்.
D. அங்கத்துவ நாடுகளுக்கிடையில் மத்தியஸ்தம் வகித்தல்.
E. அங்கத்துவ நாடுகளின் தொடர்புகளைப் பேணல்

1) AB 2) AC 3) BC 4) DE

27. இலங்கையின் புராதன கால மன்னரின் பிரதான கடமையும் பொறுப்புமாக இருந்த விடயங்கள்,
1) நாட்டினுள் எல்லா இடங்களிலும் விகாரைகள் அமைத்தல்.
2) நெற்செய்கைக்கான நீர்ப்பாசன நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
3) அரச தர்மத்தின்படி நாட்டை ஆட்சிசெய்தல்
4) உணவுற்பத்தியின் மூலம் மக்களின் தேவையை நிறைவு செய்தல்.

28. தம்பதெனியவை இலங்கையின் இராசதானியாக்கிய மன்னன்,
1) III ஆம் விஜயபாகு 2) I ஆம் புவனேகபாகு
3) II ஆம் பராக்கிரமபாகு 4) III ஆம் பராக்கிரமபாகு

29. மகதப் பேரரசை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட முதல்மன்னன் யார்?
1) பிரம்மதத்தன் 2) வேதேகன்
3) கெசொல் மன்னன் 4) பிம்பிசாரன்

30. 1931 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட டொனமூர் யாப்பின் பிரதான நிர்வாக நடவடிக்கையாக கொள்ளத்தக்கது.
1) அரசுக்கழகத்தின் மூலம் இலங்கையை நிர்வகித்தமை.
2) சர்வசன வாக்குரிமையை வழங்கியமை.
3) முக்கிய அமைச்சுக்கள் யாவும் பிரித்தானியர் வசமானமை.
4) பிரதேசவாரி பிரதிநிதித்துவம் தேசியத் தலைவர்களுக்கு வழங்கப்படாமை.

31. கைத்தொழிற்புரட்சிக்கு வழிவகுத்த ஓடும் விசைத்தறியைக் கண்டு பிடித்தவர்,
1) எட்மன்ட் காட்ரைட் 2) ஜேம்ஸ் ஹாங்ரிவூஸ்
3) எலியஸ் ஹோவே 4) ஜோன்கே

32. கி.பி 1594 தந்துரே யுத்தத்தில் கொல்லப்பட்ட போர்த்துக்கேயத் தளபதி
1) லோபெஸ் த சூசா 2) கொன்ஸ்டைன் த சா
3) ஜெரனிமோ த அசவேது 4) தியோகுத மெல்லோ

33. இலங்கையர்கள் எல்லோரையும் ஒரே பிரிவிற்குரிய வாக்காளர்க ளாகக் கொள்வது எத்தேர்தலின்போது?
A. மாகாணசபைத் தேர்தல்
B. மக்களின் விருப்புரிமையைக் கோருகையில்
C. நாடாளுமன்றத் தேர்தல்
D. ஜனாதிபதித் தேர்தல்
1) AB 2) BD 3) BC 4) CD

34. இரண்டாம் யுத்தத்துடன் தொடர்புடையோரை முதலாம் நிரலிலும் அதன் ஆட்சியாளர்கள் இரண்டாம் நிரலிலும் தரப்பட்டுள்ளது. அவற்றைச் சரியாகத் தொடர்புபடுத்தினால் கிடைக்கும் விடை,

| நிரல் I | நிரல் II |
|---|---|
| A. பெரிய பிரித்தானியா | F. டிகோல் |
| B. பிரான்ஸ் | G. முசோலினி |
| C. ஜேர்மனி | H சர்ச்சில் |
| D. இத்தாலி | I. ஹிட்லர் |
| E. ரஷ்யா | J. ஸ்டாலின் |

1) HFIGJ 2) FGJHI 3) HFJGL 4) HJGIF

35. தோப்பாவாவியை அமைத்த மன்னன்,
1) I ஆம் அக்போ 2) இளநாகன்
3) II ஆம் முகலன் 4) I ஆம் உபதிஸ்ஸ

## கடந்த ஞாயிறு, திங்கள், செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகிய தினங்கள் வெளியான வினாக்களுக்கான விடைகள்

### 27.07.2014 ஞாயிற்றுக்கிழமை

01)
1. பொய்கை, தடாகம்
2. மின்களை
3. குறுகுறு
4. குருவி
5. பறந்து
6. இரையைப் பிடித்திட - வேறு பொருத்தமான
7. பாய்ந்து, சென்றது
8. கரை
9. கொப்பில்
10. கொக்கு, குருவி

02)
1. டெங்குக் காய்ச்சல் வைரஸ் கிருமியினால் தொற்றும் ஒரு நோயாகும்
2. அந்த வீதியின் இரு பக்கங்களிலும் நிழல் மரங்கள் நின்றன.

03)
1. கத்தரிக்கோலை
2. எண்ணெய்

04)
1. சிறுவர்கள் கடற்கரையில் பட்டம் ஏற்றி விளையாடினர்கள்.
2. பூக்கள் அதிகாலையில் மலர்ந்து மணம் வீசும்.

05)
1. பெரியவரே, உங்களுக்கு என்ன வேண்டும்? எனக் குமரன் கேட்டான்.

06)
1. இடமளித்தல், சந்தர்ப்பம் கொடுத்தல் - வேறு பொருத்தமான
2. குற்றத்தை மறைத்தல்

07)
1. பாடம் சொல்லித் தாருங்கள்
2. எனக்குச் சோறு வேண்டாம்

08)
1. மட்ட வத்துறு டிகத் தென்ன
2. அயி ஈயே ஈவே நா

09)
1. எனக்கு விருப்பமானது கேக் (எனக்கு கேக் விருப்பம்)
2. தயவு செய்து இங்கே வாருங்கள்.

10)
1. Take your books
2. Go to library

11)
1. பொருத்தமான வசனம் "ஓடுவீரா? என்னுடன்"

12) அழுக்குகளை உண்ணும்

13) பூப்பந்து

14) முனைகளில் அதிகளவு இரும்புத் துகள்கள் கவரப்பட்டுள்ளன. முனைகளில குண்டூசிகள் அதிகளவு கவரப்பட்டுள்ளன.
காந்தத்தின் இரு முனைகளிலும் இரும்புத் துகள்கள் ஒட்டியுள்ளன.

15) இங்கிலாந்து
16) ஏப்ரல் 13
17) 100 ml
18) சிறுத்தைப்புலி
19) அம்பாந்தோட்டை
20) சுழல் வண்டி
21) தாவரங்களுக்கு உணவாகும்
22) ஆமை

### 28.07.2014 திங்கட்கிழமை

| | | | |
|---|---|---|---|
| 1) 4 | 11) 1 | 21) 3 | 31) 4 |
| 2) 1 | 12) 1 | 22) 1 | 32) 3 |
| 3) 3 | 13) 4 | 23) 2 | 33) 1 |
| 4) 1 | 14) 2 | 24) 4 | 34) 2 |
| 5) 1 | 15) 4 | 25) 4 | 35) 3 |
| 6) 1 | 16) 1 | 26) 4 | |
| 7) 4 | 17) 1 | 27) 1 | |
| 8) 1 | 18) 3 | 28) 2 | |
| 9) 3 | 19) 1 | 29) 3 | |
| 10) 3 | 20) 4 | 30) 1 | |


### 29.07.2014 செவ்வாய்க்கிழமை

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 3 | 6) 1 | 11) B | 16) 1 | 21) 2 |
| 2) 3 | 7) 3 | 12) B | 17) 4 | 22) 1 |
| 3) 2 | 8) 1 | 13) 2 | 18) 1 | 23) 1 |
| 4) 1 | 9) 1 | 14) 3 | 19) 4 | 24) 2 |
| 5) 3 | 10) 3 | 15) 1 | 20) 43 | |

### 01.08.2014 வெள்ளிக்கிழமை

1) 30 km
2) 84
3) 2/8
4) 1125ml
5) 120
6) 40/=
7) 1725/=
8) 3
9) ரூபா 26.25 சதம்
10) 8 cm
11) 20 செக்கன்
12) 11.30
13) 40 நிமிடம்
14) 331/755
15) 630 cm
16) 013001
17) 22 cm
18) (i) கனவுரு ii) 12
19) தொன்னூறாயிரத்து தொன்னூற்று ஒன்பது
20) 43
21)
i. 300/=
ii) 1 மப
22)
i. 160/=
ii) 538 /=
23) 10.45
24) 20
25) 23 மணி 20 நிமிடம்
26) 8/500ml
27) 0.7
28) 034001
29) 66m
30) ரூபா 37.50 சதம்
31) LIX
32) 8
33) 48 cm
34) 0
35) 285

# இறுவட்டு வெளியீடு



(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத்தினால் நல்லைக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற விவரண இறுவட்டு நேற்று நல்லை ஆதீன மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் அதன் முதற்பிரதியை சர்வதேச இந்து மதகுருமார் ஒனறியத்தின் தலைவர் சபா.வாசுதேவக் குருக்களிடம் இருந்து பெற்றுக்கொண்டதுடன் அந்த விவரண சித்திரத்தை வெளியிட்டு வைத்தார்.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இந்த இறுவட்டுகள் விநியோகிக்கப்பட்டு அதன் மூலம் மாணவர்களுக்கு கல்வியுடன் சமய விதிமுறைகள் குறித்து விழிப்புணர்வையும் ஏற்படுத்தும வகையில் இந்த இறுவட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு இந்துவும் இதனை நன்கு அவதானித்து அதன் படி ஒழுகுவதன் மூலம் சிறந்த இந்துக்களாக வாழவழியேற்படும். (இ)

# அழிவுகளைக் கண்டு துவண்டு விடாது மீண்டெழ முயற்சிக்க வேண்டும்

## ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவிப்பு




விவசாயிகள் அழிவுகளைக் கண்டு துவண்டு விடாது அதிலிருந்து மீண்டெழ முயற்சிக்க வேண்டும். அதற்காக மாறிவரும் உலகப் போக் கிற்கமைவாக நவீன விவசாய முறைகளையும் கையாளும் மனநிலை விவசாயிகள் மத்தியில் உருப்பெற வேணடும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

திருவையாறுப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கற்பகதரு தென்னை உற்பத்திக குழு தெரிவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

மாறிவரும் இயற்கையின் போக்கு காரணமாக ஏற்படும் வறட்சியினால் விவசாயச் செய்கைகள் பாரிய வீழ்ச்சி கண்டுள்ளன. விவசாயிகளின் வாழ்வாதாரமும் கேள்விக்குறியாகி வருகின்றது. இவ்வறட்சி நாடளாவிய ரீதியில் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளதனால் உடனடி மாறறு நடவடிக்கைகளை அல்லது நிவாரணங்களை வழங்குவதென்பது சாத்தியமற்றதாக உள்ளது. இதனிடையே, எமது விவசாயிகள் கையாளுகின்ற நெற்செய்கை உட்பட்ட பாரம் பரிய பயிர்ச்செய்கை முறைகள் அதிகளவான நீரைப் பாய்ச்சினால் மட்டுமே வருமானத்தை பெற முடியும் என்ற கோட்பாட்டுக்குட்பட்டவை. ஆனால், வறட்சிகள் ஏற்படுகின்ற காலத்தில் விவசாயிகள் உப உணவுப் பயிர்ச் செய்கைகள் உள்ளிட்ட மாற்று பயிர்ச்செய்கை தொடர்பாகவும் சிந்திக்க வேண்டும். அவ்வாறான மாற்று யோசனைக்கான கட்டாயமும் இன்று ஏற்பட்டுள்ளது. இன்று கிளிநொச்சி மாவட்டத்தில் வயல் காணிகளில் மேற்கொள்ளப்பட்ட உப உணவுப் பயிர்ச்செய்கை வெற்றியளித்துள்ளது.

சுமார் 200 ஏக்கர்களில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் மூலம் நெற்செய்கையை விடவும் நான்கு மடங்கு அதிகமான வருமானம் பெறப்பட்டுள்ளது. எனவே, தொடர்ந்தும் பாரம்பரிய முறைகளை மட்டும் எதிர்பார்த்து காத்திருந்து விவசாயிகள் ஏமாற்றங்களையும் பொருளாதார பின்னடைவுகளையும் எதிர்கொள்ளாது நவீன தொழிநுட்பங்களையும் மாற்றுப் பயிர்ச்செய்கைகளையும் காலச் சூழலுக்கேற்ப கையாள முன்வர வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கரைச்சி பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் அமல்ராஜ், தென்னை பயிர்ச்செய்கைச் சபையின் பிராந்திய முகாமையாளர் நீலாந்த, தென்னை பயிர்ச் செய்கை சபையின் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சத்தியானந்தன் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# முரசின் இன்றைய பலன்



(02.08.2014 சனிக்கிழமை)

ஜய வருஷம் ஆடி மாதம் 17 ஆம் திகதி.
ஷஷ்டி / மரணயோகம்.
முழுநாளும் சித்திரை நட்சத்திரம்.
இராகு காலம 09.03 - 10.33 வரை. சுபநேரம 03.03 - 04.33 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மேலதிகாரிகளுடன் சுமுகமான உறவைப்பேணுவதால் பதவி உயர்விற்கு சிபார்சு ஏற்படல், வாடகைக்கு மனை தேடி அலைந்ததால் தேகநலம் பாதிக்கப்படல். |
| ரிஷபம் | ஆவணங்கள் இன்றியும் தலைக்கவசம் அணியாமலும் செய்த பயணம் தண்டம், குப்பையிலும் குண்டுமணி இருப்பதைப்போல் கல்விப்புலத்தில் முன்னேறியவரை மருமனாக்கிவிடல். |
| மிதுனம் | கூட்டிச் செல்ல வந்தவரின் நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டதால் மறுப்புத்தெரிவித்தல், செல்லப்பிராணிகளை விற்பனை செய்வதற்கு விளம்பரம் மேற்கொள்ளல். |
| கடகம் | இல்லாத நோயை இருப்பதாக கற்பனை செய்ததால் அச்சமும் பகதகளிப்பும் ஏற்படவைத்தல், தெய்வப்பணி மற்றும் தானதர்ம காரியங்களிலும் ஈடுபடமுன்வருதல். |
| சிம்மம் | கொடுத்த கடனைப்பெற காவல்துறை சென்றும் சாதகமான முடிவு கிடைக்காமை, எந்தக் காரியத்திலும் பதற்றமடையாமல் துணிவுடன் ஈடுபடுவதினால் வெற்றி ஏற்படல். |
| கன்னி | சுத்தசைவப் பெண்மணியை விவாகஞ்செய்ய விரும்புவதால் அசைவ உணவைக் கைவிட்டுவிடல், பாதுகாப்பில் அதிகூடிய சிரத்தை எடுத்ததால் திருடர் எண்ணம் பலிக்காதுவிடல். |
| துலாம் | சுனாமி ஏற்படலாம் என்ற அச்சத்தினால் நீர்நிலைக்குச் செல்லாதுவிடல், பரீட்சையில் சித்திபெற படிப்பில் முழுக் கவனம் செலுத்திய பிள்ளை நோய்வாய்ப்படுதல். |
| விருச்சிகம் | நோய் குணமடைய வைத்தியரின் ஆலோசனைப்படி நடைப்பயிற்சி மேற்கொள்ளல், குடியுரிமை பெறுவதற்காக பதிவுத்திருமணம் செய்யமுற்படல். |
| தனுசு | கொடுத்த் கடனை வசூலிக்க தனித்துச் செல்லாமல் துணையுடன் சமுகமளிக்கவும், திகதிதப்பிய பொருளை கொடுக்கின்ற வேளை தற்கித்து கைவிட்டு விடல். |
| மகரம் | பெற்றோரின் நோய்நிலை முன்னிட்டு வெளிநாட்டுப் பயணத்தை தற்காலிகமாக ஒத்திவைத்தல், பிதாவின் புத்திமதியை செவிமடுத்தத்தினால் துயர் விலகிப்போய்விடல். |
| கும்பம் | வங்கிக்கடன் காலதாமதப்படுவதினால் மனைகட்டி முடிக்க பணமின்றித்திண்டாடுதல், அநாமதேய தொலைபேசியினால் மிரட்டி கப்பமாக பணம் கேட்க முயன்றவேளை அச்சம் ஏற்படல். |
| மீனம் | விலங்கு குறுக்கே வந்தவேளை சமயோசித புத்தியினால் விபத்தினின்றும் தப்பிவிடல், நிலுவை அதிகரித்ததால் தொலை பேசிப்பாவனை தற்காலிகமாக துண்டிக்கப்படல். |

# வைத்திய குழுக்களுக்கிடையிலான மோதலுக்கு சட்டவிரோத பிரேரணையே காரணம்

சட்டவிரோதமான முறையில் தமது சங்கத்திற்கு எதிராக பிரேரணை ஒன்றை நிறைவேற்றிக் கொள்வதற்கான முயற்சியே, வைத்திய குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலுக்கான காரணம் என, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளதாக அதன் ஊடக இணைக் குழு உறுப்பினர் மருத்துவர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

இது சட்டவிரோதமான முறையில் நடாத்த திட்டமிட்டிருந்த கலந்துரையாடல் ஆகும்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால், மக்கள் பிரச்சினைகளில் தலையிட முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# "கட்டடக்காடு" நாவல் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பசுந்திரா சசியின் கட்டடக்காடு நாவல் அறிமுகவிழா நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ். கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். இலக்கிய குவியத்தின் தலைவர் வேலணையூர் தாஸின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். தமிழ்ச்சங்க செயலாளர் இரா.செல்வவடிவேல், சிறப்பு விருந்தினராக சமுர்த்தி வங்கி உதவி முகாமையாளர் ரி.கருணாகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் வாழ்த்துரையை சமுர்த்தி உத்தியோகத்தர் சின்னத்தம்பி ஸ்ரீதரன், நூல் அறிமுகவுரையை பா.அபிராமி ஆகியோர் வழங்கவுள்ளதுடன் நூல் விமர்சன உரையை துணுக்காய் கல்வி வலய தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் புலோலியூர் வேல் நந்தகுமார் வழங்கவுள்ளார்.




## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..........................................
முகவரி :- ..........................................
பிறந்த ஆண்டு :- ..........................................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................
பெற்றோர் கையொப்பம்

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRILANKA.

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

### FACULTY OF MEDICINE

**Senior Professor/Professor of**
Anatomy/ Physiology/ Community & Family Medicine/ Pathology/ Forensic Medicine/ Pharmacology/ Medicine/ Paediatrics / Surgery/ Obstetrics & Gynaecology

**Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary)** in Anatomy/ Biochemistry/ Physiology/ Community & Family Medicine/ Pathology/ Microbiology/ Forensic Medicine/ Pharmacology/ Psychiatry/ Paediatrics/ Surgery

Note:
Applications will be entertained from candidates with **MBBS** degree as their first degree for the above posts.

**PARA MEDICAL DEGREE PROGRAMME**

**Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary)** in Medical Laboratory Sciences

### FACULTY OF SCIENCE

**Senior Professor/Professor of**
Computer Science/Mathematics/Statistics/ Botany/Marine Biology / Chemistry (Organic Chemistry/Inorganic Chemistry/Physical Chemistry) / Physics (Physics/ Theoretical Physics)

### FACULTY OF AGRICULTURE

**Senior Professor/Professor of**
Agronomy/Agricultural Biology/Agricultural Chemistry/Agricultural Economics

### FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE

**Senior Professor/Professor of** Accounting

### SALARY AND OTHER BENEFITS

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.67100 - 11x1425 - 82775/-p.m |
| Professor | Rs.56505 - 13x1310 - 73535/-p.m |
| Senior Lecturer Gr.I | Rs.45545 - 7x1050 - 52895/-p.m |
| Senior Lecturer Gr.II | Rs.39755 - 11x790 - 48445/-p.m |
| Lecturer (Probationary) | Rs.27775 - 10x645 - 34225/-p.m |

In addition to the above salary, the following allowances will also be paid:

i) Academic allowance - Senior Professor/Professor -90% of the basic salary
Senior Lecturer Gr.I/Gr.II - 85% of the basic salary
Lecturer (Probationary) - 65 % of the basic salary
ii) Special allowance -20% of the basic salary
iii) Additional monthly allowance - 20% of the basic salary
iv) Cost of living allowance of Rs.7,800/-p.m.

Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff.

Statutory benefits:
1) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
2) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
3) Gratuity payments
4) Employees' Trust Fund benefits
5) Free Medical Services

Closing date:
**Post of Senior Professor/Professor - 24.10.2014**
**Other posts - 12.09.2014**

Applications and other documents for the Post of Senior Professor/Professor shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. Applications for the other posts shall be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self -addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA, 01.08.2014**

(C/3754)


# 72 மணிநேர போர் நிறுத்தம்
# இஸ்ரேல்-ஹமாஸ் இணக்கம்
## ஐ.நா., அமெரிக்கா ஏற்பாடு



(ஜெருசலேம்)

காஸா பகுதியில் கண்மூடித்தனமாக தாக்குதல் நடாத்தி வரும் இஸ்ரேல் மீது ஹமாஸ் போராளிகள் ஏவுகணைகள் வீசி தாக்கி வருகின்றனர். இந்நிலையில் இஸ்ரேல் படைகளும் ஹமாஸ் போராளிகளும் நேற்றுமுன்தினம் முதல் 72 மணிநேர போர் நிறுத்தத்துக்கு சம்மதித்துள்ளனர்.

இரு தரப்பினருக்கிடையிலான தாக்குதலின் 23ஆவது நாளான கடந்த 30ஆம் திகதி இஸ்ரேலின் தாக்குதலுக்கு பயந்து இடம்பெயர்ந்த சுமார் மூவாயிரம் பாலஸ்தீனியர்கள் தஞ்சம் அடைந்திருந்த ஐ.நா. பள்ளி மீது இஸ்ரேல் நாட்டின் பீரங்கிகள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின. இதில் குழந்தைகள் உள்பட 20 பேர் பலியாகினர். பலர் படுகாயமடைந்தனர்.

சண்டையை நிறுத்துவதற்கு சர்வ தேச நாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. ரம்ஸான் பண்டிகையை முன்னிட்டு தற்காலிகமாக தாக்குதல் நிறுத்தப்பட்டு பின்னர் மீண்டும் சண்டை தொடங்கியது.

முன்னறிவிப்பு இன்றி நடாத்தப்பட்ட இந்தக் கொடூர தாக்குதலுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் கடும் கண்டனம் தெரிவித்திருந்தார். இரு தரப்பினரும் தாக்குதல்களை கைவிட்டு உடனடியாக நிபந்தனையற்ற போர் நிறுத்தத்துக்கு முன்வர வேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருந்தார்.

இந்தப்போர் நிறுத்தம் வரும் ஞாயிற்றுக்கிழமை பின்னிரவு வரை அமுலில் இருக்கும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் மற்றும் அமெரிக்க வெளியுறவு துறை மந்திரி ஜோன் கெர்ரி ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இந்த இடைக்காலத்தை காயமடைந்தவர்களை மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லவும், இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யவும் பொது மக்கள் பயன்படுத்திக் கொள்வார்கள் என கருதப்படுகிறது. இரு தரப்பு தாக்குதல்களிலும் இதுவரை 1435 பாலஸ்தீனியர்களும், 56 இஸ்ரேல் இராணுவத்தினரும் 3 இஸ்ரேலிய பொதுமக்களும் பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புனேயில் பாரிய நிலச்சரிவு
# பலியானோர் 41ஆக உயர்வு



மகாராஷ்டிரத்தின் புனே மாவட்டத்தில் உள்ள மாலின் கிராமத்தில் கடந்த புதன்கிழமை ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 41ஆக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து தேசியப் பேரிடர் மீட்புப் படையினர் கூறியதாவது, சகதி, கற்பாறை மற்றும் வீடுகளின் இடிபாடுகளில் இருந்து இதுவரை 16 பெண்கள் மற்றும் 6 குழந்தைகள் உள்பட 41 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. எட்டு பேர் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நிலச்சரிவு ஏற்பட்டு நீண்ட நேரம் ஆகியுள்ளதால் இடிபாடுகளில் சிக்கியவர்கள் உயிருடன் இருப்பதற்கான நம்பிக்கை குறைந்து வருகிறது என்று அவர்கள் கூறினர். அங்கு பெய்து வரும் கனமழை காரணமாக மீட்புப் பணி சிரமமாக உள்ளது.

நிலச்சரிவில் 200 பேர் சிக்கியதாக மகாராஷ்டிர முதல்வர் பிருத்விராஜ் சவாண் தெரிவித்திருந்தார். அதன்படி இன்னும் 121 பேர் இடிபாடுகளுக்கிடையில் சிக்கிக் கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மற்றொரு மலேசிய விமானம்
# விபத்திலிருந்து தப்பியது




மலேசிய விமான சேவைக்கு சொந்தமான மற்றுமொரு விமானம் விபத்துக்குள்ளாவதில் இருந்து மயிரிழையில் தப்பிய நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.


அவுஸ்ரேலியாவின் எடிலைட் விமான நிலையத்தில் ஒரு ஓடுபாதையில் இரு விமானங்கள் நேருக்கு நேர் மோதவிருந்த ஆபத்து தவிர்க்கப்பட்டுள்ளது.

Tiger Airways விமான நிலையத்திற்கு சொந்தமான விமானம் ஒன்று எடிலைட் விமான நிலையத்தில் தரையிறங்க முற்படுகையில், மலேசிய விமான சேவைக்கு சொந்தமான ஆர்136 விமானம் புறப்படுவதற்காக ஓடுதளத்தில் பயணத்தை ஆரம்பித்திருந்தது.

இந்த நிலையில், ஒரே ஓடு தளத்தில் ஒரு விமானம் தரையிறங்க முற்படுகையில், மற்றுமொரு விமானம் நகர்வதை அறிந்த அதிகாரிகள் ஆர்136 விமானத்தின் விமானிக்கு அறிவுறுத்தல் விடுத்தனர். சிறப்பாக செயற்பட்ட ஆர்136 விமானத்தின் விமானி, பாதையை மாற்றி பாரிய விபத்து ஒன்று நேர்வதை தடுத்தார், அதேவேளை Tiger Airways விமானமும் பாதுகாப்பாக தரை யிறங்கியது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் ஆர்136 விமானத்தில் 167 பயணிகள் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுடனான உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சு



(புதுடில்லி)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இரு தரப்பு உறவ்களை வலுப்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக புதுடில்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் சுதர்சன் செனவிரத்ன நேற்று முன்தினம் புதுடில்லியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிடம் தனது நியமன சான்றுகளை கையளித்தார்.

இதன் பின்னர் நடைபெற்ற சுமுகமான சந்திப்பில், இலங்கை உயர்ஸ்தானிகர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வாழ்த்துக்களை இந்திய ஜனாதிபதிடம் தெரிவித்துக் கொண்டார்.

பரஸ்பர் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்ட இந்திய ஜனாதிபதி முகர்ஜி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான முந்தைய சந்திப்புகளை நினைவுகூர்ந்துள்ளார்.

இந்திய ஜனாதிபதியும் இலங்கை உயர்ஸ்தானிகர் பேராசிரியர் சுதர்சன் செனவிரத்னவும் இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று நெருக்கம், இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பான அர்ப்பணிப்புகள் குறித்து கருத்துக்களை பரிமாறிக் கொண்டதாக இலங்கை உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குளவி கொட்டியதால் 22 மாணவர்கள் பாதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நேற்றுக் காலை தேன் குளவிகள் தாக்கியதில் 22 மாணவர்கள் பாதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 8.00 மணியளவில் இடம்பெற்றது. பாடசாலைக் கட்டடத்தில் அமைந்திருந்த தேன்கூடு கலைந்ததில் அதிலிருந்து கிளம்பிய தேனீக்கள் பாடசாலைக்கு வந்து கொண்டிருந்த மாணவர்களை தாக்கியதில் 22 மாணவர்கள் பாதிக்கப்பட்டனர்.

இவர்க்ளில் 13 பேர் முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

# யாழ். மீனவர் சங்க பிரதிநிதிக்ளின் விசேட சந்திப்பு நேற்று

## வடக்கு முதல்வருக்கு அறிக்கை சமர்ப்பிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்து வடமாகாண முதலமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக யாழ். மாவட்ட மீனவர் பிரதிநிதிகளுடனா்ன சந்திப்பு ஒன்று நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

வடமாகாண சபை உறுப்பினர் சயந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அருந்தவநாதன், கூட்டுறவுத் திணைக்கள அபிவிருத்தி ஆணையாளர் கணேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த சுமார் நூறு வரையான கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச்சங்கப் பிரதிநிதிகள் தங்களை அறிமுகம் செய்துவைத்ததுடன் தமது பகுதிகளில் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கருத்துக்களையும் வெளியிட்டனர்.

கடற்றொழிலாளர் பிரதிநிதிகளால். முன்வைக்கப்பட்ட கடற்றொழிலாளர்களது பிரச்சினைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்கள் வடமாகாண சபை உறுப்பினர் சயந்தனினால் அறிக்கைப்படுத்தப்பட்டு வடமாகாண முதலமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படவிருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

# வருடாந்தப் பொதுக்கூட்டம்


(மன்னார்)

மன்னார் நவசக்தி இந்து இளைஞர் மன்ற வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை தலைவர் மு.டினேஸ்வரன் தலைமையில் கட்டுக்கரை ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய வளாகத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவு, புதிய அங்கத்தவர்களை இணைதல், சங்க வளர்ச்சி பற்றி ஆராய்வு, கூட்ட அறிக்கை, கணக்கறிக்கை சமர்ப்பித்தல் ஆகியன இடம்பெறவுள்ளன.

எனவே மேற்படி நவசக்தி இந்து இளைஞர் மன்ற பொதுக் கூட்டத்திற்கு அங்கத்தினர் தவறாது கலந்து கொள்ளும்படியும், மன்னார் மாவட்டத்தில் ஆர்வமுள்ள இந்து இளைஞர்களில் அங்கத்தினராக இணைந்து கொள்ள விரும்புவோர் தவறாது கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

# வெளியாகியது இறுவட்டு



(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்கான இந்து சமய வழிபாடு சம்பந்தமான "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" இறுவட்டு நல்லை ஆதீனத்தில் நேற்று நண்பகல் 12 மணியளவில் வெளியிட்டுவைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இறுவட்டை ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ வாசுதேவக் குருக்கள் வெளியிட்டு வைக்க, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து இறுவட்டு பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டது

# அரசியல் சாசன குறைபாடுகளை நிவர்த்திக்க தயாராகிறது ஆவணம்

## முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் சாசன குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையிலான உத்தேச வரைவுத் திட்ட ஆவணமொன்று தயாரிக்கப்பட்டு வருவதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சட்ட வல்லுனர்கள் உள்ளிட்ட 12 பேர் அடங்கிய குழுவொன்று இந்தப் பணிகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரரின் வழிகாட்டல்களுக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல் உள்ளிட்ட பல்வேறு பரிந்துரைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அத்துரலியே ரத்ன தேரர், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை ஒழிப்பது உள்ளிட்ட பல திருத்தங்கள் தொடர்பாக நிபுணர்கள் குழு கவனம் செலுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் கட்சியை தவிர ஏனைய சகல அரசியல் கட்சிகளும் இந்த ஆவணத்திற்கு ஆதரவு வழங்கியுள்ளதாகவும் ரத்ன தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வவுனியா வளாக மோதல்; 18 பேர் இனங்காணப்பட்டனர்

(வவுனியா)

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் அண்மையில் இடம்பெற்ற மோதல்களுடன் தொடர்புடைய 18 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வவுனியா வளாகத்தின் வியாபார முகாமைத்துவ பீடத்தின் மூன்றாம் வருட மாணவர்களே இந்த மோதல் சம்பவம் தொடர்பில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வளாக முதல்வர் கதிரபிள்ளை கந்தசாமி அருள்வேல் தெரிவித்தார்.

அடையாளம் காணப்பட்டுளள 18 மாணவர்கள் தொடர்பில் இரண்டு வாரங்களுக்குள் விசாரணைகளை மேற்கொண்டு அவர்கள் மீதான•குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் உரிய தண்டனை வழங்கப்படும் எனவும் வளாக முதல்வர் குறிப்பிட்டார்.

இதேவேளை வவுனியா வளாகத்தில் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற மா்ணவர் மோதலை அடுத்து வியாபார முகாமைத்துவ பீடத்தின் மூன்றாம் வருட மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

வகுப்புத்தடை விதிக்கப்பட்டிருந்த வியாபார முகாமைத்துவ பீடத்தின் மூன்றாம் வருட மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை எதிர்வரும் 4 ஆம் திகதி மீள ஆரம்பிக்கவுள்ளதாக வளாக முதல்வர் தெரிவித்தார்.

அதற்கமைய அடையாளம் காணப்பட்டுள்ள 18 பேர் தவிர்ந்த ஏனைய மாணவர்கள் தத்தமது விடுதிகளுக்கு சமூகமளிப்பதுடன், 4 ஆம் திகதி வகுப்புகளுக்கு வருகைதர வேண்டும் எனவும் வளாக முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## சிகிச்சைக்குச்...

சென்ற யுவதி காணாமற்போனமை தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (25)

## இலங்கையில்...

எபோல வைரஸ் முதலில் கொங்கோவில் 1976 இல் காணப்பட்டது. மரணத்தை தரவல்ல இந்நோய் தற்போது லைபீரியா, சியாராலியோன், கினா- பிஸே ஆகிய நாடுகளுக்கு பரவிவிட்டது.

இந்நாடுகளிலிருந்து சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வருவது மிகக்குறைவு என்பதால் இலங்கையில் இந்நோய் பரவும் வாய்ப்பு மிக மிகக் குறைவு என டாக்டர் பலிகவதன கூறினார்.

ஓர் எபோல நோயாளி காணப்படின் முதலில் அவரை அருகிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும். அங்கு அவர் தனிமைப்படுத்தப்பட வேண்டும்.

எபோல வைரஸ் வளியால் பரவுவதில்லை. இது இரத்தம் மற்றும் உடலுறவு மூலமே பரவுகின்றது. எனவே, எபோல நோயை தடுப்பது இலகுவானது என அவர் மேலும் தெரிவித்தார்.

## அரோகரா...

பிரதிநிதிகளும் புலம்பெயர்ந்து வாழும் மக்களும் கலந்து கொண்டனர்.

நேற்றைய தினம் ஆரம்பமாகியுள்ள வருடாந்த உற்சவத்தில் 10 ஆம் திகதி மஞ்சமும், 24 ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாளான 25 ஆம் திகதி தீர்த்த உற்சவம் நடைபெறவுள்ளது.

இதனிடையே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது ஆலோசனைக்கு அமைவாக யாழ். மாநகர சபையினால் சுற்றுவீதியில் கோயிலுக்கு வரும் பக்தர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டும் சுகாதார நடைமுறைகளை பாதுகாக்கும் வகையிலும் வெண்மணல் பரப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் திருவிழாக்காலங்களின் போது பக்தர்களின் நலன்களை கவனத்தில் கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பிலும் அமைச்சர் விசேட கவனம் செலுத்தியிருந்தார்.

கோயில் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வகையில் சுத்தம், சுகாதார நடைமுறைகளை மாநகர சபையூடாக முன்னெடுக்குமாறும் யாழ்.மாநகர முதல்வருக்கு அமைச்சர் விசேட பணிப்புரை விடுத்துள்ளார்.

## நிபந்தனையற்ற...

முதலமைச்சரிடமும் நிபந்தனையற்ற மன்னிப்பு கோருகிறோம் என்று அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவ இணையத்தளத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதா குறித்து அவதூறான கருத்துக்களை உள்ளடக்கிய கட்டுரை வெளியாகி இருந்தது. இதில் குறிப்பாக இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் அத்துமீறி தாக்கப்படுவது குறித்தும், கைது செய்யப்படுவது குறித்தும் இந்தியப் பிரதமருக்கு ஜெயலலிதா கடிதம் எழுதுவது குறித்து மிகவும் இழிவுபடுத்தும் விதமான விமர்சனங்கள் அந்தக் கட்டுரையின் முகப்பில் இருந்தன.

இதேவேளை, இந்தக் கட்டுரைக்கு தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் முக்கியஸ்தர்கள் பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், ஆதரவாளர்கள் பலரும் இந்தக் கட்டுரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் முதல்வர் ஜெயலலிதா குறித்த கட்டுரை இலங்கை இராணுவ இணையதளத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

# நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பு கோரிக்கையைக் கைவிடவில்லை

## என்கிறார் அமைச்சர் வாசு



நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்யுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை கைவிடப்படவில்லை என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை முற்று முழுதாக இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதே ஜனநாயக இடதுசாரி முன்னணியின் நிலைப்பாடாகும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் அதிகாரங்களை வரையறுத்தல் உள்ளிட்ட பல்வேறு யோசனைத் திட்டங்களை ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் முன்வைத்துள்ளார்.

இந்த யோசனைத் திட்டங்களை எங்களது கட்சியின் கொளகைக்குள் உள்வாங்கிக் கொள்ளத் தயார்.

இந்த இரண்டு யோசனைத் திட்டங்களையும் அமுல்படுத்தக் கூடிய வல்லமை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு மட்டுமே காணப்படுகின்றது.

வேறு மாற்று வழிகளின் ஊடாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்ய முடியாது.

கூட்டமைப்பு ஆட்சியில் கூட இந்த நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வது சவாலான விடயமாகும். பொதுவான ஓர் திட்டம் தொடர்பில் ஏனைய கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்த விரும்புகின்றோம்.

அத்துரலிய ரத்ன தேரருடன் பேச்சுவார்த்தை நடத்த கிட்டியமை மகிழ்ச்சி அளிக்கின்றது என வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிற்கும், அத்துரலிய ரத்ன தேரருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது வாசுதேவ இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

# அரசர் கேணி கிராமத்துக்கு நேற்று முதல் மின்சார இணைப்பு

(பளை)

பளை அரச கேணிக்கிராமத்துக்கு நேற்று முதல் மின்சார விநியோகத்துக்கான இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

சுமார் 95 குடும்பங்கள் வசிக்கும் இக்கிராமத்துக்கான மின்சார விநியோகம் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக மேற்கொள்ளப்படாமல் இருந்துள்ளது.

மின் இணைப்புக்கான இந்த நிகழ்வு நேற்று மாலை 3.30 மணியளவில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் உத்தியோகபூர்வமாக இந்த இணைப்பை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில், பச்சிளைப்பள்ளி பிரதேச செயலர் ஜெயராணி மற்றும் வடக்கின் வசந்தம் திட்டத்தினை மின் பொறியியலாளர்கள் மற்றும் தென்மராட்சி மின் அத்தியட்சகர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

அத்துடன் இக்கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பொது நோக்கு மண்டபம் ஒன்றையும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் திறந்து வைத்தார்.

மேலும் தென்மராட்சிப் பகுதி மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான விசேட சந்திப்பு ஒன்றிலும் நாடாளுமன்ற உறுப்பினர் கலந்து கொண்டார். எழுதுமட்டுவாள் சந்தைக் கட்டடத்தில் நேற்று மாலை 5.30 மணியளவில் இச்சந்திப்பு இடம்பெற்றது. (37)

# 'மாறுதடம்' இன்று யாழ்.நகரில்

(யாழ்ப்பாணம்)

'மாறுதடம்' என்ற திரைப்படம் அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க இன்று பிற்பகல் 2.30 மணிக்கும், மாலை 6.30 மணிக்கும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் திரையிட்டுக் காண்பிக்கப்படவுள்ளது. எனவே ரசிகர்கள் அனைவரையும் வீரசிங்க மண்டபத்திற்கு வருகை தந்து எம்மவர் படைப்பான 'மாறுதடம்' திரைப்படத்திற்கு தங்களின் தார்மீக ஆதரவை வழங்குங்கள் என்று ஏற்பாட்டாளர்கள் அன்புடன் அழைக்கின்றனர்.

ஏற்கனவே நுழைவுச் சீட்டைப் பெற்றுக்கொண்டவர்கள் அதனை இன்று பயன்படுத்தலாம் என்பதையும் அறிவித்துள்ளனர்.

# வவுனியா வந்த இ.போ.ச. பேருந்து மீது அநுராதபுரத்தில் தாக்குதல்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி வருகை தந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பயணிகள் பஸ் மீது நேற்றிரவு 10.00 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா டிப்போவுக்கு சொந்தமான பயணிகள் பஸ் மீதே புத்தளம் - அநுராதபுரம் வீதியின் 4ஆவது மைல்கல் பகுதியில் வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதல் மேற்கொண்ட நபர்கள் தப்பிச் சென்றுள்ளதுடன் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மனித கடத்தல்காரர்களுக்கு தென்னிந்தியா களமாகக் கூடாது

## அவுஸ்ரேலியா தெரிவிப்பு



அவுஸ்ரேலியாவுக்கு மனித கடத்தல்களை மேற்கொள்வோருக்கு தென்னிந்தியா மாற்றுவழியாக அமைந்து விடக்கூடாது என்று அவுஸ்ரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கான அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகர் பெட்ரிக் சக்லிங் இதனை தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய மனித கடத்தல் சட்டங்களை கடுமையாக்கிய பின்னர் இலங்கையில் இருந்து குறைந்தளவான படகுகளே அவுஸ்ரேலியாவுக்கு சட்டரீதியற்ற வகையில் சென்றுள்ளன.

இந்த நிலையிலேயே மாற்றீடாக தென்னிந்தியாவைக் கடத்தல்காரர்கள் பயன்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 157 அகதிகளில் நீண்டகாலமாக இந்தியாவில் தங்கியிருந்த அகதிகளை மீண்டும் பொறுப்பேற்க இந்தியா இணங்கியுள்ளதாகவும் உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார்.




இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஆகஸ்ட் 02 ஆம் தீகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.